24 மணி நேரமும் உடனுக்குடன் செய்திகளை அறிந்துகொள்ள
NEWUTHAYAN.COM

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

பக்கங்கள்: 28
விலை: 30

சுடர் 34 கதிர் 37 மார்கழி 17ஆம் நாள் புதன்கிழமை 02 ஜனவரி 2019 வள்ளுவர் ஆண்டு 2049

# ஐ.தே.முன்னணிக்கு ரணில் வாய்ப்பூட்டு



கொழும்பு, ஜனவரி 2

புதிய அரசமைப்பின் குழப்பங்களுக்குரிய - சர்சைக்குரிய வார்த்தைகளைப் பற்றிப் பேசவேண்டாம் என்று தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்களுக்கு அறிவுறுத்தியுள்ளார் என்று அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார்.

» 07



## வடக்கு ஆளுநர் இடமாற்றத்துக்கு பல தரப்புக்களும் கடும் எதிர்ப்பு

### கிளிநொச்சியில் நேற்றுப் போராட்டம்

கிளிநொச்சி, ஜன. 2

வடக்கு மாகாண ஆளுநர் ரெஜினோல்ட் குரேயை இடமாற்றம் செய்யவேண்டாம் எனக்

» 06

50 நாள்கள்

## அரசியல் சூழ்ச்சியால் ஏற்பட்ட இழப்புக்கள் கணக்கிட முடியாதவை

### கூறுகிறார் ரவி கருணாநாயக்க

கொழும்பு, ஜன. 2

50 நாள்கள் சூழ்ச்சி அரசால் ஏற்படுத்தப்பட்ட இழப்புக்களை கணக்கெடுக்க முடியாதுள்ளது. இந்தச் சுமைகள் அனைத்தையும் பொது மக்கள்தான்

» 06

## தொடருந்தில் உதவிப் பொருள்கள் நிறையவரும் என்ற எதிர்பார்ப்பில் சென்ற அதிகாரிகளுக்கும், எம்.பிக்கும் ஏமாற்றம்



யாழ்ப்பாணம், ஜன. 2

வன்னியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தொடருந்தில் உதவிப் பொருள்கள் நேற்று எடுத்துவரப்பட்டன. அதிகளவி

» 06

## மருத்துவமனைகளில் ஒரு மாதத்துக்குள் மருந்துத்தட்டுப்பாடு முழுமையாக நீங்கும்

### ராஜித திட்டவட்டம்

கொழும்பு, ஜன. 2

அரசியல் சூழ்ச்சி மூலம் பதவியில் அமர்ந்த மகிந்த ராஜபக்ச தனது 53 நாள்கள் ஆட்சியில் மருந்துகளை இறக்குமதி செய்யவில்லை. மருத்துவமனைகளில் மருந்துத் தட்டுப்பாடு

» 06

## அமைச்சர்கள் அதிகாரத்தில் கை வைக்கும் மைத்திரிபால

### ஐ.தே.கவுக்குப் புதுவித நெருக்கடி

கொழும்பு, ஜன.2

புதிய அமைச்சர்களால் அரச நிறுவனங்களின் தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளவர்களின் தகுதி.

» 06

## பிரபாகரன் சீரழித்ததைவிட மோசமாக தமிழர்களைச் சீரழிக்கிறார் சுமந்திரன்

### கூறுகிறது மகிந்த அணி

கொழும்பு, ஜன. 2

30 ஆண்டுகள் போர் நடத்தி தமிழ் மக்களை பிரபாகரன் சீரழித்ததை விடவும் மோசமான நிலைமையை ஏற்படுத்துவதற்கு நாடாளுமன்ற உறுப்பினர்

» 06

## இளைஞர்கள் மூன்று பேர் வவுனியாவில் நேற்றுக் கைது

### வாள்கள் வைத்திருந்தார்கள் என்கின்றனர் பொலிஸார்

வவுனியா, ஜன. 2

வவுனியாவில் முச்சக்கர வண்டியில் பயணித்த மூன்று இளைஞர்களைக் கைது செய்துள்ளதாகத் தெரிவித்த பொலிஸார் அவர்களிடமிருந்து வாள்கள் மற்றும் கத்திகளை மீட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பில் பொலிஸார் மேலும் தெரி

» 07

## இந்த ஆண்டாவது தீர்வைத் தாருங்கள்

### காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் மன்றாட்டமாகக் கோரிக்கை

வவுனியா, ஜன. 2

பிறந்துள்ள புத்தாண்டிலாவது பன்னாட்டுச் சமூகம் எம் மீது கரிசனை கொண்டு எங்கள் பிரச்சினைக்குத் தீர்வைக் காணவேண்டும். இவ்

» 07

## 23 உந்துருளிகளில் 50 இளைஞர்கள்: தாக்குதலுக்கு வந்தபோது மடக்கிப்பிடிப்பு

### கொக்குவில் காந்திஜி சனசமூக நிலைய பகுதி மக்கள் துணிகரம்



» 06

## அலோசியஸுக்கு பிணை அனுமதி

கொழும்பு, ஜன.2

மத்திய வங்கிப் பிணை முறி மோசடி தொடர்பாகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த பேர்பச்சுவல் ட்ரசரிஸ் நிறுவன உரிமையாளர் அர்ஜுன் அலோசியஸ் மற்றும் கசுன் பலிசேன ஆகியோருக்கு நேற்றுப் பிணை வழங்கப்பட்டது.

» 07

## இராணுவ அதிகாரிகளுக்கு பதவி உயர்வு

கொழும்பு, ஜன.2

புதுவருடத்தை முன்னிட்டு மூத்த இராணுவ அதிகாரிகள் 67 பேருக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன என்றும், புதுவருடப் பரிசில்கள் வழங்கப்பட்டுள்ளன என்

» 07

## இனவாதத்தைத் தூண்டவே கூட்டமைப்புடன் ஐ.தே.மு ஒப்பந்தம் என்று பொய்ப் பரப்புரை

### மகிந்த அணியைச் சாடுகிறார் ரணதுங்க

கொழும்பு, ஜன. 2

நாட்டில் இனவாதத்தை மீண்டும் தலைதூக்கச் செய்வதற்கே தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கும் ஐக்கிய தேசிய முன்னணிக்கும் இடையில் ஒப்பந்தம் இருப்பதாகப் பரப்புரை முன்னெடுக்கப்

» 06



## வாரநாள் விடுமுறை விரும்பிகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்திய 2019

கொழும்பு, ஜன. 2

மலர்ந்திருக்கும் 2019 ஆம் ஆண்டு வாரநாள் விடுமுறை விரும்பிகளுக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது. வாரநாள் விடுமுறைகள் குறைந்த ஆண்டாக இந்த ஆண்டு காணப்படுவதே அதற்குக் காரணம்.

இந்த ஆண்டு 23 பொது விடுமுறை தினங்களில் ஒன்பது விடுமுறைகள் வார இறுதி சனி ஞாயிறு நாள்களில் வருகின்றன. விடுமுறை தினங்களின் எண்ணிக்கை முன்னெப்போதும் இல்லாத அளவு குறைந்துள்ளது. இந்தவருடம் சித்திரைப் புத்தாண்டு சனி, ஞாயிறு தினங்களில் வருவதுடன் வெசாக், பௌர்ணமி விடுமுறையும் சனி, ஞாயிறு தினங்களில் வருகின்றன.

இவ்வாறு வார இறுதித் தினங்களில் வரும் சிறப்புத் தினங்கள் 15 ஆகக் காணப்படுகின்றன. பௌர்ணமி தினங்கள், தீபாவளி பண்டிகை, நபிகள் நாயகத்தின் பிறந்த நாள் உள்ளிட்ட சில விடுமுறைகளும் ஞாயிறு தினங்களில் அமைந்துள்ளன. 20 வர்த்தக விடுமுறைகளில் 8 விடுமுறைகள் சனி மற்றும் ஞாயிறு தினங்களில் அமைந்துள்ளன.

கடந்த ஆண்டில் 26 பொது விடுமுறை நாள்களில் நான்கு நாள்கள் மட்டுமே வார இறுதி நாள்களில் அமைந்திருந்தன. (த)

## வித்தியாசமாக ஆரம்பித்த சபையின் புதுவருடப் பணி

கொழும்பு, ஜன. 2

நாடு தழுவிய ரீதியில் திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்கள் போன்றவற்றில் புதுவருட முதலாம் நாள் பணிகள் சத்தியப் பிரமாண நிகழ்வுடன் ஆரம்பிக்கப்பட்டன. அட்டாளைச்சேனை பிரதேச சபையில் மட்டும் வித்தியாசமான நிகழ்வொன்று இடம்பெற்றுள்ளது.

அட்டாளைச்சேனை பிரதேச சபை செயலரின் இடமாற்றத்தைக் கண்டித்து அட்டாளைச்சேனை பிரதேச சபையின் ஆளும் தரப்பு ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர்கள் நேற்று பிரதேச சபை முன்பாக கவனவீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு இந்த வித்தியாசத்தைக் காட்டினர்.

அட்டாளைச்சேனை பிரதேச சபையின் செயலாளராகச் செயற்பட்டு வந்த எம்.ஐ.எம்.பாயிஸ் நிந்தவூர் பிரதேச சபைக்குப் பதில் செயலராக நேற்றுத் தொடக்கம் நடைமுறைக்கு வரும் வகையில் நியமிக் கப்பட்டார். கிழக்கு மாகாணப் பிரதித் தலைமைச் செயலாளர் எம்.டபிள்யு.ஜி.திஸாநாயக்க ஒப்பமிட்டு இடமாற்றத்துக்கான கடிதத்தை அனுப்பியிருந்தார்.

இந்த இடமாற்றத்தைக் கண்டித்தே மேற்படி கவனவீர்ப்புப் போராட்டம் இடம்பெற்றது. கவனவீர்ப்புப் போராட்டத்தில் கலந்து கொண்ட பிரதேச சபை உறுப்பினர்கள் பல்வேறு வாசகங்கள் அடங்கிய பதாதைகளை ஏந்தியவாறு இடமாற்றத்தைக் கண்டித்துப் பல்வேறு கோசங்கள் எழுப்பியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பிரதேச சபையின் முதன்மை நுழைவாயிலை மூடி போராட்டக்காரர்கள் செயற்பட்டதால் பிரதேச சபையின் அன்றாட நடவடிக்கைகள் தடைப்பட்டன. பிரதேச சபை அலுவலர்கள் தமது கடமைகளை மேற்கொள்வதில் சிக்கல் நிலை தோன்றியதால் அலுவலகம் வெறிச்சோடிக்கிடந்தது.

'செயலர் செய்த குற்றம் என்ன?' வேண்டாம் வேண்டாம் அரசியல் பழிவாங்கல் வேண்டாம்' வேண்டும் வேண்டும் இந்த செயலரே வேண்டும், குழப்பாதே குழப்பாதே சீரான நிர்வாகத்தைக் குழப்பாதே' போன்ற வாசகங்கள் அடங்கிய பதாதைகளை சபை உறுப்பினர்கள் ஏந்தியிருந்தனர்.

அந்த இடத்துக்குச் சென்ற தீகவாபி ரஜமகா விகாரை விகாராதிபதி போதிவல சிறிசந்தானந்த அவர்களுக்கு ஆதரவளித்து போராட்டத்தில் கலந்து கொண்டார்.

அட்டாளைச்சேனை பிரதேச சபைக்கு இடமாற்றம் பெற்று வரும் புதிய செயலர் அடுத்த மாதம் தனது சேவையிலிருந்து ஓய்வு பெற இருப்பதால் இந்த இடமாற்ற நடவடிக்கை முற்றுமுழுதாக அரசியல் பழிவாங்கல் செயற்பாடென்றும் இந்த இடமாற்றத்தை உடனடியாக இரத்துச் செய்ய வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டக்காரர்கள் கோரினர். (த)

### எதிர்வரும் ஜூன் மாதம் நடைபெறவுள்ள

# யாழ்.பல்கலை வணிகபீட ஆய்வரங்குக்கு ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கலாம்

### துணைவேந்தர் விக்னேஸ்வரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முகாமைத்துவக் கற்கைகள் வணிக பீடத்தின் 2019ஆம் ஆண்டுக்கான ஆய்வரங்கு எதிர்வரும் ஜூன் மாதம் இடம் பெறவுள்ளது. கட்டுரையாளர்கள் தத்தமது ஆய்வுக் கட்டுரைகளை எதிர்வரும் பெப்ரவரி 20ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்க வேண்டும் என்று பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர் இ.விக்னேஸ்வரன் தெரிவித்தார்.



ஆய்வரங்கு தொடர்பான ஊடகவியலாளர்கள் மாநாடு யாழ்ப்பாணப் பல்கலைக் கழக மாநாட்டு மண்டபத்தில் நேற்று இடம்பெற்றது. அதில் துணைவேந்தர் மேலும் தெரிவித்ததாவது:

சுற்றுலா, விருந்தோம்பல் நிகழ்வு, முகாமைத்துவமும் தொழில்நுட்பவியலும், புத்தாக்க முகாமைத்துவமும், தந்திரோபாய முகாமைத்துவமும், பிராந்திய மற்றும் சமூகத் திட்டமிடல் செயற்றிட்ட முகாமைத்துவம், செயற்பாட்டு முகாமைத்துவம், சந்தைப்படுத்தலும் விநியோகச் சங்கிலி முகாமைத்துவமும், நிறுவன நடத்தை, அறிவு முகாமைத்துவம், பன்னாட்டு வர்த்தகம், மனிதப் பண்பியலும் சமூகவிஞ்ஞானமும், கைத்தொழில் உறவுகள், மனிதவள முகாமைத்துவம், சுகாதாரமும் பொதுத்துறை முகாமைத்துவமும், முயற்சியாண்மையும் சிறு வணிக முகாமைத்துவமும், கல்வி, பொருளியலும் சமூகக் கொள்கையும், கலாசாரமும் நிலை பேண்தகைமையும், சமூகப் பொறுப்பும் வணிக ஒழுக்கமும், வணிகமும் சட்டச் சூழலும் ஆகிய தலைப்புக்களில் ஆய்வுக் கட்டுரைகளைச் சமர்ப்பிக்கலாம்.

சமகால முகாமைத்துவத்தின் மீதான இந்தப் பன்னாட்டு ஆய்வரங்கு அறிவை மெருகூட்டவும், கல்வியாளர்களுடனும், தொழில்சார் வல்லுநர்களுடனும் நட்புறவை ஏற்படுத்தவும் உதவி செய்கிறது. அந்த வகையில் இந்த ஆண்டு 'சிறப்பான எதிர்காலத்தை நோக்கி மனித மூலதனத்தை மாற்றியமைத்தல்' என்ற தொனிப்பொருளில் ஆய்வரங்கு இடம் பெறவுள்ளது.

ஜூன் மாதம் 4ஆம் 5ஆம் திகதிகளில் ஆய்வரங்கு இடம்பெறும். மேலதிக விவரங்களுக்கு வணிக பீடாதிபதி பேராசிரியர் தி.வேல்நம்பியுடன் (0947 7744 8352) தொடர்புகொள்ளமுடியும். எதிர்வரும் ஏப்ரல் 15ஆம் திகதி தொடக்கம் ஆய்வுக்கட்டுரை ஏற்பறிவிப்பு வழங்கப்படும். ஆய்வுச்சுருக்கத்தை எதிர்வரும் 5ஆம் திகதிக்குள் சமர்ப்பிக்கவேண்டும். ஆய்வரங்கு ஒழுங்கமைப்பாளர் தே.சிவாஸ்கரனுடனும் (0947 7722 2500) தொடர்புகொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (த.21)

## சட்டவிரோத துப்பாக்கிகளை கைப்பற்ற சிறப்பு நடவடிக்கை

### பொலிஸ்மா அதிபரின் உத்தரவில் 3 மாதங்கள் திட்டம் நேற்று ஆரம்பம்

கொழும்பு, ஜன. 2

நாடுமுழுவதுமுள்ள சட்டவிரோத துப்பாக்கிகளைக் கைப்பற்றுவதற்காகச் சிறப்பு நடவடிக்கை ஒன்று இடம்பெறவுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ருவன் குணசேகர தெரிவித்துள்ளார்.

பொலிஸ் மா அதிபர் பூஜித் ஜயசுந்தரவின் பணிப்புரைக்கமைய புதுவருடமான நேற்றுத் தொடக்கம் மூன்று மாதங்களுக்கு இந்த நடவடிக்கை தொடரவுள்ளது என்று பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

தெற்கில் சில நாள்களில் மட்டும் இடம்பெற்ற இருவேறு துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்களில் 5 பேர் கொல்லப்பட்டுள்ளனர். அதற்கு முன்னரும் பல இடங்களில் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன. உயிரிழப்புகளும் ஏற்பட்டுள்ளன. பலர் காயமடைந்துமுள்ளனர். (த)

## ஆடை, பிளாஸ்டிக் மற்றும் அலுமினிய புத்தாண்டு விற்பனை 35 வீதம் வீழ்ச்சி!

### இலங்கை சிறு உற்பத்தியாளர்கள் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 2

பண்டிகைக் காலத்தையொட்டி முன்னெடுக்கப்படும் ஆடை விற்பனை கடந்த வருடத்தைவிட 35 சதவீதத்தால் குறைவடைந்துள்ளதாக அகில இலங்கை சிறு உற்பத்தியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த வருடத்துடன் ஒப்பிடுகையில் பிளாஸ்டிக் மற்றும் அலுமினியம் சார்ந்த உற்பத்திப் பொருள்களின் விற்பனையானது 30 -32 சதவீதமாகக் குறைவடைந் துள்ளது என்றும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதனால் சிறு உற்பத்தியாளர்கள் பெரு நட்டத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்றும் அகில இலங்கை சிறு உற்பத்தியாளர்கள் சங்கத்தின் தலைவர் நிருக்ஸ நந்தகுமார தெரிவித்துள்ளார்.

வடக்கில் சக உறவுகள் வெள்ள இடர் காரணமாகப் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்த முறை புத்தாண்டு விற்பனைகள் வீழ்ச்சியடைந்துள்ளனஎன்றுமுன்னர் தெரிவிக்கப்பட்டிருந்தது. (த)

## சீன- இலங்கை எதிர்கால உறவை கூட்டாகக் கட்டியமைக்க வேண்டும்!

### சீனத் தூதுவர் வாழ்த்துச் செய்தியில் தெரிவிப்பு

கொழும்பு, ஜன. 2

சீன -இலங்கை உறவுக்கான எதிர்காலத்தைக் கூட்டாகக் கட்டியமைக்க வேண்டும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவர் செங் சூ ஆன் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார். குறித்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

கடந்த ஓராண்டில் சீன - இலங்கை உறவு நிதானமாக வளர்ந்து, பல சாதனைகளைப் பெற்றுள்ளது. இரு நாடுகளின் பல்வேறு நிலையான பரிமாற்றங்கள் இடம் பெறுகின்றன. ஒன்றுக்கு ஒன்று அரசியல் நம்பிக்கை மேலும் ஆழமாக்கப்பட்டு வருகின்றது.

இரு நாடுகளுக்கிடையில் மனிதத்தொடர்பும், பண்பாட்டுப் பரிமாற்றமும் மேலும் நெருக்கமாக மாறியுள்ளன.

2018ஆம் ஆண்டு இலங்கையில் வெள்ள மற்றும் வறட்சி பேரழிவு அதிகமாக நிகழ்ந்தது. இலங்கைக்குச் சீனா 10 இலட்சம் அமெரிக்க டாலர் நிதியுதவியை வழங்கியது.

இலங்கை தேசிய சிறுநீரக நோய் மருத்துவமனைத் திட்டப்பணியை சீனா தடையின்றித் தொடங்கியது. இலங்கை இராணுவக்கழகக் கட்டடம் கட்டி முடித்துக் கொள்ளப்பட்டு, இலங்கையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசுடன் சேர்ந்து சீனா கலந்தாலோசனை செய்து 2018-2019ஆம் ஆண்டுக்கான சீன - இலங்கை பொருளாதார தொழில்நுட்ப ஒத்துழைப்பு உடன்படிக்கைகளை நடைமுறைப்படுத்தும்.

புத்தாண்டில் புதிய தோற்றம் ஏற்படும். புதிய வளர்ச்சிக் காலகட்டத்தைச் சீனாவும் இலங்கையும் வரவேற்கின்றன.

சொந்த நாட்டை முயற்சியுடன் உருவாக்கிசீன-இலங்கை உறவுக்கான எதிர்காலத்தைக் கூட்டாகக் கட்டியமைக்க வேண்டும். இலங்கைக்கான நம்பகத்தன்மையுள்ள அண்டை நாடாகவும் நல்ல நண்பராகவும் சீரான கூட்டாளியாகவும் சீனா எப்போதும் விளங்கு கிறது. இலங்கையில் அமைதி, நிதானம், செழுமையான வளர்ச்சிகளை நனவாக்கலாம். இலங்கை மக்கள் இனிமையாக வாழ்க, சீன இலங்கை நட்புறவு வாழ்க' என்று அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த)

# தாய்சேய் நலன்களைக் கவனிப்பதில் கிழக்கு மாகாணம் பின்தங்கியுள்ளது

## மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிக்கிறார்

மட்டக்களப்பு, ஜன. 2

தாய்சேய் நலனைக் கவனிப்பதில் கிழக்கு மாகாணம் பின்தங்கியநிலையில் உள்ளதாகக்கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் எஸ். அருள்குமரன் தெரிவித்தார்.



மட்டக்களப்பு மகிழடித்தீவு மருத்துவமனையில் கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை நடைபெற்றசெயற்றிறன்விருதுவழங்கும்நிகழ்வில் உரையாற்றுகையில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

"கிழக்கு மாகாணத்தில் 6ஆயிரத்து 300 சுகாதார ஊழியர்கள் உள்ளனர். இவர்களைக் கொண்டு 17 இலட்சம் மக்களுக்குச் சேவையாற்றுகின்றோம். மக்களுக்கு இலவசசேவைகளைவழங்குவதற்காக மருத்துவமனைகள் பல அமைக்கப்பட்டுள்ளன. அவற்றுள்ளும் மகிழடித்தீவு மருத்துவமனை சிறந்தசேவை ஆற்றிவருகின்றது. மாகாணத்தால் வழங்கப்பட்ட மருத்துவப் பரிசோதனை உபகரணங்களைக்கொண்டுசிறந்தசேவைஆற்றிவருகின்றதனை இங்குள்ள புள்ளி விவரங்கள் சுட்டிநிற்கின்றன.

கிழக்குமாகாணம்தாய்சேய்நலனில்ஒப்பீட்டளவில் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. மட்டக்களப்பு மாவட்டமும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது.

கடந்த ஆறு மாதங்களாகக்கிழக்கு மாகாணத்தில்சிறந்தசேவைஆற்றிவருகின்றோம். சிறப்பான சேவை வழங்குவதற்கு அனைவரும் குழுவாக இணைந்து செயற்படுகின்றோம். இதன்பயனாக முரண்பாடுகளைக் களைந்திருக்கின்றோம்.

மகிழடித்தீவு மருத்துவமனை அமைந்துள்ள படுவான்கரைப் பகுதி பாரம்பரியமானது. சிறந்த மனித வளங்கள் காணப்படுகின்றன. இவற்றைப்பறைசாற்றுவனவாகமகிழடித்தீவு மருத்துவமனைச் செயற்பாடுகள் உள்ளன" - என்றார். (த)

மாணிக்கக் கல் அகழ்வால்

# காசல்ரி நீர்த்தேக்கத்தில் மண் குவிகிறது

## உரிய நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

நோர்வூட் போற்றி தோட்டப் பகுதியில் சட்டவிரோதமாக இடம்பெறும் மாணிக்கக்கல்அகழ்வால்காசல்ரீநீர்த்தேக்கத்துக்கானமண்அள்ளுண்டுசெல்கிறதுஎன்று அங்குள்ள மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.



காசல் நீர்த் தேக்கத்துக்குத் தண்ணீர் ஏந்திச்செல்லும்கேசல்கமுவஓயாவுக்கு அருகாமையில் பெருமளவில் சட்டவிரோதமாகமாணிக்கக்கல்அகழ்வுஇடம் பெறுகிறது. வெளியிடங்களைச் சேர்ந்தவர்கள் இதில் ஈடுபட்டு வருகின்றனர் என்றுஅங்குள்ளவர்கள்கூறுகின்றனர். காசல்நீர்த் தேக்கத்துக்கு மண் அள்ளுண்டு செல்வதால் மின்சாரஉற்பத்திகடுமையாகப் பாதிக்கப்படுகிறது. அதனால் காசல் ரீ நீர்தேக்கத்தின்ஆழம்குறைவடைந்து வருகிறதுஎன்றும்தெரிவிக்கப்படுகிறது. அத்தகைய செயற்பாடுகளால்தேயிலை மரங்களும்வீணடிக்கப்படுகின்றன. இவற்றுக்குஉரிய நடவடிக்கைஎடுக்கவேண்டும் என்று அங்குள்ள மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த)

# மட்டக்களப்பில் கடந்த வருடம் 4,751 பேருக்கு டெங்குத் தொற்று

மட்டக்களப்பு, ஜன. 2

மட்டக்களப்புமாவட்டத்தில்நேற்றுமுன்தினம் நிறைவடைந்த 2018ஆம் ஆண்டில் 4ஆயிரத்து 751பேர்டெங்குக்காய்ச்சலால்பாதிக்கப்பட்டுள்ளனர் என்று மட்டக்களப்புப் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் கிறேஸ் நவரட்ணராஜா தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மட்டக்களப்பு மாவட்டத்தில் டெங்கு அபாயம் குறித்துப் பரவலாக, தொடர்ச்சியாக விழிப்புணர்வு நடவடிக்கைகள் பல மட்டங்களிலும் இடம்பெற்றுவருகின்றன. இந்த வருடமும் விழிப்புணர்வுகள் தொடரும்.

ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய முதற் காலாண்டில்பருவமழைபெய்யக்கூடும்என்பதால் டெங்கு நுளம்புகளின் பெருக்கத்துக்கும் வாய்ப்புள்ளது.

இது குறித்து மக்கள் விழிப்பாக இருந்து தங்களது வீட்டையும் சூழலையும் நாட்டையும் டெங்குத்தாக்கத்திலிருந்து பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.

கிராம மட்ட சங்கங்களின், கிராம மட்ட அமைப்புக்களின்பிரதிநிதிகள், பொதுச்சுகாதாரபரிசோதகர்கள், கிராம அலுவலர்கள், அபிவிருத்தி அலுவலர்கள், பொலிஸார் ஆகியோரின் உதவியுடன் வீடுகள், திணைக்களங்கள் என்பனவற்றில் கிரமமாக வாராந்தம், மாதாந்தம் என்று டெங்கு உருவாகக் கூடிய சாத்தியமுள்ளதாஎன்பதுபற்றிப்பரிசீலனைசெய்யவேண்டும்.

மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து டெங்கு நுளம்புத்தாக்கம்இல்லாமலாக்கப்படவேண்டுமாயின் நகர மக்கள், கிராம மக்கள் அலுவலர்கள், தொழிலாளர்கள்என்றுஅனைவரினதும் ஒத்துழைப்புத் தேவை" - என்றார். (த)


காணி விற்பனைக்கு
யாழ். ஸ்ரான்லி கல்லூரி வீதியில்
1 பரப்பும் 1 குளி
விஸ்தீரணமுடைய காணி
விற்பனைக்குண்டு.
076 675 7518
(CS/20835) (11,17)

கலை, வர்த்தகம், தொழில் நுட்பம்
DMI JAFFNA
ஜனவரி–5 காலை – 9
DAY CLASS

வர்த்தகப் பிரிவு
DMI JAFFNA
ஜனவரி–5
A/L 2k21
கணக்கீடு D.Sam
பொருளியல் S.S. சிறி
வணிகக்கல்வி T.S. ரிஷி
காலை – 9

கலை, வர்த்தகம், தொழில் நுட்பம்
DMI JAFFNA
ஜனவரி–5 காலை – 9
A/L 2k21

STUDY ABROAD
நீங்கள் விரும்பும் நாட்டில்
உங்கள் உயர்கல்வியினை தொடர
6ஆவது வருடத்தில் காலடி எடுத்து வைக்கும்
WINSTAR உடன் இணையுங்கள்.
UK | CANADA | AUSTRALIA | USA | SWISS | NEW ZEALAND
ஆகக் குறைந்த தகைமை O/L அனைத்து பாடங்களில் சித்தி.
வயதெல்லை 16 - 25
MANAGEMENT | IT | NURSING | ENGINEERING | FASHION DESIGNING | BIO MEDICAL SCIENCE | COMPUTER SCIENCE மேலும் 500 இற்கும் மேற்பட்ட பாட தெரிவுகள்.
200 இற்கும் மேற்பட்ட பல்கலைக்கழக / கல்லூரி தெரிவுகள்
எழுத்து மூலமான உத்தரவாதம்
100 % விசா உத்தரவாதம்
May 2019 / SEP 2019 INTAKES
IELTS 6.5 புள்ளிகள் எடுப்பதற்கான சிறந்த பயிற்சிகள்
WINSTAR CONSULTANTS PVT LTD
45, VEMBADI STREET, JAFFNA.
www.winstarjaffna.com
021 300 4641
(C 8939/15/17)

SPOKEN ENGLISH
WITH DIPLOMA CERTIFICATE
O/L, A/L எழுதியோர், இளைஞர் யுவதிகள், மாணவர்களுக்கான
3 மாத உரையாடல் மூலமான ஆங்கிலப்பயிற்சிநெறி.
ஆங்கிலத்தில் ஒரெழுத்துத்தெரியாதவர்களும் தமிழ்போல சரளமாக மூன்றே மாதங்களில் ஆங்கிலம்பேசமுடியும்.
சனி, ஞாயிறு பிரிவுகள் ஆரம்பம் - 05.01.2019 சனி
1. காலை : 08-10
2. காலை : 10-12
3.மதியம் : 01-03
4.மாலை : 03-05
ஒரு பிரிவில் 20 பேர் மட்டும்.
இவ்வாரம் பதிவுசெய்வோருக்கு 16 பாடப்புத்தகங்கள் மற்றும் சான்றிதழ் முற்றிலும் இலவசம்.
3 மாதங்களில் சரளமாக ஆங்கிலம் பேசமுடியுமென நிரூபிக்கப்பட்ட பாடநெறி
SAAMSON Experts in English Training
403, வெலிங்டன் சந்தி, பெருமாள் கோயிலடி, யாழ்நகர்.
077 621 4567 222 4282

30 வருட போருக்கு

# இரு சாராருக்கும் மொழி தெரியாததே காரணம்

## வடக்கு மாகாண ஆளுநர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஜன.2

30 வருட போருக்கு இரு சாராருக்கும் மொழி தெரியாததே முக்கிய காரணம். தென்பகுதில் உள்ள சிங்கள மக்களுக்கு தமிழ்மொழி தெரியாது.தமிழ் பேசும் மாவட்டங்களில் உள்ள மக்களுக்கு சிங்கள மொழி தெரியாது.இதனாலேயே பல்வேறு பிரச்சினைகள் உருவாகவும் தீர்க்க முடியாத நிலையும் ஏற்பட்டது.இந்த நிலையில் மாகாணக் கல்வி அமைச்சினால் தமிழ் பேசும் அரச அலுவலர்களுக்கு ஆரம்பநிலை சிங்கள அறிவினை ஊட்டுவதற்காக எடுக்கப்பட்ட முயற்சி பாராட்டத்தக்கது இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் மும்மொழக் கற்கை நிலையத்தினரால் அரச அலுவலகங்களில் கடமையாற்றும் அலுவலர்களுக்கு நடத்திய 50 மணிநேர சிங்களப்பயிற்சி வகுப்புக்களில் கலந்து கொண்டவர்களுக்குச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

நிகழ்வில் முதன்மை விருந்தினராக கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

"மொழிக்கல்வி பாடசாலைகளில் ஊட்டுவது சிறந்ததென கருதிய போதும் இங்குள்ள பாடசாலைகளில் சிங்கள மொழியிலான ஆசிரியர்கள் இல்லை. இதே போன்று சிங்கள மொழிப் பாடசாலைகளில் தமிழ் மொழி போதிக்கும் ஆசிரியர்கள் இல்லை. இதனைக் கருத்திற் கொண்டு முதற்கட்டமாக சிங்கள மொழி தெரிந்த வளவாளர்களினால் ஆரம்பநிலை அரச அலுவலர்களுக்கு பயிற்சிகள் வழங்கப்பட்டன.

அவ்வாறு தென்பகுதியில் உள்ள அரச அலுவலர்களுக்குத் தமிழ் மொழிப் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.நான் தென்பகுதியைச் சேர்ந்தவன் என்பதால் வடக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டதும் தமிழ்மொழியை பயின்றதுடன் இங்குள்ள அலுவலர்கள் பொது மக்கள் ஆகியோருடன் தமிழில் கதைக்கிறேன்.பேசும் போது சில தவறுகள் காணப்படும் ஆனால் வெட்கப்படாமல் கதைப்பதால் சில தவறுகள் சுட்டிக் காட்டப்பட்டு இன்று உங்கள் முன்னால் தமிழில் உரையாற்றுகிறேன்.

இந்தப் பயிற்சியினை பெற்றவர் தொடர்ந்து ஏனையோருடன் கதையுங்கள் கதைக்காமல் விட்டால் பரீட்சைகளில் சித்தியடைந்தாலும் பேசத் தெரியாவிடின் எவ்வித பயனுமில்லை.உலகில் உள்ள நாடுகளில் மதம், மொழி,சாதியென பல்வேறு வகையில் இருந்தாலும் அங்குள்ள மக்கள் தமது தாய் மொழியுடன் அடுத்த மொழியையும் தெரிந்திருப்பது பிரச்சினைகள் உருவாகாமல் தம்மை பாதுகாக்க உதவும்.

அடுத்த மொழியை தெளிவறக் கற்பவன் அந்த மொழி பேசும் அனைவருக்கும் சமம் என்னும் வாக்கியத்துக்கு அமைய இலங்கை குடிமக்களாகிய நாம் அரச கரும மொழிகளில் நன்கு பரீட்சையமானவர்களாகத் திகழ வேண்டும்"- என்றார்.

யாழ்ப்பாணம் பெரியபுலம் மகா வித்தியாலயம்,புத்தகலட்டி பாடசாலை ஆகிய எட்டு நிலையங்களில் நடத்தப்பட்ட பயிற்சி நெறிகளில் பங்குபற்றிய 740 பேருக்கே சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. (ஐ-9)

சரவணபவன் எம்.பியின் நிதியில்

# சனசமூக நிலையத்துக்கு மின்சாதன உபகரணங்கள்

சாவகச்சேரி, ஜன.1

மறவன்புலோ மேற்கு சனசமூக நிலையத்துக்கு 30 ஆயிரம் ரூபா பெறமதியான மின்சாதன உபகரணங்கள் நேற்றுமுன்தினம் சாவகச்சேரி பிரதேச சபையில் வைத்து நிர்வாகிகளிடம் கையளிக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்டு உபகரணங்களைக் கையளித்தார்.

நிகழ்வில் சாவகச்சேரி பிரதேசசபைத் தவிசாளர் மு.வாமதேவன்,பிரதேசசபை உறுப்பினர்கள்,நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் செ.பிரதாப் மற்றும் அலுவலர்கள் கலந்து சிறப்பித்தனர். (ஐ-50)

# பிரதேச சபை மண்டபத்தில் குளிரூட்டி பொருத்தப்பட்டது

வலி.தென்மேற்கு பிரதேச சபையின் கூட்ட மண்டபத்தில் உறுப்பினர்களின் கோரிக்கைக்கு ஏற்றவாறு குளிரூட்டியும்(ஏ.சி), ஒலி வாங்கிகளும் பொருத்தப்பட்டுள்ளன.

வலி.தென்மேற்கு பிரதேச சபைக்குத.தே.கூ.,ஐ.தே. கட்சி, சிறிலங்கா சுதந்திரக்கட்சி, ஈ.ம.ஜ.கட்சி, த.வி.கூட்டணி ஆகிய 5 கட்சிகளையும் சேர்ந்த 28 உறுப்பினர்கள் அங்கம் வகிக்கிறார்கள்.

கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உள்ளூராட்சிச் சபைத் தேர்தலில் த.தே.கூ., ஈ.ம.ஜ.கட்சி ஆகிய இருகட்சிகளைச் சேர்ந்த 16 உறுப்பினர்கள் அங்கம் வகித்தனர். வட்டார ரீதியாகவும் விகிதாசார ரீதியாகவும் உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளமையால் இம்முறை 28 உறுப்பினர்களாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் சிறிய அறையில் காற்றோட்ட வசதிகள் குறைந்த இடத்தில் மாதாந்தக் கூட்டங்கள் நடைபெற்று வருகின்றமையால் அசௌகரியங்களுக்குள்ளாகும் உறுப்பினர்கள் கூட்ட மண்டபத்துக்கு குளிரூட்டியும் ஒலி வாங்கியும் பொருத்தப்பட வேண்டுமென்ற கோரிக்கையை முன்வைத்தனர்.

இதையடுத்து பல லட்சம் ரூபா செலவில் குளிரூட்டியும் 28 ஒலிவாங்கிகளும் பொருத்தப்பட்டுள்ளன. (ஐ-115)

# காணிகள் கொள்வனவு

சாவகச்சேரி, ஜன.2

சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியின் பழைய மாணவர், ஆசிரியர் சங்கத்தின் லண்டன் கிளையினர் கல்லூரியின் விரிவாக்கத்துக்கு காணிகளை கொள்வனவு செய்து கடந்த ஞாயிற்றுக்கிழமை வழங்கியுள்ளனர்.

கல்லூரியின் ஆரம்பப் பிரிவு அமைந்துள்ள கட்டடத்திற்கு அருகில் உள்ள காணியையும் கல்லூரிக்கு வடக்குப் புறமாக ஏற்கனவே கல்லூரி பழைய மாணவர் சங்கத்தின் பெயரில் கொள்வனவு செய்யப்பட்டிருந்த காணியையும் கல்லூரியின் பெயருக்கு மாற்றி உறுதிகளை சங்க நலன்புரிக் கழகத்தினர் கையளித்தனர். (ஐ-9)



யாழ்ப்பாணம் கட்டுடை இடிகுண்டடிப் பகுதியில் நீண்டகாலமாக போக்குவரத்துக்கு இடையூறாக இருந்த மரங்கள், பற்றைகள் ஆகியவற்றை வெட்டி துப்புரவு செய்யும் நடவடிக்கையில் யாழ்ப்பாணம் கட்டுடை நவாலி நண்பர்கள் விளையாட்டுக் கழகத்தினர் கடந்த ஞாயிற்றுக்கிழமை மேற்கொண்டனர். (ஐ-63)

# யோகா தியான கற்கைநெறியின் புதிய பிரிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 2


இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் இலவசமாக நடத்தப்பட்டுவருகின்ற யோகாசன தியான கற்கைநெறியின் புதிய பிரிவு எதிர்வரும் சனிக்கிழமை நல்லூர்க் கந்தன் ஆலய ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் காலை 6.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

வார இறுதி நாள்களில் மட்டும் நடைபெறும் இவ்வகுப்புகள் ஆண்கள், பெண்கள் இருபாலாருக்கும் தனித்தனிப்பிரிவுகளாக நடத்தப்படும்.

ஆண்களுக்கான பிரிவு சனி மற்றும் ஞாயிறு ஆகிய தினங்களில் காலை 6.30 மணி தொடக்கம் 7.30 மணிவரையிலும் பெண்களுக்கான பிரிவு அதேதினங்களில் காலை 7.30 மணி தொடக்கம் 8.30 மணிவரையிலும் நடைபெறுவதுடன் நோயாளர்களுக்குச் சிறப்புக் கவனமெடுத்தும் பயிற்றுவிக்கப்படும்.

சுமார் மூன்று மாதகாலங்களைக் கொண்டமைந்த இவ் அடிப்படைக் கற்கைநெறியை நிறைவு செய்பவர்களுக்குத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன.

ஆர்வமுடையோர் தமது பதிவுகளை நல்லூர் ஆறுமுக நாவலர் மணிமண்டபத்தில் மேற்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.(ஐ-8)





# புதுவருடப் பிறப்பையொட்டி சிறப்பு வழிபாடுகளில் மக்கள்

யாழ்ப்பாணம், ஜன. 2

புதுவருடத்தை முன்னிட்டு வடக்கில் இந்து கிறிஸ்தவ ஆலயங்களில் மட்டுமன்றி நாடு முழுவதுமுள்ள வழிபாட்டுத் தலங்களில் நேற்றுச் சிறப்பு வழிபாடுகள் இடம்பெற்றன. மக்கள் ஆர்வத்துடன் அவற்றில் கலந்துகொண்டிருந்தனர். 2019ஆம் ஆண்டு புதுவருடம் நேற்றுப் பிறந்தது. அதனை வரவேற்று வழிபாடுகள் இடம்பெற்றன. அதிகளவானோர் ஆலயங்களுக்குச்சென்று வழிபாடுகளில்ஈடுபட்டிருந்தனர்.

கல்வியங்காடு சிறி வீரபத்திரர் சபரீச ஐயப்பன் கோவிலில் பாற்குடபவனியும் 108 கலச சங்காபிசேகமும் நேற்றுக் காலை இடம்பெற்றது.

நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலில் இடம்பெற்ற சிறப்புப் பூசை வழிபாடுகளைத் தொடர்ந்து சட்டநாதர் சிவன் ஆலயத்திலிருந்து கல்வியங்காடு சிறி வீரபத்திரர் சபரீச ஐயப்பன் கோவில் நோக்கி பாற்குட பவனி ஆரம்பமானது. பெருமளவிலான பெண்கள் கலந்து கொண்டனர்.

யாழ்ப்பாணம் புனித மரியன்னை பேராலயம், குருநகர் புனித யாகப்பர் ஆலயம், பாசையூர் புனித அந்தோனியார் தேவாலயம் உட்படப்பல தேவாலயங்களிலும் சிறப்பு வழிபாடுகள் நேற்று முன்தினம் நள்ளிரவு இடம்பெற்றன. நேற்றுப் பகலும் பலர் வழிபாட்டுத் தலங்களுக்குச் சென்று வழிபாட்டில் ஈடுபட்டனர். (த)

# மிக உயர்வான சேவையை மக்களுக்கு வழங்குங்கள்!

## இந்த எண்ணம் 365 நாள்களும் இருக்கட்டும் என்றும் யாழ்.மேல்நீதிமன்ற நீதிபதி பிரேமசங்கர் வலியுறுத்துகிறார்

**யாழ்ப்பாணம், ஜன. 2**

**நீதித் துறையினராகிய எமது சேவை அரச இயந்திரத்தில் ஒரு சிறப்பான அம்சம். அவ்வாறு இருக்கும் நாங்கள் மிக உயர்வான சேவையை மிகுந்த அர்ப்பணிப்புடன் வழங்கவேண்டும். எந்தவிதக் குறைகளையும் எந்தப்பக்கத்திலிருந்தும் கேட்பதற்கு இடமளிக்காது எமது பணியை ஆற்றவேண்டும்.**

இவ்வாறு யாழ்ப்பாண மேல்நீதிமன்ற நீதிபதி அன்னலிங்கம் பிரேமசங்கர் வலியுறுத்தியுள்ளார்.

யாழ்ப்பாண நீதிமன்ற வளாகத்தில் நேற்று இடம்பெற்ற நீதித்துறை அலுவலர்ளின் புத்தாண்டு உறுதி உரை நிகழ்வில் தலைமை உரையாற்றும்போது அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

2019ஆவது புதிய ஆண்டில் எமது கடமைகளை ஆரம்பிக்கின்ற இந்த நிகழ்வில் நாம் உணர்வுபூர்வமாகக் கலந்துகொண்டிருக்கின்றோம்.

அரச இயந்திரத்தில் நீதித்துறை ஒரு சிறப்பான அம்சமாகும். இன்றைய காலகட்டத்தில் நீதித் துறையின் செயற்பாடு வெகுவாகப் போற்றப்படுகிறது.

எங்கு பிரச்சினைகள் ஏற்பாட்டாலும் அவற்றுக்கு நீதித் துறைதான் தீர்வை வழங்கவேண்டிய ஒரு நிலை காணப்படுகின்றது. அது குடும்பத்தில் பிணக்காக இருக்கலாம், அயல் வீட்டுக்குள் உள்ள பிணக்காக இருக்கலாம், அரச இயந்திரத்தில் உள்ள பிணக்காக இருக்கலாம்.

நிறைவேற்று அதிகாரத்துக்கும் நாடாளுமன்றத்துக்கும் இடையில் பிணக்கு ஏற்பட்டாலும் அதற்கான தீர்வை வழங்கவேண்டிய நிலமை இந்த நாட்டிலே உள்ளது.

அந்தவகையிலே நீதித்துறையில் ஓர் அங்கமாக நாம் இருக்கின்றோம் என்பது போற்றப்படவேண்டிய விடயம். அவ்வாறு இருக்கும் நாங்கள் மிகவும் உயர்வான சேவையை மிகுந்த அர்ப்பணிப்புடன் வழங்கவேண்டும் என்பது எனது வேண்டுதல்.

மக்களின் தேவைகள் உயர்வாகப் பேணப்பட நீதித்துறையே அடிப்படையானத்தாக அமைகின்றது. கடந்த காலங்களில் ஏற்பட்ட நிகழ்வுகள் உங்களுக்கு ஞாபகமிருக்கும். பிணக்குகளை துரிதமாகவும் இலகுவாகவும் நியாயமாகவும் தீர்ப்பதற்கு நீதித்துறை எடுத்த நடவடிக்கைகளை நீங்கள் அறிந்திருப்பீர்கள்.

எனவே நீதித்துறையின் ஒரு பாகமாக நாங்கள் மிகுந்த உயர்ந்த இடத்திலே வைத்துப் போற்றப்படவேண்டியவர்கள். ஆனால் அவ்வாறு போற்றப்படும் நாங்கள் எமது பங்களிப்புக்களை, சேவைகளை அந்தவகையில் வழங்குகின்றோமா என்பது கேள்வியே! அந்தக் கேள்வியை நீங்கள் ஒவ்வொருவரும் உங்களுடைய கடமையின் போது உங்களைக் கேட்கவேண்டும். கடமையைக் காலையில் ஆரம்பிக்கும்போதிலிருந்து மாலை பணியை முடிக்கும்வரை இந்த விடயம் உங்கள் மனதிலே காணப்படவேண்டும். எம்மை நாடி வருகின்றவர்களுக்குத் தேவையான சேவையை தேவையான வகையிலே எந்தவிதமான குறைகளுமின்றி வழங்குகின்றோமா என்பது முக்கியமான விடயம்.

மேல் நீதிமன்ற நீதிபதி என்ற வகையில் இந்தக் கொள்கையைக் கடைப்பிடிக்குமாறு எல்லோரிடமும் வலியுறுத்துகின்றேன். நாம் இன்று உறுதி எடுத்தோம். அந்த உறுதி உரையை 365 நாள்களும் ஒவ்வொரு நிமிடமும் மணித்தியாலங்களும் எமது அடிமனதிலே இருக்கவேண்டும்.

முக்கியமாக மக்களின் பணத்திலே சம்பளம் பெறுகின்ற அரச ஊழியரான நான் எமது கடமைகளையும் பொறுப்புக்களையும் வினைத்திறனாகவும் பயன்மிக்கதாகவும் திடசங்கற்பத்துடனும் உயரிய அர்ப்பணிப்புடனும் நேர்மையாகவும் பக்கச்சார்பின்றியும் வழங்குவேன் என்று உறுதிமொழி எடுத்திருக்கின்றோம்.

அதன்மூலம் நாம் எந்தப்பொதுமகனுக்கும் அப்பழுக்கற்ற சேவையை வழங்க முடியும் என்பது எனது ஆணித்தரமான எண்ணமாகும்.

கடந்த ஆண்டிலே எமது சிறப்பான பணியை வழங்கியிருக்கின்றோம். ஆனால் அந்தப் பணி போதுமானது என்று எடுத்துக்கொள்ள முடியாது. அந்தச் சிறப்பான பணி மேலும் சிறப்பாக அமையவேண்டும்

2019ஆம் ஆண்டிலே எமது பணி மேலும் சிறக்கவேண்டும். எந்தவித குறைகளையும் எந்தப்பக்கத்திலிருந்தும் கேட்பதற்கு இடமளிக்காது எமது பணியை ஆற்றவேண்டும் என்பதே எனது வேண்டுதல். - என்றார். (ஐ.37)





## கிறிஸ்மஸ் நிகழ்வுகள்

வவுனியா.ஜன.2

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அலுவலகத்தில் கிறிஸ்மஸ் நிகழ்வுகள் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றன.

கிறிஸ்மஸ் புத்தாண்டை முன்னிட்டு இறம்பைக்குளம் ஈஷி மிஷன் ஆலயத்தின் அனுசரணையில் வன்னிப் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அலுவலகத்தில் வருடாவருடம் மேற்கொள்ளப்பட்டு வரும் கிறிஸ்மஸ் நிகழ்வுகள் இம்முறையும் மூன்றாவது தடவையாக இடம்பெற்றன.

இதில் வன்னிப்பிராந்தியத்தில் கடமையாற்றும் பொலிஸ் அலுவலகர்கள் தமது குடும்பங்களுடன் கலந்து கொண்டனர்.

வன்னிப்பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் அனுர அபேயவிக்கிரம, மூத்த பொலிஸ் அத்தியட்சகர் ரி.எம். எஸ்.எம்.தென்னக்கோன், ஈஷி மிஷன் ஆலயத்தின் பிரதான பிஷப் பி. எம். இராஜசிங்கம் மற்றும் ஆலயப் போதகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வில் கலந்துகொண்ட மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்களும் வழங்கிவைக்கப்பட்டன. (ஐ-110)

## 10 கிலோக் கிராம் கடலுணவுகள் சுகாதாரப் பகுதியினரால் அழிப்பு

சாவகச்சேரி, ஜன.2

கொடிகாமம் பொதுச் சந்தையில் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த பழுதடைந்த 10 கிலோ கிலோ கடலுணவுகள் நேற்றுமுன்தினம் காலை சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் கைப்பற்றப்பட்டு பொதுமக்கள் முன்னிலையில் அழிக்கப்பட்டன.

கொடிகாமம் சந்தையில் பழுதடைந்த கடலுணவுகள் குளிரூட்டப்பட்ட வாகனங்களில் கொண்டு வரப்பட்டு விற்பனை செய்வதாகவும் அவற்றினை வாங்கிச் சென்று சமையலுக்குப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினருக்கு முறையிட்டனர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் சுகாதாரப் பகுதியினர் திடீர் பரிசோதனை நடத்திய போது விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த கடலுணவுகள் பழுதடைந்த நிலையில் காணப்பட்டதால் அவற்றினைக் கைப்பற்றி வியாபாரிகளின் சம்மதத்துடன் பொது மக்கள் முன்னிலையில் அழித்தனர்.

அத்துடன் பழுதடைந்த கடலுணவுகளை வைத்திருந்த வியாபாரிகள் எச்சரிக்கை செய்யப்பட்டு எதிர்காலத்தில் இவ்வாறான கடலுணவுகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தால் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் சாவகச்சேரி சுகாதாரப் பகுதியினரால் தெரிவிக்கப்பட்டது.

மேலும் பொதுச் சந்தை கடலுணவு விற்பனைப் பகுதியில் மீன் வெட்டுவோர் சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் உரிய மருத்துவச் சான்றிதழ் பெற்றிருக்க வேண்டுமெனவும் நெருப்புக் காய்ச்சல் வராமல் தடுப்பதற்கான தடுப்பூசி ஏற்றிய சான்றிதழ் வைத்திருக்க வேண்டுமெனவும் தவறின் அவர்கள் மீதும் சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் தெரிவித்தனர். (ஐ -9)

## கல்விக்கான உபகரணங்கள் வழங்கல்

யாழ்ப்பாணம், ஜன. 2

யாழ்ப்பாண மாவட்ட பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் உதவியுடன் சங்க அங்கத்தவர்களின் பிள்ளைகளுக்கு கல்விக்கான உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. சுமார் 14 லட்சம் ரூபா பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் இவ்வாறு வழங்கப்பட்டு வருவதாக சமாசாத்தின தலைவர் வ.தெய்வேந்திரம் தெரிவித்தார்.

மாவட்டத்தில் உள்ள பனை தென்னை வளஅபிவருத்திச் சங்கங்களை சேர்ந்த 3ஆயிரம் வரையிலான அங்கத்தவர்கள் மற்றும் பணியாளார்களின் பிள்ளைகளுக்கு கல்விக்கான இந்த உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சமாசத்தின் உதவிகள் வழங்கும் திட்டத்தின் கீழ் இந்த பாடசாலை மாணவர்களுக்கான கல்விக்காக உதவிகள் வருடாவருடம் வழங்கப்பட்டும் வருகின்றன. (ஐ-17)



## மரக்கன்றுகள் வழங்கல்

கரவெட்டி.ஜன.2

கரவெட்டிப் பிரதேச ஓய்வூதிய சங்கத்தின் ஏற்பாட்டில் ஓய்வூதியர்களுக்கு மரக் கன்றுகள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் திங்கட்கிழமை கரவெட்டி விவசாயப் போதனாசிரியர் அலுவலகத்தில் நடைபெற்றது.

கரவெட்டி விவசாயப் போதனாசிரியர் அலுவலகமும், கரவெட்டி பெரும்போக அலுவலகர் பணிமனையும் இணைந்து இந்த நிகழ்வை ஏற்பாடு செய்தன.

கரவெட்டி பிரதேச ஓய்வூதியர் சங்கத்தின் தலைவர் திரு.ச.செவ்வந்திநாதருக்கு பிரதேச விவசாயப்போதனாசிரியர் முதலாவது கன்றினை வழங்கி நிகழ்வினை ஆரம்பித்து வைத்தார்.

இதில் ஒருவருக்கு தலா பத்து பழ மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இதில் பப்பாளி, மாமரம், மாதுளை, தேசி, கொய்யா, சீத்தா போன்ற நல்லினக்கன்றுகள் வழங்கப்பட்டன. (ஐ-422)

## கருத்தரங்கு

சாவகச்சேரி ஜன. 2

கொடிகாமம் நகர உணவகங்கள் மற்றும் சிற்றுண்டி நிலையங்களுக்கு உணவுகள் தயாரித்து வழங்குவோருக்கான கருத்தரங்கு கொடிகாமம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்றது.

சாவகச்சேரி சுகாதாரத் திணைக்க ளத்தின் ஏற்பாட்டில் சங்கத்தின் பொது முகாமையாளர் சி. தேவகுமாரன் தலைமையில் கருத்தரங்கு இடம்பெற்றது.

இதன்போது உணவகங்கள் மற்றும் தேநீரகங்களுக்கு சிற்றுண்டி உணவுகள் உட்பட உணவுகள் சமைத்து வழங்வோர் மேற்கொள்ள வேண்டிய சுகாதார நடவடிக்கைகள் தொடர்பாக பொது சுகாதாரப் பரிசோதகர்களால் கருத்துரைகள் வழங்கப்பட்டன. (ஐ-9)



## தொடருந்தில்...

லான பொருள்கள் கொண்டுவரப்படும் என்ற எதிர்பார்ப்பில் சென்ற அதிகாரிகளும், முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா ஆகியோர் ஏமாற்றமடைந்தனர். அரச தலைவர் செயலகத்தின் ஏற்பாட்டில், 'தொடருந்து சேவையைப் பாதுகாப்போம்' என்ற அமைப்புடன் இணைந்து தெற்கிலிருந்து உதவிப் பொருள்களைச் சேர்த்துக் கொண்டு சிறப்புத் தொடருந்து கிளிநொச்சியை நேற்று வந்தடைந்தது.

முல்லைத்தீவு மாவட்டத்துக்கான உதவிப் பொருள்கள் மாங்குளம் தொடருந்து நிலையத்தில் வைத்து வழங்கப்பட்டது. உதவிப் பொருள்களை ஏற்றிச் செல்வதற்காக மாவட்டச் செயலகத்தின் ஏற்பாட்டில் இராணுவத்தினரின் 4 ட்ரக் வண்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டன.

மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தா, இராணுவத் தளபதிகள், பிரதேச செயலர்கள் ஆகியோருடன் வடக்கு மாகாண ஆளுநர் செயலக ஊழியர்களும் மாங்குளம் தொடருந்து நிலையத்தில் காத்திருந்தனர்.

தொடருந்தும் வந்ததும் பொருள்கள் இறக்கப்பட்டன. ஆயிரத்து 400 கிலோ அரிசியும், 20 பொதி தண்ணீர்ப் போத்தல்களும் எடுத்து வரப்பட்டன. இதன் பெறுமதி 3 லட்சம் ரூபா என்று மதிப்பிடப்பட்டுள்ளது. அதிகளவிலான உதவிப் பொருள்கள் கொண்டு வரப்படும் என்ற எதிர்பார்ப்பில் சென்ற அதிகாரிகள், நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் ஏமாற்றமடைந்தனர்.

'5 கிலோ அரிசிப் பொதியில் 250, 10 கிலோ அரிசிப் பொதியில் 7, 25கிலோ அரிசிப் பொதியில் ஒன்று, 15 பொதி தண்ணீர்ப் போத்தல்கள் மற்றும் பாடக் கொப்பிகள் 12 டசின் எம்மிடம் ஒப்படைக்கப்பட்டன' என்று முல்லைத்தீவு மாவட்டச் செயலர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்தார்.

கிளிநொச்சி தொடருந்து நிலையத்தில் வைத்து கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.அருமைநாயகத்திடம் உதவிப் பொருள்களைக் கையளித்தனர். பொருள்களின் விவரங்களை மாவட்டச் செயலகம் வெளியிடவில்லை. (ஒ.5,105)

## வடக்கு...

கோரி கிளிநொச்சியில் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. சிவசேனை அமைப்பு மற்றும் சிவன் பவுண்டேசன் ஆகியன ஆளுநர் குரேயை இடமாற்றம் செய்யவேண்டாம் என்று அரச தலைவரிடம் கோரிக்கை விடுத்துள்ளன.

நாட்டின் 9 மாகாண ஆளுநர்களையும் பதவி விலகுமாறு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன பணித்துள்ளார். வடக்கு மாகாண ஆளுநர் குரே பதவி விலகல் கடிதத்தை அரச தலைவரிடம் ஒப்படைத்துள்ளார். இவ்வாறானதொரு நிலையில் வடக்கு ஆளுநரை இடமாற்றவேண்டாம் என்று பல தரப்பினரும் கோரிக்கை முன்வைத்து வருகின்றனர். கிளிநொச்சி மாவட்டத்தில் கவனவீர்ப்புப் போராட்டம் நேற்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவிப் பொருள்களைச் சேகரித்த தொடருந்து கிளிநொச்சியை நேற்று வந்தடைந்தது. இந்தத் தொடருந்தில் அரச தலைவரும் வரக்கூடும் என்ற அடிப்படையில் அவரிடம் கையளிப்பதற்கான மனுவுடன், தொடருந்து நிலையத்தில் தொண்டர் ஆசிரியர்கள் மற்றும் சுகாதாரத் தொண்டர்கள் திரண்டிருந்தனர். அரச தலைவர் வருகை தரவில்லை என்பதால், உதவிப் பொருள்களை கையேற்க வந்திருந்த கிளிநொச்சி மாவட்டச் செயலர் சு.அருமைநாயகத்திடம் மனுவைக் கையளித்தனர். 'வடக்கு மாகாண ஆளுநர் நேர்மையாகச் செயற்பட்டு வந்தார். இடமாற்றப்பட்டால் அவர் முன்னெடுத்த பணிகள் இடையில் கைவிடப்படும். அவர் பணியில் தொடர வேண்டும்' என்று அவர்கள் தெரிவித்தனர். (ஒ.5,6,105)

## மருத்துவமனைகளில்...

இதன் காரணமாகவே ஏற்பட்டது. விரைவில் அந்தத் தட்டுப்பாடு நீங்கும். இவ்வாறு சுகாதார அமைச்சர் ராஜித சேனாரட்ன தெரிவித்தார். சுகாதார அமைச்சில் புத்தாண்டுப் பணிகளை நேற்று ஆரம்பித்து வைத்து உரையாற்றும்போதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

200 வகையான மருந்துகளுக்கு நாடு முழுவதும் தற்போது தட்டுப்பாடு நிலவுகின்றது. அரசியல் நெருக்கடியால் மருந்துகள் இறக்குமதி செய்ய முடியாத நிலமை ஏற்பட்டிருந்தது. புற்றுநோயாளர்களுக்கு அத்தியவசியமான 12 மருந்து வகைகளுக்குப் பற்றாக்குறை நிலவியது.

நான் மீண்டும் சுகாதார அமைச்சராகப் பொறுப்பேற்றதும் புற்றுநோயாளர்களுக்கு 5 வகையான மருந்துகளை உடனடியாக வானூர்தி மூலம் இறக்குமதி செய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன்.

இருதய நோயாளர்களுக்கான ஸ்டென்ஸ் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது. கொழும்புத் தேசிய மருத்துவமனைக்கு 400 ஸ்டென்ஸ்களை இன்று (நேற்று) மதியம் பெற்றுக் கொடுத்துள்ளேன். அறுவைச் சிகிச்சைகளை தடையின்றித் தொடரமுடியும்.

மக்களுக்கு இலவசச் சுகாதாரத்தைப் பெற்றுக் கொடுக்க முற்பட்டபோது பலரும் என்னைத் திட்டினார்கள். விமர்சனம் செய்தார்கள். பல எதிர்ப்புக்களுக்கும், அழுத்தங்களுக்கும் மத்தியில் மருந்துகளின் விலைகளைக் குறைத்தேன். மகிந்த அரசு 53 நாள்களும், மக்களுக்கு என்ன நடந்தாலும் பரவாயில்லை என்று எண்ணியே தீர்மானங்களை எடுத்தது. மக்களின் சுகாதாரம் வியாபார சந்தை இல்லை என்பதை அவர்களுக்குத் தெளிவுபடுத்த விரும்புகின்றேன் - என்றார். (ஒ.5,10)

## 50 நாள்கள்...

ஏற்கவேண்டியுள்ளது. இவ்வாறு அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்தார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே மேற்கண்டவாறு கூறினார்.

'ஜனநாயகத்துக்கு எதிராக 50 நாள்கள் முன்னெடுக்கப்பட்டிருந்த ஆட்சியில் பெரிய பொருளாதார இழப்புகளைச் சந்தித்திருந்தோம். இதற்குப் பொறுப்புக்கூறுவது யார்? அனைத்துச் சுமைகளும் மக்கள் மீது சுமத்தப்பட்டுள் ளன. எவ்வளவு இழப்புக்கள் ஏற்பட்டதென்றுகூட மதிப்பிட முடியாதுள்ளது. தேசிய அரசியல்வாதிகள் தமது சுகபோகங்களை மாத்திரமே பேசுகின்றனர். சாதாரண மக்கள் மற்றும் இளையோரின் எதிர்காலம் தொடர்பில் எவரும் பேசுவதில்லை. அதிகாரம் உள்ள போதும் ஒருவிதமாகவும், அதிகாரம் இல்லாதபோது ஒருவிதமாகவும் அரசியல் நடத்துகின்றனர். இவை அனைத்தையும் மாற்றி மனிதநேயம் மிக்க அரசியலை நாட்டில் கொண்டுவருவதே எமது இலக்காகும்' - என்றார் ரவி. (ஒ.5,10)

## பிரபாகரன்...

சுமந்திரன் முனைந்து வருகின்றார். இவ்வாறு ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் அநுராதபுரம் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சந்திரசேன தெரிவித்தார். அநுராதபுரத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

நாட்டை பிளவுபடுத்தும் புதிய அரசமைப்பு மூன்றிலிரண்டு பெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் ஊடகவியலாளர் மாநாட்டில் கூறியிருந்தார். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் 21 உறுப்பினர்கள், மக்கள் விடுதலை முன்னணியின் ஆறு உறுப்பினர்கள் தற்போது எம்முடன் சேர்ந்து அரசுக்கு ஆதரவளிக்கும் 117 உறுப்பினர்கள் உள்ளடங்கலாக மூன்றிலிரண்டு பெரும்பான்மையை ஏற்படுத்த முடியும் என்று குறிப்பிட்டுள்ளார். மேற்படி உறுப்பினர்கள் ஒன்றிணைந்தாலும் 144 உறுப்பினர்களே அவர்கள் பக்கம் உள்ளனர். 225உறுப்பினர்களைக் கொண்ட நாடாளுமன்றத்தில் 150 உறுப்பினர்களுக்கு அதிகமாக காணப்படுகின்ற போது தான் அந்த ஆட்சியாளர்களுக்கு மூன்றிலிரண்டு பெரும்பான்மை உள்ளது எனக் கொள்ள முடியும்.

நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனின் கணக்கின் பிரகாரம் 150 உறுப்பினர்கள் இல்லை. அவ்வாறாயின் 144 உறுப்பினர்களைப் பயன்படுத்தி அவர் எவ்வாறு புதிய அரசமைப்பை நிறைவேற்றுவார்? தமிழ் மக்களை ஏமாற்றி அவர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரனால் கூறப்படும் கருத்தே இதுவாகும். 30 ஆண்டுகளாக பிரபாகரன் தனிஈழக் கனவுடன் தமிழ் மக்களை ஏமாற்றி துன்ப நிலைக்கு கொண்டு சென்றதை விடவும் கொழும்பில் இருந்து கொண்டு தமிழ் மக்களை மிக மோசமான நிலமைக்குக் கொண்டு செல்லும் செயற்பாட்டையே சுமந்திரன் முன்னெடுக்கின்றார் - என்றார். (ஒ.5,61)

## அமைச்சர்கள்...

அனுபவங்கள் என்பவற்றை ஆராய்வதற்காக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன தனது செயலர் உதய ஆர்.செனவிரத்ன தலைமையில் புதிய குழு ஒன்றை நியமித்துள்ளார். அந்தக் குழுவின் விதந்துரைக்குப் பின்னரே நியமனங்களை மேற்கொள்ள வேண்டும் என்று அமைச்சுச் செயலர்களுக்கு அரச தலைவர் மைத்திரிபால சிறிசேன அறிவுறுத்தல் விடுத்துள்ளார் என்றும் தெரியவருகின்றது. இதனால் அரச நிறுவனங்களின் தலைவர்களின் நியமனம் தடைப்பட்டு வருகின்றது என்று கூறப்படுகின்றது.

அரச துறையில் உயர்மட்டப் பதவிகளுக்கான நியமனங்களில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவின் செல்வாக்கைக் கட்டுப்படுத்துவதற்கே இந்தக் குழுவை அரச தலைவர் ஏற்படுத்தியுள்ளார் என்று அரச உயர்மட்டத் தகவல்கள் கூறுகின்றன. அரச தலைவரின் செயலாளர் தலைமையிலான குழு நியமிக்கப்பட்டுள்ளதால் அரச நிறுவனங்களின் தலைவர்கள் நியமனங்களின் இறுதி முடிவு அரச தலைவரிடம் சென்றுள்ளது என்று சுட்டிக்காட்டப்படுகின்றது. அரச தலைவரின் இந்தச் செயற்பாடு வழமையான நடைமுறை நியமங்களுக்கு முரணானது என்றும் சுட்டிக்காட்டப்படுகின்றது. ஒவ்வொரு அமைச்சின் கீழும் உள்ள அரச நிறுவனங்களின் தலைவர்களை நியமிக்கும் அதிகாரம் சம்பந்தப்பட்ட அமைச்சர்களுக்கே உரியது. இந்த விவகாரம் தொடர்பாக அமைச்சர்கள் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுடன் ஆராயவுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகின்றது. இந்தக் குழு நியமிக்கப்பட்டமை தொடர்பாக தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இதுவரை எந்தக் கருத்தையும் வெளியிடவில்லை. (எ-61)

## இனவாதத்தை...

படுகின்றது. இவ்வாறு அமைச்சர் அர்ஜூன ரணதுங்க தெரிவித்தார்.

புத்தாண்டு வழிபாடுகளில் நேற்றுப் பங்கேற்ற பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

2015ஆம் ஆண்டிலிருந்து கடன் சுமை மற்றும் பொருளாதாரத்தில் பெரிய மாற்றங்களை ஏற்படுத்தியிருந்தோம். உலக அரங்கில் எமக்கு இருந்த சவால்களை வெற்றிக்கொண்டு நாட்டுக்கு மூலதனங்களை கொண்டுவந்திருந்தோம். 50 நாள்கள் அரசால் இவை அனைத்தும் பின்னடைவைச் சந்தித்திருந்தன. இந்த ஆண்டுக்குள் அனைத்து அபிவிருத்தி நடவடிக்கைகளையும் முறையாக முன்னோக்கிக் கொண்டு செல்வதே எமது இலக்காகவுள்ளது. நாட்டில் மக்கள் எதிர்பார்ப்பாகவுள்ள வாழ்க்கைச் செலவு குறைப்பு தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்படும். அரச தலைவருடன் சில பிரச்சினைகள் உள்ளன. எந்தவொரு அரசிலும் இவ்வாறான பிரச்சினைகள் இருக்கும். அரச தலைவருக்கும் நாடு தொடர்பில் பொறுப்பு உள்ளது. அவரும் 62இலட்சம் மக்களின் வாக்குகளைப் பெற்றுதான் அரச தலைவராக தெரிவானார். தலைமை அமைச்சருக்கும் பொறுப்புள்ளது. எனவே, இருவரும் இணைந்துதான் நாட்டை முன்னோக்கிக் கொண்டுசெல்ல வேண்டும். அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் இந்த அரசு உடன்படிக்கையொன்று செய்துகொண்டுள்ளதாக கூறப்படுவது முற்றிலும் பொய்யானது. அவ்வாறான உடன்படிக்கை எதனையும் நாங்கள் கைச்சாத்திடவில்லை. மகிந்த ராஜபக்ச தரப்பு இனவாதத்தை தூண்டுவதற்காகவே இவ்வாறு பொய்க்குற்றச்சாட்டுகளை மக்கள் மத்தியில் பரப்பி வருகிறது. என்றாலும், அவர்கள் முன்வைத்துள்ள கோரிக்கைகள் மிகவும் சாதாரணமானவை. அவ்வாறு தெற்கில் பிரச்சினைகள் இருந்திருந்தால் நிலமை வேறு விதமாக இருந்திருக்கும்.

**அமைச்சரவை அதிகரிப்பு**

அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிரிப்பது தொடர்பான இறுதி முடிவு இந்த வார இறுதிக்குள் எடுக்கப்படும். இது தொடர்பாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்கும், தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் பேச்சுக்கள் இடம்பெற்றுவருகின்றன.

19ஆவது திருத்தச் சட்டத்துக்கு அமைவாக 30 அமைச்சர்களே பதவியிலிருக்க முடியும். அமைச்சர் ஒருவருக்கு முப்பது முதல் நாற்பது வரையிலான அரச நிறுவனங்கள் காணப்படுகின்றன. ஒரு அமைச்சரால் இத்தனை நிறுவனங்களை வினைத்திறனுடன் நிர்வாகம் செய்ய முடியுமா என்பது தொடர்பில் சிந்தித்துப்பார்க்க வேண்டியுள்ளது. அமைச்சரவை அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிக்க வேண்டியுள்ளது. அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பது தொடர்பான இறுதி முடிவு இந்த வார இறுதிக்குள் பூர்த்தியாகும் - என்றார். (ஒ.5,61)

## 23 உந்துருளிகளில்...



யாழ்ப்பாணம், ஜன. 2

23 உந்துருளிகளில் வந்த 50 இளைஞர்களை மடக்கிப்பிடிக்க முற்பட்டபோது, உந்துருளிகளையும் கைவிட்டுத் தப்பி ஓடியுள்ளனர். அவர்களில் 3 பேரை மிகுந்த கஸ்டப்பட்டு பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளோம். இவ்வாறு கொக்குவில் காந்திஜி சனசமூக நிலையப் பகுதி மக்கள் தெரிவித்தனர்.

புதுவருட தினமான நேற்று இந்தச் சம்பவம் பி.ப. 2 மணியளவில் நடைபெற்றுள்ளது.

'ஐ.எம்.ஓ. செயலி ஊடாக தாக்குதல் நடத்தப் போகின்றோம் என்று இளைஞர்கள் குழு ஒன்று தெரிவித்தது. ஆம்பிளைகள் யாராவது இருந்தால் ஊரில் நில்லுங்கள் என்று மிரட்டினார்கள். நாங்கள் சுதாகரித்து அவர்களை மடக்கத் திட்டமிட்டோம். நாம் பதுங்கியிருந்தோம். 23 உந்துருளிகளில் சுமார் 50 இளைஞர்கள் வாள்களுடன் வந்தார்கள். வீதிகளால் பயணிக்கும்போது, திடீரென வீதிகளுக்கு குறுக்கே தடிகளைப் போட்டு அவர்களை மடக்கினோம். வந்தவர்கள் உந்துருளிகளையும் போட்டுவிட்டு தப்பினால் போதும் என்று ஓடினார்கள். இருப்பினும் அந்தக் குழுவில் 3 பேரைப் பிடித்துப் பொலிஸாரிடம் ஒப்படைத்தோம்' என்று காந்திஜி சனசமூக நிலையப் பகுதி இளைஞர்கள் தெரிவித்தனர்.

பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட இளைஞர்கள் ஆனைக்கோட்டை மற்றும் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர்கள் என்றும் அனைவரும் 25 வயதுக்கு உட்பட்டவர்கள் என்று தெரியவருகின்றது.

23 உந்துருளிகளில் இளைஞர்கள் குழு யாழ்ப்பாணத்தின் ஸ்ரான்லி வீதியூடாகப் பயணித்து, மருத்துவமனை வீதிக்குச் சென்று அங்கிருந்து கஸ்தூரியார் வீதியால் பயணித்து பின்னர் கே.கே.எஸ். வீதியூடாகவே கொக்குவிலுக்குச் சென்றுள்ளதாகப் பொலிஸார் குறிப்பிட்டனர்.

23 உந்துருளிகளிலும் பவனியாகவே வீதியில் பயணித்துள்ளனர். அவர்களில் பெரும்பாலானவர்கள் தலைக்கவசம் அணிந்திருக்கவில்லை. வீதியால் பயணிக்கும்போது, மக்களை அச்சுறுத்தும் வகையில் செயற்பட்டதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

காந்திஜி சனசமூக நிலையப் பகுதியினர் உந்துருளிகளில் வந்தவர்களை மடக்கிப் பிடிக்க முற்பட்டபோது அவர்கள் விலைகூடிய நவீன உந்துருளிகளை வீதிகளில் போட்டுவிட்டு தப்பி ஓடியிருந்தனர். வீதிகளில் வீழ்ந்திருந்த நிலையில் 7 உந்துருளிகளைப் பொலிஸார் மீட்டு எடுத்துச் சென்றார்கள். (ஒ.5,8,105)

## ஐ.தே...

ஐக்கிய தேசிய முன்னணியின் கூட்டம் அலரி மாளிகையில் நேற்று முன்தினம் மாலை நடைபெற்றது. இந்தக் கூட்டத்திலேயே ரணில் விக்கிரமசிங்க இவ்வாறு கூறினார் என்று ராஜித தெரிவித்தார்.

கண்டியில் மகாநாயக்க தேரர்களைக் கடந்த வெள்ளிக்கிழமை ரணில் சந்தித்திருந்தார். சந்திப்பு முடிவில் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவித்த அவர், ஒற்றையாட்சி நீக்கப்படாது என்பதை மகாநாயக்க தேரர்களுக்கு எடுத்துக் கூறியதாகக் குறிப்பிட்டார்.

கடந்த சனிக்கிழமை யாழ்ப்பாணத்தில் ஊடக சந்திப்பு நடத்திய நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், ரணில் விக்கிரமசிங்க மகாநாயக்க தேரர்களுடன் தமிழிலா உரையாடினார். அவர் ஒற்றையாட்சி என்றா கூறினார். ஏக்கிய ராஜ்ஜியவுக்கு இடைக்கால அறிக்கையில் தெளிவாகவே வரைவிலக்கணம் கொடுக்கப்பட்டுள்ளது. அது ஒற்றையாட்சியை குறிக்கவில்லை. ஒருமித்த நாடு என்பதையே குறிப்பிடுகின்றது என்று கூறியிருந்தார்.

இது தொடர்பில் கடந்த ஞாயிற்றுக் கிழமை கண்டியில் இடம்பெற்ற நிகழ்வில் பங்கேற்ற அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்லவிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு அவர், 'ஏக்கிய' என்ற சொற்பதத்திலும் எவ்வித மாற்றமும் செய்யப்படாது. தமிழில் 'ஒருமித்த நாடு' என்ற பதத்தை இணைக்குமாறு தமிழ்க் கட்சிகள் கோரிக்கை முன்வைத்தன. எனினும், அது ஏற்றுக்கொள்ளப்படவில்லை. மும்மொழிகளிலும் 'ஏக்கிய' என்ற சொற்பதமே இடம்பெற்றிருக்கும், என்று குறிப்பிட்டிருந்தார்.

இவ்வாறானதொரு நிலையிலேயே ரணில் விக்கிரமசிங்க ஐக்கிய தேசிய முன்னணியின் உறுப்பினர்களுக்கு, புதிய அரசமைப்பின் சர்சைக்குரிய வார்த்தைகள் தொடர்பில் பேசுவதற்குத் தடை விதித்துள்ளார்.

'நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன், அமைச்சர் லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்த கருத்துத் தொடர்பில் தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்துப் பேசினார். அதன் பின்னர் உறுப்பினர்களுக்கு புதிய அரசமைப்புத் தொடர்பில் சில அறிவுறுத்தலை ரணில் வழங்கினார்.

புதிய அரசமைப்பில் நாட்டின் தன்மை தொடர்பில் அதன் உள்ளடக்கத்தைப் பற்றிக் குறிக்கின்ற சொற்பதங்கள் தொடர்பில் தேவையற்ற உரையாடல்களைத் தவிர்க்குமாறு ரணில் கோரினார். பெப்ரவரி 4ஆம் திகதிக்கு முன்னர் புதிய அரசமைப்புக்கான வரைவு நாடாளுமன்றத்தில் சமர்பிக்கப்பட வேண்டும். அதுவரையில் இந்தச் சொற்களைப் பயன்படுத்துவது தொடர்பில் அவதானமாக இருக்க வேண்டும். தேவையற்ற விதத்தில் கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்க்க வேண்டும் என்று ரணில் விக்கிரமசிங்க கூறினார்' என்று அமைச்சர் ராஜித தெரிவித்தார். நாட்டின் தன்மையைக் குறிக்கும் ஏக்கிய ராஜ்ஜிய என்ற சொல் தொடர்பிலேயே தற்போது சர்ச்சை ஏற்பட்டுள்ளது. (ஒ22)

## இராணுவ...

றும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

பிரிகேடியர் எம்.ஏ.ஏ.டீ.சிறிநாகா (இலத்திரனியல் மற்றும் இயந்திரவியல் பொறியியலாளர், பணிப்பாளர்) மேஜர் ஜெனரல் பதவிக்கு உயர்த்தப்பட்டுள்ளார். கேணல் மற்றும் லெப்டினண்ட் கேணல் பதவிகளில் இருந்த 66 பேருக்குப் பதவி உயர்வுகள் வழங்கப்பட்டுள்ளன.

இந்தப் பதவி உயர்வுகள் இராணுவத் தளபதி லெப்டினண்ட் கேணல் மகேஷ் சேனநாயக்க பாதுகாப்பு அமைச்சு ஊடாக அரச தலைவர் மைத்திரிபால சிறிசேனவுக்குப் பரிந்துரைந்தமைக்கு அமைய வழங்கப்பட்டுள்ளன. (எ-61)

## இளைஞர்கள்...

வித்ததாவது:

இளைஞர்கள் சிலர் குழு மோதலுக்குச் செல்வதாக இரகசியத் தகவல் கிடைத்தது. வீதிச் சோதனை நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்தோம். நேற்றுமுன்தினம் திங்கட் கிழமை இரவு 10 மணியளவில் கோயில்குளம் 10ஆம் ஒழுங்கையில் சோதனையில் ஈடுபட்டிருந்தபோது சந்தேகத்துக்கிடமாகப் பயணித்த முச்சக்கரவண் டியை மறித்தோம். முச்சக்கர வண்டியை சோதனையிட்டோம். 3 வாள்கள், கத்திகள் முச்சக்கரவண்டியிலிருந்து மீட்டோம். அதில் பயணித்த இளைஞர்களையும் கைது செய்தோம். அவர்களிடம் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளோம். - என்றார். (ஒ.5,110)

## இந்த...


வாறு காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். வவுனியா வீதி அபிவிருத்தி திணைக்களத்துக்கு முன்பாக சுழற்சி முறையிலான உணவு ஒறுப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவினர்களே வேண்டுகோள் விடுத்துள்ளார்கள்.

'நாம் எமது பிள்ளைகளைத்தேடி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றோம். இலங்கை அரசியல்வாதிகள் அனைவருமே எங்களைக் கைவிட்டுவிட்டார்கள். நாம் பன்னாட்டுச் சமூகத்தையே நம்பியுள்ளோம். பிறந்துள்ள புதிய ஆண்டிலாவது பன்னாட்டுச் சமூகம் எம் மீது கரிசனை செலுத்தி எங்கள் கண்ணீருக்குத் தீர்வு காணவேண்டும்' என்று அவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அவர்களது போராட்டம் இன்றுடன் 680 நாள்களை எட்டுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஒ.5,110)

## அலோசியஸுக்கு...

பிணை முறை மோசடி தொடர்பான வழக்கு நேற்று விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, கொழும்பு பிரதான நீதவான் லங்கா ஜயரத்னவால் பிணை உத்தரவு வழங்கப்பட்டது.

தலா 10 இலட்சம் ரூபா பெறுமதியான காசுப் பிணையிலும், 20 இலட்சம் ரூபா பெறுமதியான 4 ஆள் பிணையிலும் செல்ல அவர்கள் அனுமதிக்கப்பட்டனர். அவர்களின் வெளிநாட்டுப் பயணங்களும் தடை செய்யபட்டுள்ளன. ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் குற்றப் புலனாய்வுப் பிரிவில் முன்னிலையாக வேண்டும் என்றும் உத்தரவிடப்பட்டுள்ளது. இவர்கள் தொடர்ச்சியாகப் பல மாதங்கள் விளக்கமறிய லில் வைக்கப்பட்டிருந்த நிலையில் தற்போது பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர். (எ-61)

இழந்த சக்தியை மீண்டும் பெற்றிடப் பாவியுங்கள்
றோயல் குளுக்கோஸ்
உங்கள் வியாபாரிகளிடம் நீங்கள் குளுக்கோஸ் வாங்கும்போதும் குளுக்கோஸ் என்று கேட்டகாமல்
றோயல் குளுக்கோஸ் தாருங்கள் என்று கேட்டு வாங்குங்கள்
PACKED BY: ROYAL Industries Columbo12, T.P.077 727 7670
அனைத்து பாமஸிகளிலும் கடைகளிலும் பெற்றுக்கொள்ளலாம்.


ஏக விநியோகஸ்தர்கள்:
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். T.P.021 222 2567

நியத ஜய
நியத்த ஜய Niyatha Jaya
சீட்டிழுப்பு வாரம் : 733 வர்ணம் : ஆரஞ்சு
திகதி : 2019.01.01
வெற்றி இலக்கங்கள் 10 25 30 49 ஆங்கில எழுத்து 0
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 20,080,888/-
தொலைபேசி : 0112 333 546 - 47 web : www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 902
சீட்டிழுப்பு திகதி 2018.12.31 திங்கட்கிழமை
F 05 33 44 46
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 43,141,376/-
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>SB என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும்
பச்சை நிற டிக்கட்டுகள் 2019.01.03ம் திகதி வியாழக்கிழமை சீட்டிழுப்புக்கு செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுகள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.

ராசி அதிர்ஷ்டம்
திகதி 01.01.2019 வெற்றி வாரம் 2427 வர்ணம் நீலம்
மிதுனம்
வெற்றி இலக்கங்கள் 14 22 27 57
புதன் கிழமை வெற்றிப் பொதி ரூ. 2, 462, 672 /=
2019.01.02 ம் திகதி புதன் கிழமை பச்சை நிற டிக்கட்டுக்களாகும்
வெற்றி பெற்ற சீட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்
தொ.பே: 011 4824824 Web: www.dlb.lk
SMS: DLB<space>LOT<space>LW என டைப் செய்து 1919 இற்கு அனுப்பவும். அல்லது துரித அழைப்பு 1919

கோடிபதி சனிதா KOTIPATHI SHANIDA
சீட்டிழுப்பு வாரம்: 388
வர்ணம் : இளஞ்சிவப்பு
சீட்டிழுப்பு திகதி: 2019.01.01
அடுத்த வெள்ளிக்கிழமைக்கான ஜக்பொட் ரூ. 108,086,248/-
Y 17 53 78 80
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

அத கோடிபதி
சீட்டிழுப்பு வாரம்: 482
வர்ணம் : நீலம்
சீட்டிழுப்பு திகதி: 2019.01.01
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 57,251,915/-
வெற்றி இலக்கங்கள் 15 19 36 53 N
தொ.பே: 011 4062002 / 0114062062 Web: www.dlb.lk
அல்லது துரித அழைப்பு - 0114 824 824, 0112 333 778

2ஆம் ஆண்டு நினைவஞ்சலி
குமாரசாமி இரத்தினம்
(ஓய்வுபெற்ற கிளை முகாமையாளர் - சாவகச்சேரி பல. நோ. கூ. சங்கம்)
திதி : அபரபக்க துவாதசி

பிறப்பு 10.11.1947 இறப்பு 26.12.2016
உயிருக்கு உயிராக இருந்து
எமைக்காத்த எமது அப்பாவே
இரண்டு ஆண்டுகள் ஆனாலும்
ஆறவில்லை எங்கள் துயரம் அப்பா...
உங்கள் ஆத்மா சாந்தியடை பிரார்த்திக்கின்றோம்.
மீசாலை கிழக்கு, மீசாலை. குடும்பத்தினர்.

பாராட்டி வாழ்த்துகின்றோம்
2018 இல் நடைபெற்ற தரம் 05 புலமைப் பரிசில் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெற்ற எமது மருமகன், மருமகள் ஆகிய இருவரையும் பாராட்டி வாழ்த்துகின்றோம்.

பாலசிவராம் யுகான்
கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க. பாடசாலை
புள்ளி - 191 மாவட்ட நிலை - 09

மகேந்திரன் டர்மிகா
யா/ ஆங்கில திருக்குடும்ப கன்னியர்மட பாடசாலை (தேசிய பாடசாலை)
புள்ளி - 178
பாராட்டுவோர், மாமன்மார், அ.ராகுலன், அ.சௌத்ரி, அ.கஜேந்திரன்

# பொறியியல் தொழில் நுட்பப் பிரிவில் முதலாம் இடம்

மன்னார்,ஜன.2
கடந்தவருடம் நடைபெற்ற க.பொ.த. உயர்தரப்பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் மன்னார் எருக்கலம்பிட்டி முஸ்லீம் மத்திய மகா வித்தியாலய மாணவன் சரண்அபிஷேக்குரூஸ் பொறியியல் தொழில்நுட்பப் பிரிவில் முதலாம் இடத்தினையும், தேசிய ரீதியில் 456 வது இடத்தினையும் பெற்றுள்ளார். (க-60)

# உயிரியல் பிரிவில் முதலாம் இடம்



மன்னார்,ஜன.2
கடந்த வருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில், மன்னார் மாவட்டத்தில் வங்காலை புனித ஆனாள் வித்தியாலய மாணவன் றெஜாராஜேஸ்வரன் றெயன்சன் உயிரியல் தொழில் நுட்பப் பிரிவில் முதலாம் இடத்தினையும், தேசிய ரீதியில் 483 ஆவது இடத்தினையும் பெற்றுள்ளார்.
தனது எதிர்கால இலக்கு சிறந்த மென்பொருள் பொறியியலாளராக வருவதே என்றார் . எனது கல்விச்செயற்பாட்டுக்கு உறுதுணையாக இருந்த பெற்றோர் ,ஆசிரியர்கள், அதிபர் , நண்பர்கள் அனைவரையும் நினைவில் கொள்கின்றேன் எனவும் தெரிவித்தார். (க-60)

# கலைப்பிரிவில் முதலாம் இடம்



மன்னார்,ஜன.2
கடந்தவருடம் நடைபெற்ற கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையில் மன்னார் மாவட்டத்தில் வங்காலை புனித. ஆனாள் வித்தியாலய மாணவி ஜே.மேரி வினோதினி கலைப்பிரிவில் முதலாம் இடத்தினையும், தேசிய ரீதியில் 105 ஆவது இடத்தினையும் பெற்றுள்ளார். எதிர்காலத்தில் ஒரு சட்டத்தரணியாக வருவதே தனது நோக்கம் எனவும் அவர் தெரிவித்தார். (க-60)

# பிரதேசசபைக்குச் சொந்தமான காணியில் இராணுவத்தினரின் நினைவுத் தூபி

கிளிநொச்சி, ஜன.2
ஆனையிறவுப்பகுதியில் இராணுவத்தினர் நினைவுத் தூபி அமைந்துள்ள காணி தமது சபைக்குரிய காணி என அடையாளம் காணப்பட்டுள்ளதாகப் பச்சிலைப் பள்ளிப் பிரதேச சபையின் தவிசாளர் தெரிவித்தார்.
கிளிநொச்சி மாவட்டத்தின் பச்சிலைப்பள்ளி பிரதேச சபைக்கு உட்பட்ட குறிஞ்சாதீவுப் பகுதியில், உப்பளம் அமைப்பதற்கு குறித்த காணியினை தருமாறு பிரதேச செயலகத்தால் கோரப்பட்டிருந்த நிலையில், அவற்றுக்கான அனுமதி நீண்டகால குத்தைக்கு வழங்கப்பட்டுள்ளதாகவும், அவற்றுக்குச் சொந்தமான வாடி. வீடுகள் அமைந்த காணி தற்போதும் இராணுவத்தின் பிடியில் உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.
அவை முன்னைய காலத்தில் நெதர்லாந்து நாட்டவர்கள் அங்கு வீடுகள் அமைத்து வெளிநாட்டுமக்களுக்கு சுற்றலா மையாமாக வைத்திருந்தனர். அவை தற்போது இராணுவத்தின் நினைவுச் சின்னம் உள்ள பகுதியாக உள்ளதாகத் தெரிவித்த தவிசாளர்.
இந்தக்காணியினை இராணுவத்தினர் ஒப்படைத்தால் அதனை ஒரு சுற்றுலா மையமாக ஒல்லாந்தர் பயன்படுத்தியது போன்று பயன்படுத்த முடியும் எனவும் தெரிவித்தார்.
குறித்த பகுதியில் படையினரின் கடை அமைத்துள்ளதுடன், நடைபாதை வியாபாரிகளும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளனர். அவை தொடர்பாக பிரதேசசபை அனுமதிகள் பெறப்பட்டுள்ள்தா எனக் கேட்டபோது இல்லை எனப் பதிலளித்தார். (க-6)

# உற்பத்தி நிறுவனங்கள், கம்பனிகளுக்கு எதிராக கடந்த வருடத்தில் மட்டும் 611 வழக்குகள்



வவுனியா,ஜன.2
**கடந்த ஆண்டில் தவறிழைத்த வர்த்தக நிலையங்கள், உற்பத்தி நிறுவனங்கள், கம்பனிகள், கம்பனி முகவர்கள் ஆகியோருக்கு எதிராக 611 வழக்குகள் தாக்கல்செய்யபட்டுள்ளதாக, வவுனியா மாவட்டப் பாவனையாளர் அலுவல்கள் அதிகாரசபையின் பொறுப்பதிகாரி எஸ். நிலாந்தன் தெரிவித்தார்.**

கடந்தவருடம் தமது திணைக்களத்தால் மேற்கொள்ளபட்டுள்ள செயற்பாடுகள் தொடர்பாக ஊடகங்களுக்கு நேற்றையதினம் கருத்துத் தெரிவிக்கும் போதே இவ்வாறு தெரிவித்தார்.
அவர் மேலும் தெரிவித்ததாவது:
"வவுனியா மாவட்டத்தில் கடந்த 2018 ஆம் ஆண்டில் பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையினராகிய நாம் பலசுற்றிவளைப்புக்களையும்,சோதனை நடவடிக்கைகளையும் மேற்கொண்டிருந்தோம்.
அதனடிப்படையில் தைமாதம் முதல் மார்கழி மாதம் வரை தவறிழைத்த 655 வியாபார நிலையங்கள், உற்பத்தி நிறுவனங்கள், கம்பனிகள், கம்பனி முகவர்கள் ஆகியோர் எமது குழுவினரால் அடையாளங்காணப்பட்டு அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.
அதன்படி 611 வழக்குகள் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தப்பட்டு, அவற்றில் 595 வழக்குகளில் சம்பந்தப்பட்ட நபர்களுக்குத் தண்டப்பணம் அறவிடப்பட்டு முடிவுறுத்தப்பட்டுள்ளது.
மொத்தமாக 33இலட்சத்து 79 ஆயிரத்து 500 ரூபா நீதிமன்றத்தால் தண்டமாக அறவிடப்பட்டது.
குறித்த வர்த்தகநிலையங்களில் காலாவதியான பொருள்களை விற்பனை செய்தமை,அதனைக்காட்சிப்படுத்தியமை, விலை காட்சிப்படுத்தாமல் பொருள்களை விற்பனை செய்தமை, கட்டுப்பாட்டுவிலையிலும்பார்க்ககூடியவிலையில் பொருள்களை விற்பனை செய்தமை, சுட்டுத்துண்டு இல்லாமல், அந்த சுட்டுத் துண்டில் போதிய விவரங்கள் இல்லாமல் பொருள்களை விற்பனை செய்தமை, பாதுகாப்புக்கருதி எஸ்.எல்.எஸ் சான்றிதழ் கட்டாயமாக்கப்பட்ட பொருள்களுக்கு எஸ்.எல்.எஸ் சான்றிதழ் அற்ற பொருள்களை விற்பனை செய்தமை போன்ற குற்றங்களுக்காகவே குறித்த சட்ட நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன.
தவறிழைத்த வியாபாரிகளை இனங்கண்டு தண்டம் விதிப்பது மட்டுமின்றி, வியாபாரிகளுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கும் முகமாக விழிப்புணர்வுநிகழ்வுகள் ஏற்பாடுசெய்யப்பட்டு, மாவட்டத்தின் பல இடங்களில் நடத்தப்பட்டுள்ளன. வியாபாரிகளுக்கு மட்டுமன்றிப் பொதுமக்கள் பாடசாலை மாணவர்கள் எனப்பலதரப்பினருக்கும் பாவனையாளர் உரிமைகள், பாவனையாளர் கடமைகள் , பாவனையாளர் சட்டங்கள் தொடர்பில் தெளிவூட்டும் முகமாக விழிப்புணர்வுநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டுள்ளன.
கடந்தவருடம் வியாபாரிகள், மாணவர்கள், பொதுமக்களுக்குத் தேவையான ஆலோசனைகள் வழங்கும் முகமாக 72க்கும் மேற்பட்ட விழிப்புணர்வு நிகழ்வுகளை நடத்தியுள்ளோம்.
இது தவிர பொது மக்களால் நேரடியாகவோ தொலைபேசி மூலமாகவோ வழங்கப்படும் முறைப்பாடுகளுக்கும் நாம் முடிந்தவரை திருப்திகரமான தீர்வினைப் பெற்றுக்கொடுத்திருக்கிறோம்.
பொதுமக்கள் நேரடியாக வரமுடியாதவிடத்து 1977,0247755455 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு அழைத்து முறைப்பாடுகளை தெரிவித்துகொள்ள முடியும்" - என்றார். (க-110)

# கேப்பாபிலவு வீதியில் வழிப்பறி கொள்ளையர்கள்

முல்லைத்தீவு,ஜன.2
முல்லைத்தீவு மாவட்டம் புதுக்குடியிருப்பு கேப்பாபிலவு வீதியில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை உந்துருளியில் சென்ற இளைஞர்கள் சிலர் பறித்துச் சென்றுள்ளனர்.
சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:
புதுக்குடியிருப்பில் வசிக்கும் பெண் ஒருவர் கேப்பாபிலவு வீதி ஊடாக முள்ளியவளைக்கு வேலைக்கு சென்று வருவது வழமை .நேற்று கேப்பாபிலவு வீதியில் கள்ளியடி வயல் வெளிக்கு அருகில் உந்துருளியில் முள்ளியவளை நோக்கி வந்த வேளை, பின்தொடர்ந்த உந்துருளியில் வந்த இளைஞர்கள் குறித்த பெண்ணை மறித்து உங்கள் உந்துருளியின் பின் சில்லு ஆடுவதாகக் கூறியுள்ளனர். உந்துருளியை நிறுத்திப் பார்த்தபோது பெண்ணின் கழுத்தில் இருந்த தங்கச் சங்கிலியினை அறுத்துக் கொண்டு சென்றுள்ளனர். பாதிக்கப்பட்ட புதுக்குடியிருப்பைச் சேர்ந்த பெண் முள்ளியவளைப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளார். (க-ரி 3)



# புதுவருடச் சத்தியப்பிரமாணத்துடன் கடமையேற்ற வவுனியாப் பொலிஸார்

வவுனியா.ஜன.2
வவுனியா பொலிஸார் புதுவருட சத்தியப் பிரமாணத்தையடுத்து புதிய ஆண்டுக்கான தமது கடமைகளை ஆரம்பித்தனர்.
நிகழ்வு வன்னிப் பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலய வளாகத்தில் நேற்றுக் காலை 9 மணிக்கு இடம்பெற்றது.
2019 ஆம் ஆண்டுக்கான முதலாவது வேலைநாளான நேற்று, சகல அரச திணைக்களங்கள் மற்றும் அரச, அரசார்பற்ற அலுவலங்களில் புதுவருட உறுதியுரையுடன் வேலைகள் ஆரம்பித்தன. அந்தவகையில் வவுனியா பிரதிப் பொலிஸ் மா அதிபர் காரியாலயத்திலும் இந்த வருடத்துக்கான அரசின் சத்திய பிரமாணத்துடன் வேலைகள் ஆரம்பமாகின.
முன்னதாக தேசியக் கொடி பொலிஸ் கொடி என்பன ஏற்றப்பட்டு, பிரதி பொலிஸ் மா அதிபர் தலைமையில் சத்தியப்பிரமாண நிகழ்வு இடம்பெற்றதுடன், தமது புதுவருட வாழ்த்துக்களையும் பரிமாறிக்கொண்டனர். (க-110)

# வவுனியா நகரில் ஆறுகடைகளில் திருட்டு

வவுனியா,ஜன. 2
வவுனியா நகரப் பகுதியில் உள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையத்தில் அமைந்துள்ள 6 வியாபார நிலையங்கள் உடைக்கப்பட்டு பணம் திருடப்பட்டுள்ளது.
நேற்றுமுன்தினம் இரவு 8 மணிக்கும் 9.30 மணிக்கும் இடையில் இந்த தொடர் திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருக்கலாம் என வவுனியாப் பொலிஸார் தெரிவித்தனர்.
சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது.
வவுனியா, இலுப்பையடிப் பகுதியில் அமைந்துள்ள மொத்த மரக்கறி விற்பனை நிலையக் கடைத் தொகுதிக்குள்



கூரைகளைப் பிரித்து உள் நுழைந்த திருடர்கள் அங்கு வைக்கப்பட்டிருந்த பணத்தைத் திருடிச்சென்றுள்ளனர்.
மாலை 7 மணியளவில் கடைகளை பூட்டிவிட்டு சென்றிருந்த குறித்த வர்தக நிலையங்களிலேயே திருட்டுபோயுள்ளதுடன் மறைகாணி (சீ.சீ.ரி.வி) கமெரா பொருத்தப்பட்டிருந்த கடைகளில் அவற்றைச் செயிழக்கச் செய்துவிட்டு திருட்டில் ஈடுபட்டுள்ளனர். சம்பவம் இடம்பெற்றபோது, அந்தத்தொகுதியில் உள்ள சில கடைகள் திறந்து காணப்பட்டுள்ளன. குறித்தகடைகளில் இருந்தவர்கள் கடைகள் உடைக்கப்பட்டிருப்பதை அவதானித்து கடை உரிமையாளர்களுக்குத் தெரியப்படுத்தியதையடுத்து அவர்கள் இது தொடர்பாக வவுனியாப் பொலிஸில் முறைப்பாடு செய்தனர்.
முறைப்பாட்டையடுத்து மறைகாணி (சீ.சீ.ரி.வி) கமராக்களின் உதவியுடன் வவுனியா பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.
கடைகளில் இருந்த சுமார் 60 ஆயிரம் ரூபாய் வரையிலான பணம் திருடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (க-110)

# ஜி.சி.ஈ உயர்தரப் பரீட்சைப் பெறுபேறுகள்

2018ஆம்ஆண்டுஜி.சி.ஈ.உயர்தரப்பரிட்சையில்சித்திபெற்ற மாணவர்களின் விவரங்கள் பாடசாலை அதிபர்களால் வெளியிடப்பட்டுள்ளன.

## யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி

**கணிதப்பிரிவு**

*தமிழ்மொழிமூலம்*

தி.சகீர்தன் -3ஏ (மாவட்டநிலை - 3).தே.ஜெயபவன்- 3ஏ, ச.கோபினநாத்-3ஏ.சி.சிவகஜன்-3ஏ.த.அறிவன்-3ஏ.சு.லக்சன்-3ஏ.சி.ஜமீல்ராஜ்-3ஏ.க.கஜவரன்3ஏ.சி.லகுபரன்-3ஏ. அ.ரசாத்-3ஏ.சு.மிதுன்ராஜ்-3ஏ.கு.உமாசங்கர்-3ஏ.மு.தனராஜ் - 3ஏ, கு.டிலக்சன் -2ஏபி, இ.லக்ஸ்மன் - 2ஏபி, ம.பரத்ராஜ்-2ஏபி.பு.லக்ஸ்மன்-2ஏபி, கா.நந்தரூபன்-2ஏபி.ச.நிரூசன் -2ஏபி, செ.செந்தில்குமரன் - 2ஏபி. சி.துஸ்யந்தன் - 2ஏபி, ஈ.நந்தலக்சன் - 2பிசீ, யோ.வஜீகரன் - 2ஏபி, பு.தினோஜன் - 2ஏபீ, ச.மதுசன் - 2ஏபி, ப.ஜெயசதன்-2ஏபி,

*ஆங்கில மொழிமூலம்*

கே.ஜதுசனன் - 3ஏ, சி.கஜானன் - 3ஏ.சு.ரவிநாத்-3ஏ, வி.அனுசியந்தன் -2ஏபி, மோ.பாகவன் - 2ஏபீ, ல.கிஷாந்-2ஏபி, ச.சிவஸ்திகன் - 2ஏபி, பா.ஜதுநந்தனசர்மா - 2ஏபி, பா.டஜீவ் - 2ஏபி.இ.ஹரிகரன் - 2ஏபி

**உயிரியல்பிரிவு**

*தமிழ்மொழிமூலம்*

அ.அன்புச்செல்வன்-3ஏ(மாவட்டநிலை-3).ச.சிவப்பிரியன்-3ஏசி, அனோஜன் -3ஏ, நி.பிரந்தாபன்-2ஏபி, மொ.டயஸ்-2ஏபி.கோ.வித்தகன்.கி.சிவமைந்தன்-2ஏபி.கு.அஜிலவன்-2ஏபி

*ஆங்கில மொழிமூலம்*

ப.சர்மீகன்-3ஏ, ஸ்ரீ.ஜனுபன் - 3ஏ, ப.வைகுந்தன் - 3ஏ, தே.மதுமிலன்-2ஏபி.ந.நிறைஞ்சன்-2ஏபி.இ.பிரதீஸ்-2ஏபி

**வர்த்தகப்பிரிவு**

யோ.ஹரிசங்கர் - 3ஏ, விவத்சங்கீதசர்மா - 2ஏபி,இ.றோஜ் நிஷான் - 2ஏபி

**பொறியியல் தொழிநுட்பம்**

நா.நகசீலன் -2ஏபி

## வேம்படி பெண்கள் உயர்தர பாடசாலை

ஆங்கில மொழி மூலம்

அ.அபிலாஷா-3ஏ, தேதுவாரகா - 3ஏ. சி.சிவப்பிரியா-2ஏபி, க.தேவநந்தி - 2ஏபி. சி.அபிராமி-ஏபிசி. தே.மதுராங்கி-ஏ2பி

*தமிழ் மொழிமூலம்*

க. வைஷ்ணவி - 3ஏ, சி.தர்சிகா -3ஏ, அ. தயாசங்கரி -3ஏ, யோ. சிவாணி-3ஏ, திலக்ஸ்சா -2ஏபி, க.கனிஸ்ரியா -2ஏபி, யோ. கேசினி -2ஏபி, அ சுவனேந்திரா - 2ஏபி, சி வேணுகா - 2ஏபி, மு. நிவேதா - 2ஏபி, யோ. கீர்த்திகா - 2ஏபி, ரா. தாட்சாயினி - 2ஏ பி, கோ. தீபனா - ஏ 2பி, க. அபர்ணா - ஏ 2பி, க. டிலுக்சியா - 2ஏபி, ச. அபிநயா - 2ஏசி, க. அபிராமி - ஏ2பி, சி. கம்சாயினி - ஏ2பி, கு. கஜேந்தினி - ஏ2பி, க. லக்சி - ஏ2பி, ச.சாரங்கா-2ஏபி, ர.ஜதுசா-2ஏசி, பா.ரிஸ்மிலெஸ்லி-ஏ2பி,க. தர்சிகா - ஏ 2பி, த. மாதங்கி -ஏ 2பி ,த கோபிகா -ஏ 2பி, ம. கார்த்திகா - ஏ 2பி, க. மதினி - ஏ 2பி, து.நர்மிலா - ஏ 2பி, சி.சாம்பவி -ஏ2பி, உ.கஜானி -ஏ2பி, க. ஜீவித்தனா-ஏ2பி, இ. ஆர்த்தி -ஏ2பி, சிதுளசினி -ஏ2பி, சா. ஐஸ்வர்யா-2ஏசி, வி. பிரியங்கா-ஏ2பி, ஜீ கமெலியா -ஏ2பி, க. பரமிதா-ஏபிசி, ச தர்மிகா - ஏ 2பி, ச.மதுசா - 2ஏசி, நே.கிஷாந்திகா - ஏ 2பி, ஞா.மதுசா - ஏபிசி, சு.சுபநிலா - ஏபிசி, அ.அசோகா - ஏ பி சி, பு.கஜானா - ஏபிசி.

**கணிதப் பிரிவு**

*ஆங்கில மொழிமூலம்*

பா.சாம்பவி -3ஏ, பா.க்ஜானி -3பி, சா.தனுஷா - ஏபிசி

*தமிழ்மொழிமூலம்*

அகேசவி-3ஏ, ஈமகிஷா - 2ஏபி, த. அபிவர்னா - 3ஏ, சி. கிருத்திகா - 2ஏசி, க.சங்கவி - 2ஏபி, ம. மதுசா - 2ஏசி, வி.தனுஷா -ஏ 2பி,ச நக்சலா - ஏ பி சி , ரா. ஷாம்பவி - எபிசி,அ. அனிட் அபிஷா - ஏபிசி, சு. ஆர்த்திகா - ஏ பி சி, வி.ஜெனோஷா - 3பி.

**வர்த்தகப் பிரிவு**

க.கர்சிகா-3ஏ,சி.லக்சியாசி-3ஏ.ஜெசாரங்கி-ஏ2பி,ச.துஷாலினி - 3ஏ, ஜெ.மயூரிகா - 3ஏ, க. கனிஷ்டா - 2ஏ பி, செ.சிந்துஜா -2ஏபி,உ.சாலினி -2ஏபி, ஐ.அஜந்தா-2ஏபி, உ.விவேகா-2ஏபி, சூ.ப்ரீதா - ஏ 2பி, சி. நிவேதா - 2ஏ பி.

**கலைப்பிரிவு**

ந.மதுரங்கனி - ஏ பி சி, செ. தக்சாயினி - ஏபிசி

**பொறியியல் தொழில்நுட்பம்**

தி.லக்சனா - பி2சி , ம.மதுஷாலினி-3சி , ச.ஜனுசா -பி 2சி, ப.மாதுமை- 2பி சி, ஐ. பிரின்சிகா - 2பி சி,சி. சிவதனுசா - பி2சி,வ.வானுசா-பி2சி, அ.ரம்மிஜா-2பிஎஸ், பா.தரங்கிதா -பி2சி.

## சென்.பற்றிக்ஸ் கல்லூரி

**கணிதப் பிரிவு**

எ.கஸ்ரோடிரோன் -3ஏ(மாவட்டநிலை2), எ.அன்ரன்சிந்துஜன் - ஏ2பி, பி.திசான் - ஏ பி சி.

**உயிரியல் பிரிவு**

ரி.சஞ்சீவன் - ஏபிசி.

**வர்த்தகப் பிரிவு**

எஸ்.றொனால்ட் - 3ஏ, எம்.டிசாந்தன் -3ஏ, ஆர்.றொசான் - 3ஏ. ஜி.ஏனோஷ் - 2ஏ பி, ஏ.மொறின்ஸ்ரன் - ஏ2பி.

**கலைப்பிரிவு**

ஏ.அர்ஜன்ராஜ் -2ஏ பி, இ.பேரின்சன் -2ஏ பி, எ.ஜெயக்குமாரன்-2ஏபி, ஜே.சுனில்குமாரபீரிஸ்-ஏ2பி, வை.ஜெரோன்ஸ் பஸ்ரி-2ஏசி, எம்.எவ்.எக்ஸ்.றஜிதன்-2ஏசி.ஜே.ஜெயதர்ஷன் - ஏபிசி, எம்.எ.ஜதுசன் - ஏபிசி.

**தொழிநுட்பப் பிரிவு**

ஆர்.தர்சியக் பிரியன் - 3பி (மாவட்ட நிலை-5), ஏ.ரி.ஜோன் கில்ரன் - பி2சி, எ.டிலக்ஷன்-பி2சி.

## யாழ்பாணம் மல்லாகம் மகாவித்தியாலயம்

**வர்த்தகப் பிரிவு**

ச.திலிப்குமார் - ஏ 2பி,ச.டெங்கிஸ்ரன்ஸ் - ஏ 2சி, பூ.கஸ்தூரி -பி2சி, த.சாதனா - 2ஏ எஸ், ர.தனுசன் - சி2எஸ்,உ.கிருஷாலினி - சி2எஸ்.

**கலைப்பிரிவு**

சி.தனுஷா-பி2சி, ஜெ.லகோசியா-பி2சி,சு.சிந்துஜன்-பி2சி, தே.ஹரிச்சந்ரா - பி 2எஸ்,கை.கலைவாணி - சி 2எஸ், பா.நிஷாலினி - 2சி எஸ்.சோ.கஜானா-2சிஎஸ், அ.அலஸ்ரினா- பி2எஸ்.

## கொக்குவில் இந்துக் கல்லூரி

**கணிதப்பிரிவு**

செ.கஜானன் - 3ஏ, தி. றதீஸ் -3ஏ, யோ. துளசியன் -2ஏ பி, உ. குருபரன் -2ஏ பி. த. சேனுஜன் - ஏ 2பி.வி. பிரணவன் - 2ஏசி, இ. மதிலஜனன் - ஏ2பி, இ. ஆதித்தன் - ஏ2பி, ம. நகும் பிரதீப் - ஏ2பி.வ. சசிதரன் - ஏபிசி, கு. குயிந்தன் - 3பி, ப.விதுர்சன்- 2பிசி,ஜெ. லதுர்சனன் -2பிசி, ஆ. சான்றோன்- ஏ 2சி, ச.அஜிந்த்ன்-ஏ2சி,ஆ.பத்மலோஜன்-2பிசி,இ.தர்சன்-ஏ2சி, றொ. மரின்ராஜ் - பி2சி,வி. பிரிந்தன் - 2பிசி, ம.ஜெகப்பிரதாபன் - பி2சி,ந.துசியந்தன்-2பி எஸ், ம. நிதர்சன் - பி2சி, வீ. கௌசிகன்-பி2சி,ரா.ஆதித்தன்-2பிசி,மு.நிதர்சன்-பி2சி, சோ.ரமணன்-2பிசி,கீ. மனோகரன் -ஏசிஎஸ்,சோ.கவிசாந் - பி2சி,

க.கோகுலன் - ஏசிஎஸ், த. சுதர்சன் - 3சி,நா. அருள்பிரசாந் - 3சி, அ. திவ்யன் - பி2எஸ், ர.வித்தியபிரகாஷ் -3சி,பா. சாரங்கன் - 3சி, ர. பிரியதர்சன் - 2சிஎஸ், ரூ. டிறுசன் - ஏசிஎஸ்.

**உயிரியல் பிரிவு**

ந. சங்கீர்த்தனன் - ஏ 2பி,து. சுரேஸ்குமார் - ஏ 2பி,வி. சண்முகவடிவேல் -ஏபிசி, ஜெ. நிதர்சன் - ஏபிசி, பி .எக்ஸ்வெயர் அனோசன் - ஏ2பி,கி.சர்வான்ஜி-ஏபிசி, ரா.ரட்ணராஜ்-3பி, பா.பார்த்தீபன்-ஏபிசி,ஞா.உஷாயினி-2ஏசி,அ.மதுசன்-2பிசி, சி. பிரகாஷ் - 2பிசி.லோ .பிரண்வி - பி2சி,த. றதீபன் - 3சி , சா.தட்சாகினி-3சி,கு.சாரண்யா-3சி,வி.நலின்பிரசாந்-2சிஎஸ், இ. அனிஸ்பிளோரிடா - 2சிஎஸ், கி. கீர்த்தனா- 2சி எஸ், ர.துளசிகா-பி2எஸ்,கு.நிமலதாஸ்-2சிஎஸ்,ர.விதுர்சா-பி2எஸ், கு. தனகேஸ்வரி - 2சி எஸ், ச. கெமிஸ்ரா - 2சி எஸ்.இ. சஞ்சீவன் - 2சிஎஸ், க .நிரோஜா - பிசிஎஸ்.

**வர்த்தகப்பிரிவு**

க.தனேசன்-3ஏ,யோ.மாதுரி-3ஏ,பி.பிரேமசாயினி-2ஏபி,யோ. மிதுசா- 2ஏபி,பொ.உஷாந்தினி-ஏ2பி,வ.நிரோசிகா-2ஏபி, அ. சுஜிதன் - ஏ 2பி, சா .பிரியங்கா- 2ஏ பி,ர .பிருந்தா -ஏ பி சி, பா. ரபித்தனா- 2ஏ பி, பா .யக்சாயினி- ஏ 2பி,க .தாட்சாயினி- 3பி,ர .திசானா -ஏ பி சி, அ.மதியங்கா- 2பி சி, த.பானுஜா -2பிசி, க.லக்ஷிகா-2பிசி, யோ. கிறிஸ்ரன்-பி2சி, சி. சோபனா-பி2சி, செ. சர்வஜனனி-2பிசி,

ப. கஜீவன்- பி2சி, ஆ.நேமலா -2பிசி, தி. நர்மதன் - பி2சி, சி. பிரகாஷ் - 3சி, சி. தனுஜா - பி2சி, மோ .பவித்திரா - பி2சி, த.சோபனா-பிசிஎஸ்,ப.யதுர்சன்-பிசிஎஸ்,கி.கஜரூபன்-பிசிஎஸ், ச.ஜெருயன் - 2சிஎஸ், கௌ. கஸ்பிரிரியா - 3சி, கி. ஜசிகரன் - 3சி. ம இனிசா - 2சிஎஸ், ம. லிவேஜினி - 2சிஎஸ், கு. சுலோஜன் - 2சிஎஸ், ஜெ. அமல்ராஜ் - பிசிஎஸ்.

**பொறியியல் தொழில்நுட்பம்**

சி. சிவதர்சன் - 2பிசி, ரா. சிறிராஜதீபன்- 3பி, த. சுலக்ஸன் - பிசிஎஸ், ம. திலக்ஷன் - 2சிஎஸ், சி. பார்கவின்- பி2எஸ், க. சானுசன் - 2சிஎஸ், நி. நிருசிகன் - பி2எஸ்.

**கலைப்பிரிவு**

க. கல்பனா - 3ஏ, செ வைஸ்ணவி -3ஏ, சி ஜான்சிகா- ஏ 2பி, சி.சங்கீதா- ஏ2பி, சி.சரந்குமார் - 2பிசி, ச.விதுசிகா - ஏ2பி, ம.வதனிகா-ஏபிசி,சி.நிசாசனா-ஏபிசி,ப.வைஸ்ணவி-ஏபிசி, பா. வரப்பிரகாஷ் -ஏபிஎஸ், அ.டிலக்ஸனா - ஏ2பி, கெ. நிலக்ஷன்- பி2சி, பி .சரணியா - ஏ2சி ,அ .சயந்தினி- பி2சி, ம.மதுசா - ஏபிஎஸ், கு.கஸ்தூரி- ஏ பி சி, க. குருசங்கர்- பி2சி, ஒ.அமலவாசினி- ஏ2சி, வி.யுலசிகா-ஏபிசி, லெ. லதாஜினி- பி2சி,கிகீதஞ்சன்-ஏ2சி,தெ.ஜனனி-ஏபிஎஸ்,ந.சிறிவிஸ்ணுகா -3சி,சுபிருந்தா-ஏ2சி,ந.ரஜிந்தன்-2சிஎஸ்,ம.லவிகா-2பிசி, ர.மதுசன்-பி2சி,க.ரகுராம்-பி2சி,க.சங்கவி-பிசிஎஸ்,குடிலாசினி-பி2சி, த. துசியந்தன்- 3சி, ச.அம்சா-பி2எஸ்,கோ. பிரஜிந் -பிசிஎஸ். சி.கோகிலவாசன் - பிசிஎஸ்.

## வரணி மத்திய கல்லூரி

**வர்த்தகப் பிரிவு**

சி.டிலக்சிகா-3ஏ, ஜெ.லாவண்யா-பி2சி, த.கீர்த்திகா-பி2சி, த.தர்மிகா- பிசிஎஸ், செ.கவிப்பிரியா- 2சிஎஸ், செ.கவிப்பிரியா-2சிஎஸ். பா.அதீஸ்-சி2எஸ், க.கஜீவன்-சி2எஸ்.

**உயிரியல் பிரிவு**

பா.விஜினா- 2எஸ்

**கணிதப் பிரிவு**

நா.மாதவன்- 2ஏபி, ஸ்ரீ.லதுர்சிகன்- 2பிசி, க.அகல்யா-சி2எஸ், க.ஜசிந்தன்-சி2எஸ், யோ.விஷ்ணு-சி2எஸ்.

**கலைப்பிரிவு**

க.தர்சிகா- ஏ2பி. ஜ.தமிழரசி- 2ஏசி, ந.வித்தகி- பி2சி, ந.பிரசாந்-ஏபிசி.சி.வித்யா-2பிசி.ச.நிசாழினி-ஏபிசி,இ.யாழ்மதி-ஏபிஎஸ்,வி.கீர்த்திபன்-ஏ2சி,இ.நிதுஷா-ஏ2சி,க.கீர்த்தனா-ஏசிஎஸ், க.சுபா- ஏசிஎஸ், க.அச்சகன்- ஏ2சி, சி.சுதர்சினி-பி2சி, வி.கீர்த்திகா - ஏசிஎஸ், ச.யாழினி- பி2சி, யோ.சுதர்சனா-பி2சி, ம.நிருஜா-பி2சி.

## கொடிகாமம் மத்திய கல்லூரி

**கலைப்பிரிவு**

கி.துஷ்யந்தினி-2ஏசி,ப.சர்மினி-3பி,யோ.சங்கீதா-ஏபிஎஸ், சு.பிரியந்தினி- ஏபிசி, சு.யுகிர்தா- ஏபிசி,சு.நிருசனா- ஏ2சி, ந.கார்த்திகா-3சி, ச.ஆரணி-3சி

**வர்த்தகப் பிரிவு**

க.தர்சிகா- பி2சி, கி.கிதுசனா- பி2எஸ், பு.பிரதீபா- 3சி, செ.சயந்தா-3சி,

**உயிர்வள தொழில்நுட்பம்**

ந.டர்சிகா-2பிசி. ச.பிரியசாளினி-3சி

## சாவகச்சேரி இந்துக் கல்லூரி

**உயிரியல் பிரிவு**

கு.கம்சிகா - 3ஏ, தி.டினோஜன்- 2ஏபி, சி.சோபனா- 2ஏபி, வி.மதனிகா-ஏபிசி, ம.சுர்த்தியா- ஏ2சி, க.நித்திலா - 3பி, சி.கோபிகா- 2பிசி, நா.நவீன்சங்கர்- 2பிசி, வ.கிரியர்லினி-2பிசி, சி.சங்கவி- 2பிசி, கு.சத்தியவாகினி-பி2சி.

**வர்த்தகப் பிரிவு**

சி.தர்மிலன்- 3ஏ, அ.சாம்பவி- 3ஏ, சி.கஜீபன்- 2ஏபி, ரா.அபிஷேக்- 2ஏபி, சி.டிவக்ஷனா- 2ஏபி, சு.சாருப்பிரியா-ஏ2பி, வி.ஜானுகா- 3பி, கி.கிருஷ்ணாங்கி- 2பிசி, ம.கஜீபா-2பிசி, ரா.தனசிகா-2பிசி, சி.திவ்யா-2பிசி, பு.சங்கவி-பி2சி, இ.றுபேக்-பி2சி, ஞா.மிதுரா-பி2சி, ப.நித்யா-பிசிஎஸ்.

**உயிர்முறைமைகள் தொழில்நுட்பம்**

ம.மாதுமை- ஏ2பி, கு.மதுஷா- 2பிசி, ப.ரதீபன்- பி2சி, கோ.டினோஜா-பி2சி.

**பொறியியல் தொழில்நுட்பம்**

தே.சுஜீகரன்-ஏ2பி,க.சகீலன்-2ஏபி,வி.ஸ்ரீசங்கரன்-ஏபிசி, வி.விபூசனன்- 2பிசி, க.பத்மஜன்- பி2சி, இ. கவிராஜ்- 3சி, மோ.சசிவராஜ்-பி2சி

**கணிதப் பிரிவு**

தெ.கிருஷன்- 3ஏ, சி.கயானானன்- 3ஏ, சி.யாழினி- 3ஏ, த.லக்சியா- 2ஏபி, ம.மதீசன்- 2ஏபி, ச.சுகேசினி- ஏ2பி, ச.சங்கர்ஜி- ஏ2பி, பா.தினுசன்- ஏபிசி, கு.அகித்- ஏபிசி, த.தசிதா- ஏ2சி, ரா.தாட்சாஜினி- ஏ2சி, அ.அபூசன்- ஏசிஎஸ், யோ.பிந்துசன்- 2பிசி, ந.ஆருஜன்- 2பிசி, அ.நியானந்தி-2பிசி, சி.பிரவீனன்- 2பிசி, சி.சௌமினியன்- 2பிசி, த.தனுசியா- 2பிசி, இ.பிரதீப்- 2பிசி, மௌ.மயில்றேஜன்-2பிசி, ம.ஈசராஜ்- 2பிஎஸ், பா.விஷ்ணுகன்- பி2சி, யா.கபீசன்- பி2சி, சி.மிதிலன்- பி2சி, இ.அபிநயா- பி2சி, ச.வித்தகன்-பி2சி,ரா.சுதர்சிகா-பி2சி,த.ஜஸ்மினா-பி2சி,ம.அஜித்கரன்- பி2சி, பு.மேதுலன்- 3பி, ச.தர்சிகன்- பிசிஎஸ், கி.தனுசாந்- பிசிஎஸ்- சி.ஆரமுதன்- பிசிஎஸ், அ.அயூசன்- ஏசிஎஸ்.

**கலைப்பிரிவு**

சி.நிலக்ஷனா-3ஏ,இ.ஹரிநி-3ஏ,எ.பிரியந்தி-3ஏ,அ.அனுஷா-3ஏ, பா.தபோதினி- 3ஏ, இ.தமிழினி- 2ஏபி, ப.தமிழினி-2ஏபி,கு.இந்துஷா-2ஏபி,க.சிந்துஜன்-2ஏபி,சி.கலையரசன்-ஏபிசி, டே.கிருத்திகா- ஏபிசி, சு.சங்கவி- ஏபிசி, சு.சங்கவி-ஏபிசி,சி.கலையரசி-ஏபிசி,ச.தனோஜன்-ஏபிசி,ந.சனோசா-ஏபிசி,செ.சரணயா-ஏ2சி,ந.கானப்பிரியா-ஏ2எஸ்.(ஐ-159,9)

# உலகெங்கும் புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் கோலாகலம்



ஆஸ்திரேலியா


பிரிட்டன்

உலகின் பல நாடுகளில் நேற்றுமுன்தினம் நள்ளிரவு புத்தாண்டுக் கொண்டாட்டங்கள் இடம்பெற்றன. அவை தொடர்பான ஒளிப்படங்களை பன்னாட்டு ஊடகமான ரொயிட்டர்ஸ் வெளியிட்டுள்ளது.


சீனா


அமெரிக்கா


பிரான்ஸ்


ஜேர்மனி


ரஷ்யா

## ரஷ்யாவிடம் இருந்து 600 ராங்கிகளை வ்ராங்கிக் குவிக்க பாகிஸ்தான் திட்டம்

இஸ்லாமபாத், ஜன. 2
எல்லைப் பகுதிகளில் கண்காணிப்புப் பணிக்காக ரஷ்யாவிடம் இருந்து 600 ராங்கிகளை வாங்கிக் குவிப்பதற்கு பாகிஸ்தான் திட்ட மிட்டுள்ளது. இந்த விடயத்தை கூர்ந்து கவனித்து வருகிறது இந்தியா.
பாகிஸ்தானில் முதல் முறையாக தெக்ரிக் இ இன்சாப் கட்சி ஆட்சி, அமைத்துள்ளது. 2025ஆம் ஆண்டுக்குள் பாகிஸ்தானின் எல்லைகளைப் பலப்படுத்த தலைமை அமைச்சர் இம்ரான் கான் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். இதன்படி இம்ரான் கான் ரஷ்யாவிடம் இருந்து சுமார் 600 ராங்கிகளை வாங்குவதற்கு ஒப்பந்தம் மேற்கொண்டுள்ளார் என்று தெரியவருகிறது. இந்த ராங்கிகள் பெரும்பாலும் ஜம்மு - காஷ்மிர் பகுதிகளில் நிறுத்தப்படாலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.
அவ்வாறு குறித்த பகுதியில் பாகிஸ்தான் ராங்கிகளை நிறுத்தினால் அது இந்தியாவுக்கு அச்சுறுத்தலான நடவடிக்கையாகவே அமையும். இதனால் இந்தப் பரிமாற்றம் இடம்பெற்றால் ரஷ்யாவை இந்தியா பகைக்கும் என்று கருதப்படுகிறது. (ம)



## ஐரோப்பிய நாடுகளில் பாதுகாப்பு அதியுச்சம்

### புதுவருடத்தை முன்னிட்டு



லண்டன், ஜன. 2
புதுவருடத்தை முன்னிட்டு ஐரோப்பிய நாடுகளில் நேற்று உச்சக்கப்பட்டப் பாதுகாப்பு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.
புதுவருடக் கொண்டாட்டங்கள் நேற்று உலகமெங்கும் கோலாகலமாக இடம்பெற்றன. ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பிடம் இருந்து ஐரோப்பிய நாடுகளுக்கு அண்மையில் பெரும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டது. இதையடுத்து ஐரோப்பிய நாடுகளின் முக்கிய நகரங்களில் நேற்று உச்சக்கட்டப் பாதுகாப்புகள் வழங்கப்பட்டன. பிரான்ஸின் பரிஸ், ஜேர்மனியின் பெர்லின், லண்டன், மன்செஸ்டர், மொஸ்கோ ஆகிய நாடுகளிலேயே அவ்வாறு பாதுகாப்புக்கள் பலப்படுத்தப்பட்டிருந்தன. (ம)



# அமெரிக்காவுடன் பேச்சுக்குத் தயார்

## புடின் அறிவிப்பு

மொஸ்கோ, ஜன. 2
அமெரிக்காவுடன் விரிவான பேச்சு நடத்துவதற்கு ரஷ்யா தயாராக உள்ளது என்று அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு ரஷ்ய அதிபர் புடின் கடிதம் அனுப்பியுள்ளார்.

அமெரிக்க அதிபர்தேர்தலில்தலையீடு, உக்ரைன்விவகாரம் உள்ளிட்டவற்றால் அமெரிக்காரஷ்யா இடையே சமீபகால மாக மோதல் போக்கு நீடித்து வருகிறது. இதன் காரணமாக ஆர்ஜென்ரீனாவில்அண்மையில்நடைபெற்றஜி20மாநாட்டில் புடினுடனான சந்திப்பை ட்ரம்ப் தவிர்த்துவிட்டார்.


இந்த நிலையில், ஆங்கிலப் புத்தாண்டை முன்னிட்டு அமெரிக்க அதிபர் ட்ரம்புக்கு ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் கடிதம் எழுதிஉள்ளார். அதிலேயே அமெரிக்காவுடன்பேச்சுநடத்தத் தயார் என்று குறிப்பிட்டுள்ளார் அவர்.

அந்தக்கடிதத்தில், "பல்வேறுவிவகாரங்கள்குறித்துஅமெரிக்காவுடன்விரிவானபேச்சுநடத்தரஷ்யாதயாராகஇருக்கிறது. ரஷ்யாஅமெரிக்கா இடையேயான நல்லுறவு பன்னாட்டுப் பாதுகாப்பையும், உறுதித் தன்மையையும் உறுதிபடுத்துவதற்கான முக்கிய காரணி" என்று புடின் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

சிரியாவில்இருந்துஅமெரிக்கப்படைகள்திரும்பப்பெறப்படும் என்று ட்ரம்ப் அண்மையில் அறிவித்திருந்தார். இதற்கு உலகின் பலபாகங்களில் இருந்தும் கண்டனங்கள் குவிந்தன. சிரியாவில்இருந்துஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்புஇன்னும்தோற்கடிக்கப்படாத நிலையில் ட்ரம்பின் இந்த முடிவு பிற்போக்குத்தனமானது என்று ஜேர்மனி மற்றும் பிரான்ஸ் என்பன கூட்டாக விமர்சித்திருந்தன. எனினும் சிரியாவின் நெருங்கிய நட்புநாடாக இருந்துவரும் ரஷ்யா ட்ரம்பின் முடிவை ஆதரித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# பிளாஸ்ரிக்கை பயன்படுத்த தமிழக அரசு விதித்தது தடை

சென்னை, ஜன. 2
தமிழ்நாட்டில்நேற்றுமுதல், ஒரு முறை பயன்படுத்தித் தூக்கி யெறியும் பிளாஸ்ரிக் பொருள்களுக்கு மாநில அரசு தடை விதித்தது.



தமிழகத்தில் பிளாஸ்ரிக்கை தடை செய்யும் அறிவிப்பை கடந்த ஜூன் மாதம் 5ஆம் திகதி தமிழக அரசு வெளியிட்டது.
2019ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் தடிமன் வேறுபாடின்றி அனைத்துவிதமான பிளாஸ்டிக் பொருள்களையும் தடை செய்வதாக தமிழக முதல்வர் எடப்பாடி பழனிசாமி சட்டப் பேரவையில் அறிவித்தார்.


இந்த பிளாஸ்ரிக் தடை அறிவிப்பில்சிலபொருள்களுக்குமட்டும் விலக்கு அளிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது. வனத்துறை மற்றும் தோட்டக்கலைத்துறையில் நாற்றாங்காலுக்காக பயன்படுத்தப்படும்பிளாஸ்ரிக்பைகள் மற்றும் விரிப்புகள். ஏற்றுமதிக்காகமட்டுமேசிறப்பாகதயாரிக்கப்படும் பிளாஸ்ரிக் பைகள் மற்றும் அவற்றை உற்பத்தி செய்யும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் அமைக்கப்பட்டுள்ள நிறுவனங்கள், பால் மற்றும் பால் பொருள்களான தயிர், எண்ணெய், மருந்து மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான உறைகள் இந்திய தர நிர்ணய நிறுவனத்தால் சான்றளிக்கப்பட்ட மக்கி உரமாகும் தன்மைகொண்டபிளாஸ்ரிக்பைகள், உற்பத்தி தொழிற்சாலைகளில் பயன்படுத்தப்படும் சீலிடப்பட்ட பிளாஸ்டிக் உறைகள்ஆகியவற்றுக்குதடைவிதிக்கப்பட்டுள்ளன.

தடிமன்வேறுபாடின்றிமக்காதபிளாஸ்ரிக் பொருள்களான ஒற்றைப் பயன்பாடு பிளாஸ்ரிக்குகள், பிளாஸ்ரிக் பைகள், பிளாஸ்ரிக் குவளைகள், பிளாஸ்ரிக்தட்டுகள், தண்ணீர்பைகள், பிள்ளாஸ்ரிக்உறிஞ்சுகுழல்கள் (ஸ்ட்ரா), பிளாஸ்ரிக்கைப்பைகள் உள்ளிட்ட பொருள்களை விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் சேமித்து வைத்தல் தடை செய்யப்பட்டுள்ளன.

உலகநாடுகளைஅச்சுறுத்திக் கொண்டிருக்கும் இந்த பிளாஸ்ரிக்கழிவுகளின்அளவு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே இருக்கிறது.

இந்தியாவில் நாளொன்றுக்கு 25ஆயிரத்து940தொன்அளவுள்ள பிளாஸ்ரிக் கழிவுகள் உற்பத்தி செய்யப்படுவதாக மத்திய சுற்றுச்சூழல் துறை அமைச்சர் ஹர்ஷ் வர்தன் அண்மையில் தெரிவித்திருந்தார். 2016-17 ஆண்டில் மட்டும்தமிழகத்தில்79ஆயிரத்து 114 தொன் பிளாஸ்டிக் கழிவுகள் உற்பத்தி செய்யப்பட்டுள்ளன. இதையடுத்தே தமிழக அரசு இந்த நடவடிக்கையை மேற்கொண்டுள்ளது.

வாழையிலை, பாக்குமட்டை, காகித சுருள், தாமரை இலை, கண்ணாடி மற்றும்உலோகத்தால்ஆனகுவளைகள், மரப்பொருள்கள், காகித குழல்கள், துணி மற்றும் காகிதப் பைகள் உள்ளிட்டவை அடங்கிய பாரம்பரிய பொருள்களுக்குமக்கள்முன்னுரிமை வழங்க வேண்டும் என்று அரசின் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம)



ரஷ்யத்தலைநகர்மொஸ்கோவில் குளிர்காலத்தை முன்னிட்டு தற்போது பனிச்சிற்பப் பண்டிகை இடம்பெற்று வருகின்றது. அவ்வாறு அமைக்கப்பட்டுள்ள பனிச் சிற்பமொன்றின் ஒளிப்படமே இது. (ம)


# ஆப்கானில் 28ஆயுததாரிகள் கொன்றுகுவிப்பு

காபூல், ஜன. 2
ஆப்கானிஸ்தான் இராணுவம் நேற்றுமுன்தினம் நடத்திய வான்வழித்தாக்குதல்களில்28ஆயுததாரிகள் கொன்று குவிக்கப்பட்டனர்.

ஆப்கானிஸ்தானின் பல்வேறு பகுதிகளில் ஐ.எஸ்.ஐ.எஸ். அமைப்பு ஆதிக்கம்செலுத்திவருகிறது. அந்த நாட்டின்நங்கர்ஹார்நகரில்பதுங்கியிருந்த ஐ.எஸ்.ஐ.எஸ். ஆயுததாரிகளைஇலக்குவைத்துஆப்கானிஸ்தான் இராணுவம் நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியது. இந்தத் தாக்குதலில் 28 ஆயுததாரிகள் கொல்லப்பட்டனர் என்று ஆப்கானிஸ்தான் ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

உலகில் ஆகக்கூடிய பயங்கரவாத அச்சுறுத்தல்உள்ளநாடுகளில்ஒன்றான ஆப்கானிஸ்தான் உள்ளது. கிளர்க்கிச் குழுவான தலிபானும் அந்தநாட்டில்அண்மைக்காலமாக மிகையானஆதிக்கம்செலுத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ம)





# தொடர்ந்து வெடிக்கிறது கிராக்கதோவ் எரிமலை இந்தோனேசியாவில் தொடர்ந்து பெரும் அச்சம்!

யகார்தா, ஜன. 2
இந்தோனேசியாவில்ஏற்பட்டசுனாமிக்குக்காரணமான அனாக்கிராக்கதோவ்எரிமலைதொடர்ந்துவெடித்துவருவதால்அதன்லாவாகுழம்பு ஆபத்தானஉயரத்தைஅடைந்துள்ளதுஎன்றுஇந்தோனேசியஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

இதுகுறித்து ஊடகங்கள் தரப்பில், "இந்தோனேசியாவில்கடந்த ஞாயிற்றுக்கிழமை கடலின் அடியில் அமைந்துள்ள அனாக் கிராக்கதோவ் எரிமலை வெடித்து அதன் லாவா குழம்பு கடல் நீருடன் கலந்ததில் வெளிப்பட்ட ஆற்றலில்சுனாமிஏற்பட்டது. இதில்சுமார்450பேர்உயிரிழந்தனர். சுமார் 700 பேர் காயமடைந்தனர். இந்த நிலையில் அந்த எரிமலை தொடர்ந்து வெடித்து வருவதால் அதன் லாவா குழம்புகள் அதிகப்பட்ச உயரத்தை அடைந்துள்ளதாகவும் இதன் காரணமாக மீண்டும் மற்றொருசுனாமிதாக்கலாம்என்றும்அந்தப்பகுதியில்வசித்துவந்தமக்களுக்குஎச்சரிக்கைவிடுக்கப்பட்டுள்ளது" என்றுகுறிப்பிடப்பட்டுள்ளது. (ம)

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
விநியோகம் : 021-493 2222, 021 - 492 7450

செய்தி : uthayanprint@gmail.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

# முடிவின்றி நீளும் ஏக்கியராஜ்ஜிய குழப்பம்

புதிய அரசமைப்புக்கான வரைவு நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படாவிட்டாலும்கூட, கூட்டாட்சி அரசமைப்பு ஒன்று உருவாக்கப்படுவதை ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஒருபோதும் ஆதரிக்காது என்று அறிவித்திருக்கிறார் முன்னணியின் பொதுச் செயலர் மகிந்த அமரவீர. எதிர்வரும் பெப்ரவரி மாதம் 4 ஆம் திகதிக்கு முன்னதாக புதிய அரசமைப்பு வரைபை நாடாளுமன்றத்தில் முன்வைப்பது என்று ஐக்கிய தேசிய முன்னணி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு உறுதியளித்த நிலையில், அதற்கு முழு எதிரானநிலைப்பாட்டை எடுப்பதில் சுதந்திரக்கட்சியை முதன்மை அணியாகக்கொண்ட சுதந்திரமுன்னணி தீவிரமாக உள்ளது. அதனோடு இணைந்து கொண்டுள்ளமகிந்த அணியினர்ஏற்கனவே அந்தநிலைப்பாட்டை எடுத்துவிட்டனர்.

தமது முன்னணி ஆதரவளித்த மகிந்த தரப்பினர் மீண்டும் ஆட்சியை, அதிகாரத்தைப் பிடிப்பதைத் தடுத்து, எதிர்த்து, கடுமையாக நீதிப் போராட்டம் நடத்தி ரணிலை மீண்டும் அரியாசனம் ஏற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரின் தீர்வை எதிர்ப்பதில், அதுவும் மிகத் தீவிரமாக எதிர்ப்பதில் தவறேதும் இல்லை என்கிற தொணி, இன்னும் சொல்லப்போனால் கூட்டமைப்பின் இந்தச்செயலுக்கான எதிர்ப்பை வெளிபடுத்தும் தொனி மகிந்த, மைத்திரி தரப்பிடம் இருந்து வெளிப்படுகின்றது.

அதற்காக முதலில் அவர்கள் புதிய அரசமைப்பு முயற்சியை முழுமையாக ஆதரித்தார்கள் என்று எடுத்துக்கொண்டுவிடக்கூடாது. இதே எதிர்ப்பை நாசூக்காக வெளிப்படுத்தி வந்தார்கள். முட்டுக்கட்டைகளைப் போட்டுகாலத்தைக்கடத்தி வந்தார்கள். இந்த முயற்சியை முறியடிப்பதற்காகவும்தான், ஐப்பசி 26 அரசியல் குழப்பம் உருவாக்கப்பட்டது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனே ஏற்றுக்கொண்டிருந்தார் என்பதையும் கவனத்தில்கொள்ள வேண்டும். தமிழ்த் தேசியக் கூட்டமைப்புத் தமக்கு ஆதரவளிக்கவில்லை என்பதனால், இப்போது வெளிப்படையாகவே தமது எதிர்ப்பை, காழ்ப்புணர்வை வெளிக்காட்டுகின்றார்கள். அவ்வளவே!

மைத்திரி மகிந்த தரப்பினர் அதிகாரத்தை மீண்டும் முழுமையாகக் கைப்பற்றுவதற்குக் கூட்டமைப்பு ஆதரவளிக்கவில்லை என்கிற கோபத்தில் அவர்கள் எதிர்க்கிறார்கள் என்றால், கூட்டமைப்புதானாகவே முன்வந்து போராடி, எதிர்க்கட்சியில் இருந்தாலும் ஆளும் கட்சிக்கு ஆதரவளித்து ஆட்சியைப் பறித்து ஒப்படைத்தரணில்விக்கிரமசிங்கவும்அவரதுகட்சியினரும்கூட கூட்டமைப்புக்குச்சாதகமானநிலைப்பாட்டை வெளிப்படுத்தவில்லை என்பதுதான் மிகப் பெரும் சோகம்.

"ஏக்கிய ராஜ்ஜிய" என்கிற சிங்களப் பதத்தின் கருத்து தமிழில் ஒருமித்த நாடுதான் என்று தமிழர்களை நம்பவைப்பதற்கு கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் தலையால் நடக்கும் போதே, அது அப்படியல்ல, ஏக்கிய ராஜ்ஜிய என்பது ஒற்றையாட்சி என்பதைத்தான் குறிக்கும், இந்த அர்த்தம் மாறுபட்டுவிடாமல் சிங்களம், தமிழ் என இரு மொழிகளிலுமே எழுதுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும் சபை முதல்வருமான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்திருந்தார்.

கண்டியில் மாகநாயகர்களைச் சந்தித்த தலைமை அமைச்சர் ரணில் விக்கிரமசிங்க இப்படித் தெரிவித்ததைத் தொடர்ந்து, கிரியெல்லவின் கருத்தும் வந்திருப்பது இந்த விடயத்தில் தமிழர்கள்எதிர்பார்க்கும்திசையை நோக்கியல்லாமல் பெரும்பான்மைச் சிங்கள, பௌத்த வாக்காளர்களின் திசைநோக்கியே நகர்வுகள் இருக்கும் என்பதைத் தெளிவாக்குகின்றது.


ஏக்கிய ராஜ்ஜிய என்பது மும்மொழிகளிலும் அப்படியே குறிப்பிடப்படும் என்பதை மகாநாயகர்களிடம் கூறியதான் ஒருமித்த நாடுஎன்பதும்மும்மொழிகளிலும்அப்படியேகுறிப்பிடப்படும் என்பதைக் கூற மறந்துவிட்டேன் என்று ஒரு விளக்கத்தை தலைமை அமைச்சர் தெரிவித்தார் என்றொரு விளக்கம் வழங்கப்பட்டதாகக்கூறப்படுகின்றது. தொடக்கத்தில் இருந்தே இது போன்று மீனுக்குத்தலையும்பாம்புக்குவாலும்காட்டும்விளையாட்டுக்காகத்தான் ஏக்கிய ராஜ்ஜிய என்கிற சொல்லை மாற்ற மறுக்கிறார்கள் என்று சுட்டிக்காட்டப்பட்டு வந்தது. அதை மறுதலித்தவர்கள் இப்போது ரணில் விக்கிரமசிங்க சொல்லும் விளக்கத்தைஏற்றுக்கொள்வது என்பது அபத்தத்திலும்அபத்தம்.

இதுபோன்று இருதரப்புக்கும் ஏதோ ஒன்றைச்சொல்லி எப்படியாவது ஓர் அரசமைப்பைப் புதிதாகக் கொண்டு வந்துவிடலாம் என்று இந்த அரசியல்வாதிகள் நினைத்தால் அது ஒருபோதும் அடிப்படைப் பிரச்சினைக்கான தீர்வாக இருக்காது. பதிலுக்கு பிரச்சினையை மேலும் சிக்கலானதாகவே ஆக்கிவிடும்.

# மாட்டறைதலை மறக்காதிருப்போம்

ந. சதாசிவ ஐயர்

1860ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையில் காணி தொடர்பான பதிவுகள் ஆரம்பமாகின. ஆவணப் பதிவுக் கட்டளைச் சட்டம் உருவாக்கப்பட்டு உறுதிகள் பதிவு செய்தல் ஆரம்பிக்கப்பட்டது. எனினும் உறுதி எழுதும் முறையானது ஓலையில் எழுதும் முறை பயன்பாட்டிலிருந்த காலத்திலேயே ஆரம்பமாகிவிட்டது. தற்போதும் ஓலையில் எழுதப்பட்ட உறுதிகளை ஓரிரு காணிப் பதிவகங்களில் காணக்கூடியதாக உள்ளது. காணிப் பதிவுச் சட்டம் ஆரம்பிக்கப்பட்டு, காணிப் பதிவகங்கள் உருவாக்கப்பட்டு, உறுதிகள் பதிவு ஆரம்பமாவதற்கு முன்னரே ஒரு காணியின் கைமாற்றங்களை அறிந்து கொள்ளும் வகையில் நமது முன்னோர்களால் எழுதப்படாத சட்டமாகக் கைக் கொள்ளப்பட்டு வந்த முறையே மாட்டறைதலாகும்.



### மாற்றங்களைக் குறிப்பிடுதல் 'மாட்டறைதல்' ஆகிற்று

குறிப்பிட்டதொரு காணி ஈடுவைக்கப்பட்டால் அதன் உறுதியின் மூலப் பிரதியில் அந்த ஈட்டு உறுதி இலக்கம் திகதி குறிப்பிடப்பட்டு நோத்தாரிசின் பெயருடன் எழுதப்படும். ஈடு மீட்கப்பட்டால் அதுபற்றியும் குறிப்பிடப்படும். ஒரு பகுதி விற்கப்பட்டால், விற்கப்பட்ட அளவு, உறுதி இலக்கம், திகதி, நொத்தாரிசு பெயர் என்பன குறிப்பிடப்படும். அத்தோடு விற்கப்பட்டாலோ, நன்கொடையாகக் கொடுக்கப்பட்டாலோ, சீதனமாகக் கொடுக்கப்பட்டாலோ உரிய குறிப்பு எழுதப்படும். இவ்வாறே தொடர்ந்து வரும் உறுதிகளின் மூலப் பிரதிகளிலும் எழுதப்படும். இதனால் ஒரு காணி தொடர்பிலான வரலாற்றை உறுதிகளின் மூலப் பிரதிகளைப் பார்த்து அறிந்து கொள்ள முடியும். இதன் மூலம் உறுதியின் மூலப் பிரதிகள் அந்தக் காணியின் வரலாற்றை விவரிக்கும் ஆவணங்களாக விளங்கின. இதனையே மாட்டறைதல் என்பர். அதாவது மாற்றம் பற்றிக் குறிப்பிடல் 'மாற்று அறைதல்' என்றிருந்து, அது பின்னர் மாட்டறைதல் என மருவியது. எனவே உறுதியின் மாற்றம் குறிப்பிடல் (அறைதல்) என்பது மாட்டறைதல் எனப் பொருள்படும்.

> மாட்டறைதல் இருந்து காணிப் பதிவகப் பதிவோ இணைப் பிரதியோ இல்லாத நிலையில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் சம்பந்தப்பட்ட நொத்தாரிசிடம் அதன் பிரதியைப் பெறக்கூடியதாக இருக்கும். அவர் காலமாகிவிட அவரின் மக்கள் மருமக்களில் எவராவது ஒருவர் பிரசித்த நொத்தாரிசாக இருந்தால் அவர்களிடம் குறித்த பிரதியைப் பெறக்கூடியதாக இருக்கும். தற்போது மாட்டறைதலைக் கைக்கொள்வது அருகியுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. காணி உரித்தாளர்களின் நன்மை கருதியும், பிரசித்த நொத்தாரிசுமாரின் வசதிகருதியும் உறுதியின் மீதான மாட்டறைதலை தவறாது மேற்கொள்வது பலருக்கும் நன்மை பயப்பதாக அமையும்.

### மூலப் பிரதிகள் மூலம் வெளிப்படும் காணி வரலாறு

மூலப்பிரதிகளைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்வதாலும் அந்தப் பதிவு தொடர்பான விவரங்கள் மூலப்பிரதியிலேயே குறிப்பிடப்படுவதாலும் மூலப் பிரதிகள் இவ்வாறாகக் காணியின் வரலாற்றை அறிய உதவுகின்றன. எனினும் நாம் அநுபவித்த காலத்தின் கோலத்தால், போர் என்கிற பேரிடரால் காணி விவரங்கள் தொடர்பறுந்து போய் நிற்கின்றன. மூலப் பிரதிகள் காணிப் பதிவேடுகள் இல்லாமல் போயுள்ளன. எனினும் முறைப்படி மாட்டறைதல் செய்யப்பட்ட மூலப் பிரதிகளை உடையோர். அதன் மூலம் பெறக்கூடிய உறுதிகளையும் வரலாற்றுத் தாள்களையும் இனங்காண முடியும்.

### மாட்டறைதலின் அனுகூலம்

மாட்டறைதல் இருந்து காணிப் பதிவகப் பதிவோ இணைப் பிரதியோ இல்லாத நிலையில் உயிர் வாழ்ந்து கொண்டிருக்கும் சம்பந்தப்பட்ட நொத்தாரிசிடம் அதன் பிரதியைப் பெறக்கூடியதாக இருக்கும். அவர் காலமாகிவிட்டால், அவரின் மக்கள் மருமக்களில் எவராவது ஒருவர் பிரசித்த நொத்தாரிசாக இருந்தால் அவர்களிடம் குறித்த பிரதியைப் பெறக்கூடியதாக இருக்கும். தற்போது மாட்டறைதலைக் கைக்கொள்வது அருகியுள்ளமையைக் காணக்கூடியதாக உள்ளது. காணி உரித்தாளர்களின் நன்மை கருதியும், பிரசித்த நொத்தாரிசுமாரின் வசதிகருதியும் உறுதியின் மீதான மாட்டறைதலை தவறாது மேற்கொள்வது பலருக்கும் நன்மை பயப்பதாக அமையும். அத்துடன் தாயுறுதியில் மாட்டறைதல் மேற்கொள்ளப்பட்டால் தெரிந்தோ, தெரியாமலோ அல்லது மோசடியாகவோ மீளவும் கைமாற்றம் நிகழாமல் தடுக்க முடியும்.

*கட்டுரையாளர்*
*ஓய்வு பெற்ற*
*மேலதிகப் பதிவாளர் நாயகம்*



# அரசியல் வரலாற்றில் மோசமான இடத்தை நிரப்பப் போகிறார் மைத்திரி!

சேரலாதன்

தமக்கு ஏற்பட்ட மன அழுத்தத்தைச் சீர் செய்யும் பொருட்டு அரச தலைவர் மைத்திரிபால வெளிநாடு ஒன்றுக்குச் சென்றுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்தவருட முடிவில் சுமார் 50 நாள்கள் நீடித்த அரசியல் குழப்பங்கள் தற்காலிகமாகத் தணிந்துள்ளனவே தவிர அவற்றுக்கு நிரந்தரமான தீர்வு எதுவுமே எட்டப்படவில்லை. இந்தக் குழ்பங்கள் அனைத்துக்கும் அரச தலைவரே காரணமாக இருந்துள்ளார். தலைமை அமைச்சர் ரணில் விக்கிரம சிங்கவுடனான தனது முரண்பாடுகளை மனதில் வைத்துக்கொண்டு அவரைப் பழிவாங்கும் நோக்குடன் அவர் மேற்கொண்ட முயற்சிகள் தோல்வியில் முடிவடைந்ததால் அரச தலைவர் மன அழுத்தங்களுக்கு உள்ளாகியிருக்கலாமென நம்பப்படுகின்றது. இந்த விடயத்தில் அரச தலைவர் மட்டுமின்றி முன்னாள் அரச தலைவரான மகிந்த ராஜபக்சவும் தவறிழைத்தமை தெளிவாகத் தெரிகின்றது. இந்த இருவருமே நாட்டின் அரசமைப்பை மீறிச் செயற்பட்டுள்ளனர். நாட்டுக்கு அபகீர்த்தியை ஏற்படுத்தும் வகையில் நடந்து கொண்டுள்ளனர்.

**அரச தலைவர் நிகழ்த்திய இமாலயத் தவறுகள்**

நாடாளுமன்றத்தைக் கலைத்தும் மகிந்த ராஜபக்சவைத் தலைமை அமைச்சர் பொறுப்பில் அமர்த்தியதும் அரச தலைவர் புரிந்த இமாலயத் தவறுகளாகும். இறுதியில் உயர் நீதிமன்றம் இந்த விடயத்தில் தலையிட வேண்டிநேரிட்டது. அரச தலைவரின் ஆணைகள் செல்லுபடியற்றவையாக்கப்பட்டன. அத்துடன் பெருத்த அவமானத்துடன் மகிந்த ராஜபக்ச பதவியிலிருந்து விலகிச் சென்றார். ரணில் விக்கிரமசிங்க தமது பதவியில் தொடர்ந்தார். இவை அரச தலைவருக்கு நாட்டு மக்களிடையே அபகீர்த்தியை ஏற்படுத்திவிட்டன. அயல் நாடுகளின் கணிப்பில் நாட்டின் நற்பெயருக்குக் களங்கத்தையும் ஏற்படுத்தி விட்டது. சில நாடுகள் பொருளாதாரத் தடையை விதிப்பது தொடர்பாகச் சிந்திக்குமளவுக்கு நிலைமை மோசமான கட்டத்தை எட்டியது.

**மைத்திரிபாலவின் அரசியல் நுழைவு**

அரச தலைவர் மைத்திபால சிறிசேன தமது சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்திப் பதவிக்கு வந்த ஒருவரல்ல. பல தரப்பினரிடமிருந்து கிடைத்த ஆதரவின் காரணமாகவே அரச தலைவர் பதவியில் அவரால் அமர முடிந்தது. ஆனால் அவர் இவற்றையெல்லாம் சிந்திப்பவராகத் தெரியவில்லை. தனது மனதில் தோன்று வதை நடைமுறைப்படுத்தும் ஒருவராகவே அவர் காணப்படுகின்றார். இலங்கையில் நீதித்துறை நேர்மையுடன் செயற்பட்டிருக்காது விட்டால் அவர் ஏற்படுத்திய குழப்பங்கள் நீடிக்கவே செய்திருக்கும். அரச தலைவர் என்கிற உயர் பீடத்தில் நிலைத்தி ருப்பவர் செய்த பொறுப்பற்ற செயல் நீதிமன்றத்தை நாடுமளவுக்கு இருந்துள்ளது. உயர் தரப்பினர் இவ்வாறு செய்படுவார்களானால், அரசும், அரச தலைவரும் நாட்டுக்குத் தேவையற்ற நிலை வந்துவிடும். அரச தலைவர் தவறாகச் செயற்பட்டதன் காரணமாகவே உயர் நீதிமன்றம் தலையிட்டு நீதியை நிலைநாட்ட வேண்டிய தேவை ஏற்பட்டது.


**இலங்கையின் நீதித்துறை இனரீதியான சிந்தனைக்குட்பட்டது**

இலங்கையின் நீதித்துறை இனரீதியான சிந்தனைக்கு உட்பட்டதேன உயர்நீதி மன்ற முன்னாள் நீதியரசரும், வடக்கு மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சருமான சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்தமை இந்த இடத்தில் கவனத்தில் கொள்ளத்தக்கது. போர்க்குற்ற விசாரணை தொடர்பில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறியிருக்கிறார். ஆனால் பன்னாட்டு நீதித்துறையினர் போர்க் குற்றங்கள் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்வதைத் தென்பகுதி அரசியல் வாதிகள் எவலருமே ஏற்றுக்கொள்ளவில்லை. சபாநாயகர் கரு ஜெயசூரியவும் இதில் அடங்குகின்றார்.

**எதிர்க்கட்சித் தலைவர் பதவிக்கான சர்ச்சை**

தலைமை அமைச்சர் தொடர்பான குழப்பங்களுக்குத் தற்போது முற்றுப்புள்ளி இடப்பட்ட போதிலும் எதிர்க்கட்சித் தலைவர் பதவி தொடர்பில் சர்ச்சைகள் நீடிக்கவே செய்கின்றன. தமிழர் ஒருவர் அந்தப் பதவியில் நீடிப்பதைத் தென்பகுதி அரசியல்வாதிகள் ஏற்றுக்கொள்ளாமையே இதற்கு முதன்மைக் கார்ணமாகும். மகிந்த அணியை அரச தலைவர் கட்டுப்படுத்துவதன் மூலமாக எந்தவொரு சர்ச்சைக்கும் முடிவுகட்ட முடியும். ஆனால் அவ்வாறு செய்வதற்குத் அவருக்குத் துணிவுள்ளதாகத் தெரியவில்லை. அரச தலைவர் தமது மன அழுத்தத்தை மட்டுமே கவனத்தில் கொண்டு செயற்படாமல் நாட்டு மக்களையும் ஒருகணம் சிந்தித்துப் பார்க்க வேண்டும். தமது பதவிக்காலம் முடிவடை வதற்குள் அவர் நல்லமுறை யில் செயற்படாவிட்டால் எதிர்காலத்தில் இந்த நாட்டின் அரசியல் வரலாற்றில் மோசமான பக்கங்களை நிரப்பிய அரசியல் தலைவராகவே அவர் பேசப்படுகிறார்.

> அரச தலைவர் மைத்திபால சிறிசேன தமது சொந்தச் செல்வாக்கைப் பயன்படுத்திப் பதவிக்கு வந்த ஒருவரல்ல. பல தரப்பினரிடமிருந்து கிடைத்த ஆதரவின் காரணமாகவே அரச தலைவர் பதவியில் அவரால் அமர முடிந்தது. ஆனால் அவர் இவற்றையெல்லாம் சிந்திப்பவ ராகத் தெரியவில்லை. தனது மனதில் தோன்று வதை நடைமுறைப்படுத்தும் ஒருவராகவே அவர் காணப்படுகின்றார்.



## ஆசிரியருக்கான கடிதம்

# பரீட்சையும் நம்மவர்களும்

அண்மையில் வெளியாகிய உயர்தரப் பரீட்சை முடிவுகள் சமூகத்தில் சக்கைப் போடு போட்டுக் கொண்டிருக்கின்றன. "தமிழ் மாணவர்கள் இந்தப் பரீட்சையில் பின் தங்கியிருக்கிறார்கள் அதற்குக் காரணம் பல்கலையிலிருந்து வெளியேறிய பட்டதாரிகள் வேலையற்று இருப்பதே" என்று கருத்துக்கள் எழுந்துள்ளன. ஆக, இலங்கையின் கல்வி மற்றும் அதனோடு ஒட்டிய நிர்வாகக் கட்டமைப்புக்கள், ஒழுங்கமைப்புக்கள் சீரற்று இருக்கின்ற இந்த நிலையில், வெளிவந்திருக்கின்ற குறித்த பரீட்சை முடிவுகள் கவனத்துக்குரியனவாகப் பேசப்படுகின்றன. குறித்த ஒரு கேள்விக்குப் பதிலளித்து அதற்குப் புள்ளியிட்டு அந்தத் தரப்படுத்தலில் முன்னிற்பவர்களைக் கெட்டிக்காரர்களாகக் கொண்டாடுவதே கல்விப் புலத்தினர் காலம் காலமாகக் கடைக்கொண்டு வருகிற பரீட்சைகளின் நிலையாக இருக்கிறது. ஆனால், பரீட்சையில் தோற்றவர்கள் பிற்பட்ட காலத்தில் முதலாளிகளாகவும், வெற்றியடைந்தவர்கள் அவர்களுக்குக் கீழே தொழிலாளர்களாகவும் இருக்கும் நிலைக்குச் சாத்தியம் உள்ளது. இப்படிப் பல முரண்கள் இதற்குள் ஒளிந்து கிடக்கின்றன. இந்தப் பரீட்சைகளின் முடிவில் பட்டங்களும்சான்றிதழ்களும்பெற்றுக் கொண்டு பெருமையோடு உயர்ந்திருக்கும் கூட்டத்தினரும் இருக்கிறார்கள். கல்வியின் முடிவில் தொழில் வாய்ப்பளிப்பதில் தமது ஆதரவாளர்களையே அரசியல்வாதிகள் தெரிவு செய்கிறார்கள். நல்லன சிந்தித்துச் சுயநலமற்ற செய்கைகளை முன்னெடுக்காமையாலேயே நாடு நாறிக் கிடக்கிறது. நிலமை இப்படியிருக்கப் பரீட்சையைக் கொண்டாடும் ஒரு மடமைச் சமூகம் நமக்குள் இருந்து வருகிறது என்பது கவலையளிக்கும் விடயமாகும்.

*தனுஜா - யாழ்ப்பாணம்.*

## வாசகர்களே!

ஆசிரியருக்கான கடிதம் பகுதிக்கு வந்துசேர்கின்ற பல கடிதங்கள் எழுதுபவரின் சுயவிவரங்கள் இல்லாத காரணத்தால் பிரசுரிக்க முடியாத நிலையில் இருக்கின்றன. ஆகையால் தாங்கள் ஆசிரியருக்கு எழுதுகின்ற கடிதத்தில் உங்களுடைய பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம், மின்னஞ்சல் பயன்படுத்துபவராக இருந்தால் மின்னஞ்சல் முகவரி போன்றனவற்றைத் தவறாது குறிப்பிட்டு அனுப்பி வைக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகி றீர்கள். தங்களின் பெயர் விவரங்களை வெளிப்படுத்த வேண்டாம் என்றால் அது குறித்துக் குறிப்பிடுங்கள். மேற்குறித்த விடயங்கள் இணைக்கப்படாத கடிதம் பிரசுரிக்கப்ப டாது என்பதைக் கவனத்தில் கொள்க! எழுதுகின்ற விடயத்தை உறுதிப்படுத்தும் வகையிலான ஆவணங்கள் ஏதும் இருந்தால் அவற்றை இணைத்து அனுப்புவதும் சிறந்தது.




உதயன்

புதன் பொய்கை

ஜனவரி 02, 2019

@UthayanPrint


பேராசிரியர் சி.மௌனகுரு

# "கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் கலை எங்களை நெருக்கமாக வைத்திருந்தது"

பேராசிரியர் சண்முகதாஸ் வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் 1950ஆம் ஆண்டுகளில் எனக்கு மூன்று வகுப்புகள் மூத்தவராகக் கல்வி பயின்றவர்.

அந்தப் பாடசாலையுள் தயங்கித் தயங்கிக் கண் விழிக்காத பூனைக் குட்டியாகக் காலடி வைத்தபோது எனக்கு வயது 11. சண்முகதாஸுக்கு வயது 14. தன்னுடைய இனிய குரலால் அனைவரையும் வசீகரித்து அனைவராலும் அறியப்பட்ட சிறுவனாக இருந்தார் சண்முகதாஸ். 'அண்ணன்' என்றுதான் நாம் அவரை அன்று அழைத்தோம். என்னைபோல அவரும் கட்டையானவர் வண்டுகள் போல நாம் அங்கு ஓடித்திரிவோம்.

6 வருடங்கள் அந்த விடுதியில் நாங்கள் ஒன்றாக வளர்ந்தோம். 1954 ஆம் ஆண்டு மஹா பாரதம் தழுவிய 'நச்சுப் பொய்கை' எனும் பாடசாலை நாடகம் ஒன்றில் 15 வயது சண்முகதாஸ் கதாயுதம் தாங்கி 'ஹா ஹா' என்று சப்தமிட்டபடி வீமனாக மேடைப்பிரவேசம் செய்தமையும், கையால் தண்ணீர் பருகாது பொய்கையிலிருந்த தண்ணிரை கதையினால் அடித்து அடித்து வாயால் ஆவ் ஆவ் எனப் பருகிய காட்சியும் இப்போது ஞாபகம் வருகின்றன.



0000

திருகோணமலைக் கிராமம் ஒன்றிலிருந்து ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பெற்று அந்தக் கல்லூரிக்கு அவர் வந்திருந்தார். அவர் வந்து மூன்று வருடங்களின் பின்னர் நான் ஐந்தாம் வகுப்புப் புலமைப் பரிசில் பெற்று, புலமைப்பரிசில் பெற்றவர்கள் பயில்வதற்காகக் அதற்று அதற்கு அடித்தளமிட்டவரான சி.டபிள்யூ. டபிள்யூ கன்னங்கராவின் திட்டத்தில் உருவான அந்த

> பேராசிரியர் அ.சண்முகதாஸ் இன்று அமுதவிழா ஆண்டுக்குள் காலடி பதிக்கிறார். அவருடைய தமிழ், கலைப்பணிகளைத் தமிழ் உலகம் பாராட்டுவதற்குக் கடமைப்பட்டுள்ளது.

மத்திய கல்லூரியில் கல்வி பயிலச் சென்றேன். சண்முகதாஸ் அவரது வகுப்பில் என்றும் முதன் மாணவர். அவருடன் போட்டிக்கு நின்றார் அருணாசலம்என்றமாணவர். படிப்பில் இருவரும் தீரர். அருணாசலம் சண்முகதாஸின் உயிர் நண்பன். திருகோணமலை - திரியாயைச் சேர்ந்த இருவரும் கெட்டிக்காரர்கள்.

இணைபிரியா இரட்டையர்கள். அவர்களை எமக்கு முன்னுதார ணங்களாக ஆசிரியர்கள் காட்டுவர். இருவரும் ஒரு நாள் சாரண இயக்க விடயமாகச் சென்றபோது ஒருகுளத்தில் இருவரும் சிக்குப்ப ட்டுக்கொண்டனர் அருணாசலம் காலமானர், சண்முகதாஸ் அதிஸ்டவசமாகத் தப்பித்துக்கொண்டார். அருணாசலத்தின் உடல் பாடசாலை மண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த போது சண்முகதாஸ் நண்பனுக்காக இரங்கிக் குலுங்கிக் குலுங்கி அழுத குரல் இன்னும் காதில் கேட்கிறது.



மட்டக்களப்பு - வந்தாறுமூலை மத்திய கல்லூரியில் கல்விப் பொதுச் சாதாரண வகுப்புத் தேறியாயிற்று. உயர்தர வகுப்பு அங்கு இன்மையால் மட்டக்களப்பு சிவானந்தாக் கல்லூரியில் இணைந்து அங்குள்ள விடுதியில் சேர்ந்து இரண்டு வருடங்கள் கல்வி கற்றார் சண்முகதாஸ், அது அவருக்கு இன்னுமோர் அனுபவமாயிற்று. இராமகிருஸ்ண மிசன் வளர்ப்பு அவரை மேலும் பதப்படுத்தியது. வளப்படுத்தியது. அங்கிருந்து பல்கலைக் கழகத்துக்குத் தெரிவாகிப் பேராதனைப் பல்கலைக்கழகம் சென்றார். அங்கு அவர் பேராசிரியர் கணபதிப் பிள்ளை, வித்தியானந்தன், கைலாசபதி, செல்வநாயகம் ஆகியோரின் மிக விருப்புக்குரிய மாணவன் ஆனார்.

**மறக்க முடியாத மேடை அனுபவம்**

1961ஆம் ஆண்டில் அவர் பேராதனைப் பல்கலைத் தமிழ்ச் சங்கத் தலைவரயிருந்தார். அப்போது, அவர் மாணவர், அவர் தலைமையில் பட்டப் பகலில் பாவலர்க்குத் தோன்றுவது எனும் கவி அரங்கு நடைபெற்றது. அந்தக் கவி அரங்கில் முதற் பரிசு பெற்ற என் கவிதையை நான் அரங்கேற்றினேன். மூன்றாவது பரிசு பெற்ற அவரது கவிதையை மனோன்மணி முருகேசு அரங்கேற்றினார். இவரே பின்னர் மனோன்மணி சன்முகதாஸ் ஆனார். அது ஒரு காதல் காவியம். பேராசிரியர் வித்தியானந்தன் 1960களில் கூத்து மீளுருவாக்க இயக்கம் ஆரம்பித்தபோது அதன் உள் விசைகளில் சண்முகதாஸும் ஒருவரானார். 1960களில் பேரா.வித்தியானந்தன் தயாரிப்பில் உருவான கர்ணன் போர் நாடகத்தில் சண்முகதாஸ் கிருஸ்ணனாக வர நான் கர்ணனாக வந்து இருவரும் பல மேடைகளில் ஆடிப் பாடியமை ஞாபகம் வருகிறது. 1963ஆம் ஆண்டு நொண்டி நாடகத்தில் அவர் முதன்மைப் பாடகர், பாடல் அவரது பலம். ஆடல் எனது பலம். இவை இரண்டும் இணைந்தன. இராவணேசனில் 1964ஆம் ஆண்டில் இராவணனாக நான் அவரின் கணீர் என்ற குரலின் பின்னணியில் இராமனுக்கு எதிராக ஒன்றன் பின் ஒன்றாகப் படைகளை அனுப்புவேன். அவர் தனது உச்சக் குரலில் விருத்தம் ஆரம்பிப்பார். ஒவ்வொரு சொல்லாக அழுத்தி அழுத்தி உணர்ச்சி பாவத்தோடு விருத்தம் சொல்ல அதற்கு நான் அபிநயித்து ஆட, ஆஹா! மறக்கமுடியாத மேடை அனுபவம் அது!

**விரிவுரையாராக உயர்வு...**

அதுவோர் அற்புதமான காலம். அந்தப் பாடல், ஆடல் இணைப்பு ஞாபகம் வருகிறது. அந்தக் காட்சியை அனைவரும் இரசிப்பர். அதன் முதல் இரசிகையும் பாராட்டுநரும் பேரா.வித்தியானந்தனின் மனைவி கமலா அக்கா. பேராசிரியர் வித்தியா னந்தனின் ஆலோசனையுடனும் பணிப்பின் பேரிலும் நான் இராவணேசன் நாடகத்தை 1964ஆம் ஆண்டில் எழுதினேன். அதை அருகில் இருந்து அவதானித்து அலோசனைகள் சொன்னவர் சண்முகதாஸ். தமிழ்ச் சிறப்புப் பாட நெறியில் முதல் வகுப்பில் சித்தி பெற்ற சண்முகதாஸ் 1965ஆம் ஆண்டில் பல்கலைக் கழகத்தில் எனது விரிவுரையாளரும் ஆனார். நானும் அவருடைய மனைவியார் மனோன்மணியும் அவரிடம் அன்று புதுமைப்பித்தன் கதைகளும், தண்டியலங்காரமும் பயின்றோம். மிகச் சிறந்த விரிவுரையாளர் அவர். பல மணிநேரம் நூல் நிலையத்தில் உழைத்து அழகாகவும். ஆழமாகவும் விரிவுரைகளைத் தயாரித்து வந்து உரையாற்றுவார்.

இது அன்றைய விரிவுரையாளர்களின் இயல்பு. அவரின் பலம் அவரது கணீரென்ற குரல். அந்தக் கணீர்க் குரல் விரிவுரைகள் ஞாபகம் வருகின்றன. அந்தக் காலத்தில் அவருடன் இணைந்து கண்டி, கம்பளை, தெல்தெனிய ஆகிய இடங்களில் பாரதி விழா, வாணிவிழா ஆகியவற்றுக்குச் சென்று பேசியமை ஞாபகம் வருகிறது. இவற்றை ஒழுங்கு செய்து எம்மை அனுப்பியவர் பேராசிரியர் வித்தியானந்தன். சிலவேளைகளில் அவரும் பங்கு கொள்வார் சண்முகதாஸின் உரை பாட்டு முறையும் கலந்ததாக இருக்கும். மிகக் கவர்ச்சிகரமானதாகவும் இருக்கும்.



*1986ஆம் ஆண்டில் மீண்டும் இராவணேசனை மேடையிட ஊக்கம் தந்து, தான் அதில் பின்னணி பாடுகிறேன் எனக் கூறி, அதை இன்னும் புதிதாக எழுத வைத்தார் சண்முகதாஸ். அதை மீண்டும் தயாரிக்க அந்தப் பிரதியைத் தட்டச்சுச் செய்து கையில் எடுத்துக்கொண்டு வந்த அந்தக் காலங்கள் ஞாபகம் வருகின்றன. 1991ஆம் ஆண்டில் நான் கிழக்குப் பல்கலைக் கழகம் வந்து விடுகிறேன். கிழக்குப் பல்கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட இராவணேசனை 2005ஆம் ஆண்டு யாழ் பல்கலைக் கழகத்தில் நாம் மேடையேற்றியபோது அருமையானதோர் அறிமுக உரையை அதற்கு வழங்கிப் பழைய இராவணேசன் காலங்களை நினைவு கூர்ந்தார்.*

**பேராதனையில் நிரந்தர விரிவுரையாளர்**

சண்முகதசுக்கு நாலாயிரத் திவ்விய பிரபந்தம் மீது பெரும் காதல். ஆழ்வார் பாடல்களை, முக்கியமாகப் பெரியாழ்வார், திருமழிசை ஆழ்வார், ஆண்டாள் பாடல்களை மேற்கோள் காட்டி அவர் மலைநாட்டில் கோவில்களில் நிகழ்த்திய உரைகள் ஞாபகம் வருகின்றன. தற்காலிக விரிவுரை யாளராக இருந்த அவரை யாழ்ப்பாணம் -வட்டுக்கோட்டைக் கல்லூரி நிரந்தர விரிவுரையாளராக ஏற்றுகொண்டது. வட்டுக்கோட்டைக் கல்லூரியில் கற்பித்த அவரை மீண்டும் பேராதனைப் பலகலைக்ழகம் நிரந்தர விரிவுரையாளராக ஏற்றுக்கொண்டது. அங்கிருந்து 1967ஆம் ஆண்டில் உயர் கல்வி பெறுவதற்காக லண்டன் பயணமானார். பயணத்துக்கு முன்னர் தனது ஆய்வுக்கான தகவல்கள் சேகரிக்க மட்டக்களப்புக்குக் களப் பணிக்காக வந்தார். அவரை நான் பல கிராமங்களுக்கும் அழைத்துச் சென்றேன். அந்தக் கள ஆய்வு பெரியதோர் அனுபவம், மிகச் சுவராஸ்யமான அனுபவங்களை அங்கு நாங்கள் பெற்றோம்.

**தமிழ்த் துறைத் தலைவராக யாழ்ப்பாணப் பல்கலையில்**

1977களில் பேராசிரியர் கைலாசபதியின் அழைப்பை ஏற்றுச் சண்முகதாஸ் பேராதனைப் பல்கலைக் கழகத்திலிருந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் வருகிறார். தமிழ்த் துறைத் தலைவர் ஆக்கப்படுகிறார். கைலாசபதியுடன் இணைந்து யாழ்ப்பாணப் பல்கலைக் கழகக் கலைப் பீடத்தை வளர்ப்பதற்கு அவர் ஆற்றிய பணி இன்னொரு கதை. சண்முகதாசுடன் யாழ்ப்பாணத்தில் பணியாற்றும் வாய்ப்பு எனக்கு 1978ஆம் ஆண்டில் கிடைத்தது. அப்போது அவர் யாழ்பாணத்தில் தமிழ்த்துறைத் தலைவராக இருந்தார். நான் தயாரித்த போர்க்களம் நாடகத்தில் எனது வேண்டுகோளை ஏற்று மேடையேறி வேடமிட்டு நடித்தார். அவரின் பாடல் அன்று யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத் திறந்த வெளியில் ஓங்கி ஒலித்தமை ஞாபகம் வருகிறது. அப்போதிலிருந்து 1991ஆம் ஆண்டு வரை யாழ்ப்பாணத்தில் அவருடனும் அவர் குடும்பத்துடனும் நன்கு நெருக்கமாகப் பழகும் வாய்ப்புக் கிடைக்கிறது. அங்கு நாம் செய்த வேலைகள் தனியாக எழுதப்பட வேண்டியவை. கருத்தரங்குகள், இலக்கியக் கூட்டங்கள், ஊர்க்கூட்டங்கள், புத்தக விழாக்கள் நாடகங்கள், என அவை விரியும்.

**கலை எங்களை நெருக்கமாக வைத்திருந்தது**

அப்போதுதான் முதன் முதலாக ஈழத்து இசை 'றெக்கோட்' தயாரிக்கப்பட்டது. "சூலதேவர்கள் தொழுது போற்றவே" என்று ஆரம்பிக்கும் மாரியம்மன் பாடலையும்" சித்திர முடியது நெற்றியில் ஒளி செய" என்று ஆரம்பிக்கும் இராவணேசன் பாடலையும் இருவரும் இணைந்து பாடினோம். அதைத் தயாரித்தவர் இலங்கை வானொலி இசைத் தயாரிப்பாளர் நவராஜகு. அவருக்கு ஆலோசனைகள் வழங்கி உதவியும் புரிந்தவர்கள் பேராசிரியர்களான வித்தியானந்தனும், சிவத்தம்பியும். சண்முகதாஸுக்கும் எனக்கும் கருத்தியலில் அதிக வித்தியாசம் இருந்தது. எனினும் அன்பும், கலையும் எங்களை மிக நெருக்கமாக வைத்திருந்தன.

1986ஆம் ஆண்டில் மீண்டும் இராவணேசனை மேடையேற்ற ஊக்கம் தந்து, தான் அதில் பின்னணி பாடுகிறேன் எனக் கூறி, அதை இன்னும் புதிதாக எழுத வைத்தார் சண்முகதாஸ். அதை மீண்டும் தயாரிக்க அந்தப் பிரதியைத் தட்டச்சுச் செய்து கையில் எடுத்துக்கொண்டு வந்த அந்தக் காலங்கள் ஞாபகம் வருகின்றன. 1991ஆம் ஆண்டில் நான் கிழக்குப் பல்கலைக் கழகம் வந்து விடுகிறேன். கிழக்குப் பல்கலைக் கழகத்தால் தயாரிக்கப்பட்ட இராவணேசனை 2005ஆம் ஆண்டு யாழ். பல்கலைக் கழகத்தில் நாம் மேடையேற்றியபோது அருமையானதோர் அறிமுக உரையை அதற்கு வழங்கிப் பழைய இராவணேசன் காலங்களை நினைவு கூர்ந்தார்.

சண்முகதாசுடனான அனுபவங்கள் எனக்கு மிக மிக அதிகம். ஆய்வுக்காக அவருடன் மட்டக்களப்பின் கிராமங்கள் தோறும் அலைந்தமை. 'பேராதனைப் பல்கலைக் கழகக் காலத்தில் நாடகங்கள் போடுவதற்கு அவருடன் நாடு பூராகவும் திரிந்தமை. அவரின் வழிகாட்டலில் எனது 'பி.எச்.டி' ஆய்வை மேற்கொண்டமை. எத்தனை எத்தனை அனுபவங்கள்! அவரின் நாடக வாழ்வு, கலை வாழ்வு, சமூக வாழ்வு பற்றி எழுதுவதற்கு என்னிடம் நிறையத் தகவல்கள் உள்ளன. அது அவரது இன்னுமொரு பக்கத்தைக் காட்டும். அவரின் எண்பதாவது ஆண்டை நினைவு கூர்ந்து அன்பர்கள் விழா எடுக்க இருப்பதாக அறிந்தேன். அவருக்கு விழா எடுத்து மதிப்பளிக்கின்ற குழுவினருக்கு எனது மனம் நிறைந்த வாழ்த்துகள். அவர் நீடூழி வாழவேண்டும்.

தொகுப்பு
தர்மினி பத்மநாதன்

# பாரம்பரியக் கலைகளின் கலைச் சங்கமம்

## காலை – மாலை அமர்வுகளாக நல்லூரில் மேடையேற்றம்








இந்துசமயக் கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கிராமியக் கலைகளின் சங்கமம் கலை நிகழ்வு கடந்த திங்கட் கிழமை நல்லூர் - துர்க்கா மணி மண்டபத்தில் நடைபெற்றது. இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் உதவிப் பணிப்பாளர் திருமதி ஹேமலோஜினி குமரன் தலைமையில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இந்தக் கலைவிழாவின் முதன்மை அதிதியாக யாழ்ப்பாணப் பல்கலைக் கழக நாடகமும் அரங்கியலும் துறை சிரேஷ்ட விரிவுரையாளரும் நுண்கலைத் துறையின் முன்னாள் தலைவருமான கலாநிதி க.சிதம்பர நாதன் கலந்து கொண்டார்.

**காலை - மாலை நிகழ்வுகள்**

காலை மற்றும் மாலை என இரண்டு அமர்வுகளாக இந்தக் கலை நிகழ்வுகள் மேடையேற்றப் பட்டன. காலை அமர்வில் கலாநிதி க. சிதம்பரநாதனின் நெறிப்படுத்தலில் பாரம்பரியக் கலைச் செயற்பாட்டாளர்களுடனான கலந்துரையாடல் இடம்பெற்றது. கலந்துரையாடலில் யாழ் மாவட்டம் மற்றும் தீவகத்தைச் சேர்ந்த கலைஞர்கள் பங்குபற்றியதுடன் பாரம்பரியக் கலை வடிவங்கள் குறித்தும், அவற்றை நிகழ்து வதற்கான காரணங்கள், இளைஞர்களின் பங்களிப்பும் எதிர்காலமும் குறித்தும் கலந்துரையாடப்பட்டது. மேலும் மாலை அமர்வாகக் கலைச்சங்கம நிகழ்வுகள் இரவு 8 மணி வரை இடம்பெற்றன.

**நிகழ்வுகளும் பங்கு பற்றுநர்களும்**

மாலையில் மேடையேறிய நிகழ்வுகளில் ஊர்காவற்றுறை காந்தி நாடக மன்றத்தின் பண்டாரவன்னியன் தென்மோடிக்கூத்து, சங்கானை பதஞ்சலி சேத்திரம் ஆடல் குழுவின் பின்னால் கோலாட்டம், உரும்பிராய் கற்பகவிநாயகர் முன்பள்ளி மாணவர்களின் காத்தவராயன் கூத்து இணுவில் கந்தசுவாமி இளந்தொண்டர் சபையின் சத்தியவான் சாவித்திரி மற்றும் பருத்தித்துறை - மாதனைப் பெண்கள் குழுவின் கத்தவராயன் கூத்து என்பனவும் இடம்பெற்றன. அறநெறி மாணவர்கள் தொடக்கம் முதியவர்கள் வரை இந்த நிகழ்வுகளில் மிகுந்த உற்சாகத்துடன் பங்குபற்றியதுடன் பெண்கள் தனித்த குழுவாக இணைந்து காத்தவராயன் கூத்தை மேடையேற்றி ஆடியமை சிறப்பாகக் குறிப்பிடத்தக்கது.

---








# கொக்கட்டிச் சோலையில் களைகட்டிய பண்பாட்டு, இலக்கிய விழா

மட்டக்களப்பு- மண்முனை தென்மேற்குப் பிரதேச பண்பாட்டு இலக்கிய விழா கடந்த வெள்ளிக்கிழமை பிரதேச செயலர் தெட்சணகௌரி தினேஸ் தலைமையில் நடைபெற்றது. கொக்கட்டிச்சோலை பிரதேச பண்பாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரச அதிபர் மா.உதயகுமார் கலந்து கொண்டார். பிரதேச மட்டத்தில் மாணவர்கள், இளைஞர், யுவதிகள் மத்தியில் போட்டிகள் நடாத்தப்பட்டன. இவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களுக்குப் பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கி வைக்கப்பட்டன. மேலும் கூத்துக்கலைக்குச் சிறந்த சேவையாற்றிக் கொண்டிருக்கும் மூன்று கலைஞர்களுக்கும், ஓவியம் வரைவதில் சிறந்து விளங்கும் யுவதியொருவருக்கும் இளங்கலைஞர் விருதுகள் வழங்கப்பட்டன. பிரதேச பண்பாட்டுப்.பேரவை, பிரதேச பண்பாட்டு அதிகாரசபை, பிரதேச செயலகம் இணைந்து இந்த நிகழ்வை நடத்தின. அரங்கிலே, நடனம், நாட்டார் பாடல், தேசிய ரீதியில் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட வேட்கை நாடகம் என்பன ஆற்றுகை செய்யப்பட்டன. பிரதேசம் சார்பில் பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகிய மாணவர்களுக்குக் கொடுப்பனவுகளும், மருத்துவச் செலவுக்காக மாற்றுத்திறனாளி மாணவர் ஒருவருக்கு ஒருதொகைப் பணமும் இதன்போது வழங்கி வைக்கப்பட்டது. நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள், அந்தப் பிரதேச இளைஞர், யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# மார்கழியின் மகிமை கூறும் திருப்பாவை

இரா. நிஷாந்தன்

இந்துமத வழிபாட்டில் மார்கழி மாதம் மேன்மை பெறுகின்றது. மாதங்களில் நான் மார்கழி என கிருஷ்ண பகவான் பகவத் கீதையில் உரைத்துள்ளதன் படி மார்கழி மாதம் இறைவழிபாட்டுக்குரிய மாதமாகக் கொள்ளப்படுகின்றது. ஆகவே தான் மார்கழி மாதத்தில் நம் இல்லங்களில் சுப நிகழ்வுகள் எதுவும் நடாத்தும் மரபு காணப்படுவதில்லை. மாறாக இறை வழிபாடு மட்டுமே இந்த மாதத்தில் மேற்கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் திருவெம்பாவை, திருப்பாவை, வைகுண்ட ஏகாதசி, மார்கழிப் பிள்ளையார் என பல்வேறு சிறப்பு விரதங்கள் இந்த மாதத்தில் அரங்கேறுகின்றன.

**மார்கழியின் மகத்துவம் கூறும் திருப்பாவை நோன்பு**

இந்த மார்கழி மாதத்தில் அமைவுறும் விரதங்களில் திருப்பாவை விரதமும் ஒன்றாகும். திருவெம்பாவை சிவனுக்குரியது என்றால் திருப்பாவை விஷ்ணுவுக்குரியது. ஆக திருப்பாவை விரதம் மார்கழி தமிழ் மாதம் முப்பது நாள்களும் விஷ்ணு ஆலயங்களில் சிறப்புற கடைப்பிடிக்கப்படுகின்ற விரதமாகும். கன்னிப் பெண்



கள் கூடி இந்த விரத்தைப் பக்தி வழி நின்று. அதன் நெறிமுறைகளை கடைப்பிடித்து நாராயணன் புகழ் பாடி கொண்டாடும் விரதம் இந்தத் திருப்பாவை விரதமாகும். கண்ணன் மீது தீராத அன்பு கொண்ட ஆண்டாள் பாடிய பாடல்களே திருப்பாவைப் பாடல்கள். இவை இந்த விரதத்தின் போது பாடப்படுகின்றன. ஆண்டாள் தான் வாழும் வில்லிபுத்தூரை ஆயர்ப்பாடியாகப் பாவனை செய்து தன்னைக் கோபிகையாகவும்,தன் வயதை ஒத்த பெண்களை தன் தோழியராக்கி அதிகாலை வேளையில் கண்ணன் இருப்பிடம் சென்று அவனை துயில் எழுப்பிப் பாவை நோன்பு கடைபிடிக்க அழைக்கும் காட்சிகளில் திருப்பாவை பாடல்கள் சிறப்புறுகின்றன.

**நாராயணனே நமக்கு பறை தருவான்.**

திருப்பாவையின் முதல் பாடலில் ஆயர்ச் சிறுமியர் கண்ணன் புகழ் பாடி அவனிடம் அருளை நாடி நிற்கின்ற தன்மையைக் காப்பியம் செய்கின்றாள் ஆண்டாள். பாடல் இது தான்,

*மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்*
*நீராடப் போதுவீர் போதுமினோ நேரிழையீர்*
*சீர் மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்*
*கூர் வேல் கொடுந் தொழிலன் நந்தகோபன் குமரன்*
*ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்*
*கார்மேனி செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்*
*நாராயணனே நமக்கே பறை தருவான்*
*பாரோர் புகழப் படிந்தேலோர் எம்பாவாய்*

அதாவது, மார்கழி மாதம் சந்திர ஒளி பொருந்திய நன்நாளாகிய இன்று அழகிய ஆயர்ப்பாடியில் வாழும் சிறுமியராகிய நாம் நீராடப் புறப்படுவோம். கூரிய வேலுடன் பகைவரிடம் இருந்து நம்மைப் பாதுகாத்து வரும் நந்தகோபனுடைய மகனும், அழகிய கண்கள் கொண்ட யசோதையின் சிங்கக் குட்டி போன்றவனும், கார்மேகம் போல் கரிய நிறம் படைத்தவனும், சிவந்த கண்களைக் கொண்டவனும், சூரிய சந்திரர் போல் ஒளி பொருந்திய முகம் படைத்தவனுமாகிய நாராயணன் நமக்கு அருள் தரக் காத்திருக்கின்றான். ஆகவே அவனை நாம் பாடிப் புகழ்ந்திடுவோம்.

**திருப்பாவை நோன்பின் நியதிகள்**

திருப்பாவை நோன்பின் நியதிகள் எவையென்பதை ஆண்டாள் நாச்சியார் திருப்பாவைப் பாடலில் குறிப்பிடுகின்றாள். அந்த வகையில், அதிகாலையின் எழுந்து நீராட வேண்டும். மேலும், நெய் உண்ணக் கூடாது, பால் உண்ணக் கூடாது, அத்தோடு கண்களுக்கு மை தீட்டக் கூடாது, கூந்தலில் மலர் இட்டு முடியக் கூடாது, தீய செயல்களைச் செய்யக் கூடாது, தீய சொற்களைச் சொல்லக்கூடாது, இவற்றோடு இல்லாதவர்க்கு தானம் செய்ய வேண்டும். இதனை,

*நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்; நாட்காலை நீராடி*
*மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம் முடியோம்;*
*செய்யா தனசெய்யோம்; தீக்குறளைச் சென்றோதோம்;*
*ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி*
*உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய்.*

எனப் பாவை நோன்பின் விதிமுறைகள் பற்றி காப்பியம் செய்கின்றாள் நாச்சியார்.

**பாவை நோன்பினால் கிடைக்கப் பெறுபவை**

திருப்பாவை நோன்பின் போது கண்ணன் பேர் கூறி பாவைக்கு நீர் சாற்றி நாங்களும் நீராடினால், மாதம் மூன்று மழை நாட்டுக்குத் தீங்கு வராதபடி பெய்திடும், அதனால் ஓங்கி வளர்ந்த செந்நெல் வயல்களில் கயல் மீன்கள் உலாவித் திரிந்திடும், மேலும், குவளை மலர்களில் வண்டுகள் துயில் கொள்ளும், வள்ளல் தன்மை பொருந்திய பசுக்கள் பல குடங்களில் நிரம்பும் அளவிற்கு பாலைச் சொரிந்திடும் எனவாறு குறிப்பிடுகின்றாள் நாச்சியார்.

*ஓங்கி உலகு அளந்த உத்தமன் பேர் பாடி*
*நாங்கள் நம் பாவைக்குச் சாற்றி நீர் ஆடினால்*
*தீங்கு இன்றி நாடு எல்லாம் திங்கள் மும்மாரி பெய்து*
*ஓங்கு பெறும் செந்நெல் ஊடு கயல் உகளப்*
*பூங்குவளைப் போதில் பொறி வண்டு கண் படுப்பத்*
*தேங்காதே புக்கு இருந்து சீர்த்த முலை பற்றி*
*வாங்கக் குடம் நிறைக்கும் வள்ளல் பெரும் பசுக்கள்*
*நீங்காத செல்வம் நிறைந்து ஏலோர் எம்பாவாய்.*

இதுவே அப்பாடல்.

**கண்ணன் பெருமைகளைப் பாடுதல்**

திருப்பாவைப் பாடல்களின் பல இடங்களில் கண்ணன் பெருமைகளும் சிறப்புக்களும் இழையோடியுள்ளன. அந்த வகையில், கார்மேகம் போன்ற மேனி படைத்தவன், சிவந்த கண்களை உடையவன், மூவடியால் ஓங்கி உலகளந்தவன், மாயச் செயல்கள் புரிகின்றவன், ஆயர் குலத்தின் ஒளி விளக்கினைப் போன்றவன் ,பாற்கடலில் பாம்பணையில் பள்ளி கொண்டவன் , குதிரை வடிவில் வந்த அசுரனை வதைத்தவன்,தேவர்களுக்கு தலைவனானவன் , ராமனாக அவதாரம் செய்து இராவணன் மற்றும் கும்பகர்ணனை வதைத்தவன், பறவை வடிவில் வந்த பகாசூரனை கொன்றவன் , சங்கு சக்கரம் என்பவற்றை ஏந்திய கரங்களையுடையவன் , தேவர்களுக்கு முன் சென்று அவர்கள் துன்பத்தை போக்குபவன், சூரிய சந்திரர் போல் ஒளி வீசும் கண்களை கொண்டவன் , வண்டி வடிவில் வந்த அசுரனை வதம் செய்தவன் ,கம்சனை கொன்றவன், பாற்கடல் கடைந்திட உதவி புரிந்தவன் என கண்ணனது எண்ணற்ற பொருமைகள் இந்தப் பாடல்களில் அமைவுறுகின்றன.

**நோன்பின் முடிவில் செய்யப்படுவன**

திருப்பாவை நோன்பு நிறைவுற்றதும் தாம் எவையெல்லாம் செய்திடுவோம் என்பதையும் ஆண்டாள் பாடியுள்ளாள்.

*கூடாரை வெல்லும் சீர்க் கோவிந்தா! உந்தன்னைப்*
*பாடிப் பறை கொண்டு யாம் பெறும் சம்மானம்;*
*நாடு புகழும் பரிசினால் நன்றாகச்*
*சூடகமே தோள் வளையே தோடே செவிப் பூவே*
*பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்;*
*ஆடை உடுப்போம் அதன் பின்னே பாற் சோறு*
*மூட நெய் பெய்து முழங்கை வழி வாரக்*
*கூடி இருந்து குளிர்ந்து ஏலோர் எம்பாவாய்.*

அதாவது, பகைவர்களை வெல்லும் கோவிந்தா, உன்னைப் பாடி உன் அருள் பெற்று உன்னிடம் இருந்து பலவற்றை நாம் பெற்றிடுவோம். கைவளையல்கள், தோள்வளை, காதணிகள், என பல வகை ஆபரணங்களை பெற்று யாம் அணிந்திடுவோம். அத்தோடு விதம் விதமான ஆடைகள் அணிவோம், அதன் பின்னர் நெய் கலந்த பாற்ச் சோறினை முழங்கை வழியே வழிந்தோடிட அனைவருடனும் கூடியிருந்து உண்டு மகிழ்ந்திடுவோம் எனப் பாடுகின்றாள்.


**கண்ணனிடம் ஆயர்ப்பாடிச் சிறுமிகள் வேண்டுவன**

ஆயர்ப்பாடிச் சிறுமியர் கண்ணனிடம் உரிமையோடு உறவாடி அவனிடத்தில் தம் விருப்பங்களை விண்ணப்பிக்கின்றனர். திருப்பாவை 28, 29 ஆம் பாடல்கள் அத்தன்மைகளை கண்ணுறலாம். மாடு மேய்க்கும் குலத்தில் பிறந்தவர்களான அறிவில்லாதவர்களாகிய நாம் உன்னை எம் குலத்தவனாகப் பெறும் பாக்கியம் பெற்றுள்ளோம். குறையொன்றும் இல்லாத கோவிந்தா, எமக்குள் உள்ள உறவு எப்பொழுதும் நீக்க முடியாதது. சிறு பிள்ளைகளாகிய நாம் அன்பினால் உன்னை பலவாறு அழைத்தமைக்காக கோபம் கொள்ளாது இப்போது எமக்கு வேண்டியதை தந்தருள்வாய் என வேண்டுகின்றனர்.

மேலும். கண்ணா, சின்னஞ் சிறிய கால்களால் அதிகாலையிலே வந்து உன் தாமரை போன்ற திருவடிகளை நாம் போற்றித் துதிப்பதற்கான காரணத்தைக் கேட்பாயாக, ஆயர்க் குலத்தினில் பிறந்த நீ எங்களை கண்டு கொள்ளாமல் இருக்கக் கூடாது, உன்னிடம் இருந்து ஒன்றை பெறுவதற்காக நாம் இதனைச் செய்யவில்லை மாறாக, இன்று மட்டுமல்ல ஏழேழு ஜென்மங்களுக்கும் நாம் உன்னோடு உற்றவர்களாகி உனக்கே நாம் பணி செய்திட வேண்டும். இதனை,

*சிற்றஞ்சிறு காலே வந்து உன்னை சேவித்து உன்*
*பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்;*
*பெற்றம் மேய்த்து உண்ணும் குலத்தில் பிறந்து நீ*
*குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;*
*இற்றைப் பறை கொள்வான் அன்று காண் கோவிந்தா;*
*எற்றைக்கும் ஏழ் ஏழ் பிறவிக்கும் உன் தன்னோடு*
*உற்றோமே ஆவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்;*

எனவாறு அழகுற பாடுகின்றாள் ஆண்டாள்.



**திருமாலின் திருவருள் பெற்று இன்புறுவோம்**

இத்தகைய சிறப்புப் பொருந்திய திருப்பாவை விரதம் தற்போது விஷ்ணு ஆலயங்களில் சிறப்புற நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இந்த விரதம் கன்னிப் பெண்கள் கட்டாயம் கடைப்பிடிக்க வேண்டிய விரதமாகும். ஆக இந்த விரத காலத்தில் அதிகாலையில் எழுந்து நீராடிப் பக்திச் சிரத்தையோடு விஷ்ணுஆலயம் சென்று இவ் விரதத்தை கடைப்பிடிப்பது சிறப்பு.

அவ்வாறு இயலாது விடின் வீட்டிலேயே அதிகாலை எழுந்து கண்ணனை மனதார நினைத்து திருப்பாவைப் பாடல்களை பாடி வழிபடுவதும் நன்மை பயத்திடும். அவ்வாறு செய்திட்டால் தேவர்கள் துயர் போக்குவனும், திருமகள் தலைவனுமாகிய நாராயணன் திருவருள் பெற்று இன்புற்று வாழ்ந்திடலாம்.





சாவகச்சேரி பிரதேச இளைஞர் சபையின் தலைவர் சு.நக்கீர னுக்கு இலங்கை ஐக்கிய நட்புறவு அமையத்தின் நிலைபே றான அபிவிருத்தி இலக்குகளுக்கான இலங்கையின் இளை ஞர் வலையமைப்பினரால் இளம் தலைவர் விருதும் 'வீரசா ரசூரி' மதிப்புறுப் பட்டம் வழங்கப்பட்டது. இவரது தலைமை யில் இயங்கும் சாவகச்சேரிப் பிரதேச இளைஞர் சபை சிறந்த செயற்பாடுடையதாகத் தெரிவு செய்யப்பட்டு அதற்கும் விருது வழங்கப்பட்டன.

இலங்கைக்கான இளைஞர் வலையமைப்பின் உலகத் தன்னார்வத் தின விருதுகள் வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் கொழும்பு - பண்டாரநாயக்கா ஞாபகார்த்தப் பன்னாட்டு மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற நிகழ்வில் நடந்தது. இலங்கை ஐரோப் பிய அழகி லிண்டா றோசியினால் இந்த நிகழ்வில் வழங்கப்பட்டன.

(159,9)





# 'கால அதிர்வுகள்' நூல் வெளியீடு!




வவுனியாவைச் சேர்ந்த ஊடகவியலாளர் பொன்னையா மாணிக்கவாசகத்தின் கால அதிர்வுகள் நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த சனிக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் வவு னியா வாடி வீடு கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. வவு னியா கல்வியியல் கல்லூரியின் ஓய்வு பெற்ற பீடாதிபதி கே.சிதம்பரநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வீரகேசரி நாளிதழின் ஆசிரியர் எஸ். ஸ்ரீகஜன் முக்கிய விருந் தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். மூத்த ஊடகவியலாளர் வீ.தனபாலசிங் கம் நூலை வெளியிட்டுவைத்து உரையாற்றினார். நூலின் முதற் பிரதியை வவுனியா கவிதா ஸ்ரோர் உரிமையாளரும் பிரபல வர்த்தகருமாகிய அ.தணிகாசலம் பெற்றுக்கொண் டார். மதிப்பீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அரசறிவியல்துறைத் தலைவர் கே.ரீ.கணேசலிங்கம் வழங்கினார். தொடர்ந்து நூலாசிரியர் ஏற்புரையாற்றினார். இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், சிவசக்தி ஆனந் தன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோநோகராதலிங்கம், வட மாகாணசபை யின் முன்னாள் உறுப்பினர்களான ஜி.ரி.லிங்கநாதன், செ.மயூரன், வவுனியா நகரசபைத் தலைவர், உறுப்பினர்கள், சமூக அமைப்புக்களின் பிரதிநிதிகள், அதிபர், ஆசிரியர்கள், வர்த்தக சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள் எனப் பலரும் கலந்து சிறப்பித்தனர். (110)

# 'தமிழர் மரபுக் கலைகள்' நூல் வெளியீடு!




வவுனியா பிரதேச கலாசார உத்தி யோகத்தர் வீரசிங்கம் பிரதீபன் எழுதிய 'தமிழர் மரபுக்கலைகள்' என்ற நூல் வெளியீட்டு நிகழ்வு கடந்த ஞாயிற்றுக் கிழமை காலை 9.30 மணிக்கு வவுனியா கந்தசாமி கோவில் திருமணமண்டபத்தில் நடைபெற்றது. தமிழருவி த.சிவகு மாரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் வடமாகாண பண் பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பதில் பணிப்பாளர் திருமதி சுஜீவா சிவதாஸ் முதன்மை அதிதியாகக் கலந்துகொண்டார். நூலுக்கான ஆய்வுரையை வவுனியா தேசிய கல்வியற் கல்லூரியின் சிரேஸ்ட விரி வுரையாளர் மி.சூசைதாசன் நிகழ்த்தினார். தமிழ்நேசன் அடிகளார் சிறப்புரையை நிகழ்த்தினார். நூலின் முதற் பிரதியை அருட் கலைவாரிதி ஸ்தபதி அ.சண்முகவடி வேல் பெற்றார். நிருத்தியார்பணா நாட்டிய கலாலயம் வழங்கிய பள்ளுநாட்டிய நாட கமும், கோவில் குளம் அகிலாண்டேஸ்வரி நுண்கலைக் கல்லூரி மாணவர்கள் வழங்கிய இராவணேசன் வடமோடி நாட்டுக்கூத்தும் அரங்கை மெருகூட்டின. நிகழ் வில் மதிப்புறு விருந்தினர்களாக வவுனியாப் பிரதேச செயலர் கா. உதயராஜா, வவு னியா செட்டிபுலம் பிரதேச செயலர் க.சிவகரன், தமிழ்நேசன் அடிகள், சிவநெறிபுலவர் ஏ.இராமஸ்வாமி உட்பட இலக்கியவாதிகள் பலரும் கலந்துகொண்டனர். தமிழர்க ளின் மரபுக் கலைகளின் பெருமை இனிவரும் சந்ததிக்குத் தெரியாத புது விடயமாகி விடுமோ என்ற ஆதங்கத்தில் இந்தச் சிறு நூல் உருப்பெற்றிருக்கிறது- என்றார் நுலா சிரியர். (110)



# 'மீட்பின் சுவடுகள்' கவிதைத் தொகுதி வெளியீடு

யாழ்ப்பாணம் - மிருசுவில் உசனூர்க் கவிஞர் சூரியநிலா எழுதிய 'மீட்பின் சுவடுகள்' என்ற தலைப்பிலமைந்த கவிதைத் தொகுதி நூல் வெளியீடு 15.12.2019அன்று யாழ். மறைக்கல்வி நடுநிலைய மண்டபத்தில் இடம்பெற்றது. வேதாகமத்தின் புதிய ஏற்பாட்டை அனைவரும் இலகுவில் படிக்கக்கூடிய வகையில் கவிதை வடிவில் உருவாக்கப்பட்ட இந்த நூலின் வெளியீடு யாழ்.பல்கலைக்கழக ஊடக விரிவுரையாளர் அருட்பணி ரூபன் மரியாம்பிள்ளை அடிகள் தலைமையில் நடைபெற்றது. முதன்மை விருந்தினராக அமல மரித் தியாகிகள் சபையின் சமூகத் திட்டங்களுக்கான ஆலோசகர் அருட்பணி ஏ.ஜீவேந்திரா போல் அடிகள் கலந்து கொண்டார். சிறப்பு விருந்தினர்களாக் பாதுகாவலன் பத்திரிகை ஆசிரியர் அருட்பணி எஸ்.எயின்ஸ்லி றொசான் அடிகள், மிருசுவில் நீக்கிலார் தேவாலய பங்குத் தந்தை அருட்பணி எக்ஸ்.டபிள்யு.ஜேம்ஸ் அடிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். நூலின் ஆய்வுரையினை கவித்தென்றல் செ.அ.அழகுராஜா நிகழ்த்தினார். நூலாசிரியருக்குக் கலைமகன் பட்டம் வழங்கி மதிப்பளிக்கப்பட்டது.







'இலங்கையில் தேயிலைப் பெருந்தோட்டச் சமூகம் 150 வருடங்கள்' (1867 - 2017) என்ற தலைப்பில் அமைந்த நூல் அறிமுக விழா 26.12.2018 அன்று பதுளை 'ரிவர்சைட்' உல்லாச விடுதியில் வெகு விமரிசையாக நடைபெற்றது. போல் கெஸ்பஸ் நிலைய இணைப்பாளர் ஏ.கே. வேலவன் வரவேற்புரையையும், ஊவா மாகாண பிரதிக் கல்விப் பணிப்பாளர் வே. கருணாகரன் தலைமையுரையையும், ஊடகவியலாளர் கே. வேலாயுதம் அறிமுக உரையையும், கொழும்பு எழுத்தறிவு இயக்கப் பணிப்பாளர் ஏ. செல்வேந்திரன், கொட்டகலை ஆசிரியர் பயிற்சி கலாசாலை விரிவுரையாளர் ஆ. கலையரசு ஆகிய இருவரும் நூல் விமர்சன உரைகளையும் ஆற்றினர். நூலின் முதற் பிரதியைப் பதுளைத் தொழிலதிபர் எஸ். சுரேஸ்குமார் பெற்றுக்கொண்டார்.

## ஏறாவூரில் கலாசார விழா!

ஏறாவூர் நகர, பிரதேச செயலகக் கலாசார விழா வாவிக்கரை பிரதேச கலாசார மண்டபத்தி:ல் கடந்த வெள்ளிக்கிழமை மாலை கலாசார உத்தியோகத்தர் அஷ்ஷெய்ஹ் எஸ்.ஏ. நழீம் தலைமையில் இடம்பெற்றது. ஏறாவூர்ப் பிரதேச செயலகத்தினதும் ஏறாவூர்க் கலாசாரப் பேரவையினதும் ஒழுங்கமைப்பில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் பிரதேசத்தின் கலை, கலாசார, பண்பாட்டுப் பாரம்பரியங்களை உயிர்ப்பிக்கும் வகையிலான நிகழ்வுகளும் துறைசார்ந்த கலைஞர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை மதிப்புறுத்திப் பாராட்டும் நிகழ்வுகளும் இடம்பெற்றன.

இந்த நிகழ்வில் துறைசார்ந்த கலைஞர்களும், ஆர்வலர்களும், பொது மக்களும் கலந்து கொண்டனர். நிகழ்வில் உரையாற்றிய ஏறாவூர்ப் பிரதேச செயலர் யூசுப், கலை இலக்கிய விழாக்களை நாடு பூராகவும் உள்ள பிரதேச செயலகங்கள் வாயிலாக நடத்துவதன் மூலம் அந்தந்தப் பிரதேசங்களின் பாரம்பரியங்கள் உயிர்ப்பிக்கப்படுகின்றன. தற்போதைய அதி நவீன தொடர்பாடல், தொழிநுட்ப வளர்ச்சிகளின் மூலம் அந்தந்தப் பிரதேச மக்களுக்கே உரித்தான கலை, கலாச்சார, பாரம்பரிய. பண்பாட்டு அம்சங்கள் மழுங்கடிக்கப்படக் கூடாது. அவை பேணிப் பாதுகாக்கப்பட வேண்டும் - என்றார்.















# புத்தாண்டு புத்தக இரவு

■ த.ராஜன்

புத்தாண்டை வரவேற்பதற்காக உலகம் முழுவதும் பல கேளிக்கைகளில் மக்கள் ஈடுபடுகிறார்கள். இந்தியாவின் தமிழகம் புதிதாக ஒரு கொண்டாட்டத்தைக் கையிலெடுத்திருக்கிறது. அது, 'புத்தாண்டு புத்தக இரவு' இயக்கம்! 2015ஆம் ஆண்டில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பதிப்புத் துறையின் மீட்சிக்காக 'இந்து தமிழ்' நாளிதழ் 'புத்தாண்டு புத்தக இரவு' எனும் அறிவியக்கத்துக்கு அறைகூவல் விடுத்தது.

2016ஆம் ஆண்டில், பணமதிப்பிழப்பு நஷ்டங்களை ஈடுசெய்யும் விதமாக மீண்டும் அதே முன்னெடுப்பு இன்னும் பல புதிய அம்சங்களோடு தன்னை விஸ்தரித்துக்கொண்டது. இரண்டு வருடங்களில் அது விரிந்த விதத்தில் தனக்கென ஒரு தனியிடத்தை உருவாக்கிக்கொண்டது. 'ஆண்டின் இறுதி நெருங்க வாசகர்கள் ஆர்வத்தோடு, "இந்த வருடமும் புத்தகக் கொண்டாட்டம் உண்டா?" என பதிப்பாளர்களையும், விற்பனையாளர்களையும் மொய்க்கத் தொடங்கிவிடுகிறார்கள். வாசிப்புப் பழக்கமற்றவர்களையும் இந்தக் கொண்டாட்டம் உள்ளிழுத்திருக்கிறது.

தென்னிந்தியப் பதிப்பாளர்கள் மற்றும் புத்தக விற்பனையாளர்கள் சங்கம். பதிப்பாளர்களும் புத்தக விற்பனையாளர்களும் களத்தில் இறங்கினார்கள். தமிழின் முன்னணிப் பதிப்பகங்கள் பெரும் திட்டமிடல்களுடன் களம் இறங்கித் தங்கள் எழுத்தாளர்களை வரவழைத்து எழுத்தாளர்வாசகர் சந்திப்பை ஏற்பாடு செய்தன. டிசெம்பர் 24ஆம் திகதியிலிருந்து முதல் நேற்று வரை வாசகர்களுக்கு மூன்றில் ஒரு பங்கு விலையில் புத்தகங்கள் விற்கப்பட்டன.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட தமிழ்ப் பதிப்புத் துறையின் மீட்சிக்காகத் தொடங்கப்பட்ட 'புத்தாண்டுப் புத்தக இரவு இயக்கம்' தமிழகம் முழுவதும் ஒரு புது அறிவியக்கமாக உருவெடுத்திருக்கிறது. ஒரு புதிய கலாச்சாரத்தை உலகுக்குக் கற்றுத்தந்திருக்கின்றது.

# ECONOMICS ZONE

(635, K.K.S Road, Jaffna)

ECONOMICS Zone

## பாராட்டி வாழ்த்துகின்றோம்

2018 - G.C.E A/L வர்த்தகப் பிரிவில்
30 இற்கு மேற்பட்ட மாணவர்களை
பல்கலைக்கழகம் அனுப்பிய பெருமையில்

**R.தர்ஷன் (BBA Fm Spl)**
(Master of Economics)
**077 4316814**

| No | Name | Result | Rank |
|---|---|---|---|
| 01 | R.அறிவன்பன் | 2A B | 06 (கிளிநொச்சி) |
| 02 | S.றொனால்ட் | 3A | 34 |
| 03 | V.வத்சாங்கீத சர்மா | 2A B | 36 |
| 04 | Y.மாதுரி | 3A | 40 |
| 05 | K.டொபிக்கா | 2A B | 41 |
| 06 | P.பிறேமசாயினி | 2A B | 48 |
| 07 | R.யுவரூபன் | 2A B | 77 |
| 08 | R.ஹரிஸ்பாபு | 2A B | 81 |
| 09 | R.கனிஸ்ரூபினி | 2A B | 86 |
| 10 | L.கஜேந்தினி | 2A B | 88 |
| 11 | R.றோய்நிசான் | 2A B | 90 |
| 12 | T.பரணிகா | 2A C | 98 |
| 13 | V.உசாந்தினி | A 2B | 100 |

| No | Name | Result | Rank |
|---|---|---|---|
| 14. | S.சிவரதன் | 2A C | 102 |
| 15. | S.சுஜீவன் | A 2B | 106 |
| 16. | P.தனுசன் | A 2B | 108 |
| 17. | A.சுஜீன் | A 2B | 116 |
| 18. | பிரியங்கா | 2A B | 117 |
| 19. | M.தனுஷ்காந் | A 2B | 130 |
| 20. | S.நிலக்ஷன் | A 2B | 135 |
| 21. | மதிவதனன் | A 2B | 124 |
| 22. | S.டிலோஜன் | A 2B | 139 |
| 23. | B.தசிவன் | A 2B | 140 |
| 24. | R.பிருந்தா | ABC | 141 |
| 25. | R.ஜெயருசான் | ABC | 154 |
| 26. | B.ரபித்தனா | 2A B | 155 |
| 27. | C.ஜங்கரன் | ABC | 160 |
| 28. | M.சுஜீவன் | 2A C | 162 |
| 29. | R.விதுர்சனா | 3B | 164 |

| Name | Result |
|---|---|
| ஜக்சாயினி | A 2B |
| S.கஜித் | ABC |
| A.கஜீவன் | ABS |
| V.ஜானுஜா | 2A C |
| S.டனிஸ்ரன் | ABC |
| J.லக்ஷனன் | ACC |
| P.சன்ஜெய் | 2A C |
| K.தக்ஷாயினி | 3B |
| சாந்தகுமார் | ABC |
| R.திஷானா | ABC |

Congratulations

**2021 Batch Start**
**Jan - 09 (4 - 5pm)**

(CS 32339) (14.17)

40 இற்கு மேற்பட்டோர் பொருளியல் A சித்தி
25 இற்கு மேற்பட்டோர் கணக்கீட்டில் A சித்தி

வாழ்த்துவோர்:
ஆசிரியர், பழையமாணவர்கள்.

நிறுவனம் சாதிப்பது வேறு.....! தனிநபர் சாதிப்பது வேறு.....!

# BCAS CAMPUS

BRITISH COLLEGE OF APPLIED STUDIES

After A/L's

PLATINUM PARTNER No.1 BTEC Centre in Sri Lanka



BTEC HND

# Civil Engineering

WITH STRUCTURAL DESIGN
Leading to BEng (Hons)

20 வருடகால தொழிற்துறை சார்ந்த உயர்கல்வித்துறையில் நம்பகமும், சிறப்புமிக்கதுமான BCAS Campus உடன் இணைந்து UGC அங்கீகாரம் கொண்ட UK பட்டப்படிப்புகளை தொடருங்கள்...

- நவீன கற்கை வசதிகளுடன் கூடிய பிரத்தியேக Civil Engineerig கற்கை நிலையத்தில் வழங்கப்படும் பாட நெறி.
- பல்கலைக்கழக விரிவுரையாளர்களையும் அனுபவமிக்க Civil Engineerig நிபுணர்களையும் கொண்ட முழுநேர விரிவுரையாளர்கள்.
- அங்கீகரிக்கப்பட்ட Laboratory களில் Material, Hydraulic, Soil நடை முறைப்பயிற்சிகள்.

Pearson    UEL University of East London

MADHU 0777 102131
SANCHU 0777 692318

**INTAKE NOW ON**

**BCAS Jaffna Campus,**
**#. 16, Point Pedro Road, Jaffna.**

20 YEARS
ISO 9001:2008 CERTIFIED

021 221 9910 | info@bcas.lk | www.bcas.lk | BCAS Ranked "Platinum Partner" No.1 once again

# அந்தியேட்டி சபிண்டீகரண அழைப்பு



தோற்றம் 10 . 02 . 1947

மறைவு 03 . 12 . 2018

கடந்த 03.12.2018 திங்கட்கிழமை சிவபதமடைந்த எமது குடும்பத்தலைவர்

## அமரர் மார்க்கண்டு மகாலிங்கம்

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (02.01.2019) புதன் கிழமை காலை 6.00 மணியளவில் கீரிமலை புனித தீர்த்தக்கரையி லும் சபிண்டீகரண கிரியைகள் மு.ப 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்திலும் நடைபெறும். அதனைத் தொடர்ந்து 04.01.2019 வெள்ளிக்கிழமை பருத்தித்துறை சூரியமஹால் மண்டபத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக் கொள்ளவும்.

புலோலி வடகிழக்கு,
பருத்தித்துறை.

குடும்பத்தினர்.

(AC 890) (14.17)

# மரண அறிவித்தல்



பிறப்பு 30 . 11 . 1936

இறப்பு 31 . 12 . 2018

## திருமதி லில்லியோர்ஜினா சண்முகநாதன்

ஏழாலை - கிழக்கு

ஏழாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி லில்லி யோர் ஜினா சண்முகநாதன் (ஓய்வு நிலை ஆசிரியை) 31.12.2018 திங்கட்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.ஸ்ரோணர் தம்பிமுத்து (பொலிஸ் சார்ஜண்ட்) திருமதி அன்னமேரி ஸ்ரோணர் தம்பிமுத்து (ஓய்வு நிலை ஊழியர், அரச வைத்தியசாலைகள் - காங்கேசன்துறை, கல் முனை, மந்திகை) தம்பதிகளின் அன்பு மகளும் திரு. நவரட்ணம் சண்முகநாதனின்(முன்னை நாள் சிங்கர் கொம்பனி) அன்பு மனைவியும் கொக்குவிலில் காலஞ்சென்ற திரு.திருமதி க.நவரட் ணம் தம்பதிகளின் மருமகளும் திரு.அலெக்ஸ் லிமலநாதன்(டாக்டர் - நோர்வே), திருமதி லிலோ தினி சண்முகநாதன்(காசாளர் - பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும் திருமதி ஜீன் அலெக்ஸ், லிமலநாதன்(நோர்வே) திரு.மணியம் சண்முகநாதன்(பிரான்ஸ்) ஆகியோரின் மாமியாரும் செல்வன் றொக்கி, செல்வி அலெக்ஸ்சா, செல்வன் றிச்சட், செல்வி றேச்சல் ஆகியோரின் அம்மம்மாவும் திரு. திரு ஞானம், திருமதி றோஸ்மலர், ஜெயரட்ணம்(பிரான்ஸ்), திரு. லோறன்ஸ் பாலசுந்தரம்(பிரான்ஸ்) ஆகி யோரின் அன்புச் சகோதரியும் திருமதி மேரிகெலன் ஜெயசீலி, திரு .யோசேப் ஜெயரட்ணம்(பிரான்ஸ்), திருமதி லலிதா பாலசுந்தரம் (பிரான்ஸ்) ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரது நல்லடக்கம் பிரான்ஸில் நேற்று (01.01.2019) நடைபெற்றது என்பதனை துயரத்துடன் தெரியப்படுத்துகின்றேன்.இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

40/1, சோமசுந்தரம் றோட்,
சுண்டுக்குளி.

(CS 22226) (14,17)

தகவல்: சகோதரன்
T.S.திருஞானம்.

077 665 9982 / 021 222 6191

# சிவபூசா துரந்தரர்
# வேலுப்பிள்ளை சிவசுப்பிரமணியம்



உருவாய் 17 . 02 . 1920

அருவாய் 01 . 01 . 2011

திதி: மார்கழி அபரபக்கத்துத் துவாதசி (02.01.2019) புதன்கிழமை

திருவாய்ச் செல்வமாய்த் தேனாய்ச் செழுஞ்சுடராய்ச்
சோதியாய் உருவாய் உறவாய் ஊனாய்
உள்ளமாய்க் கருவாய்க் கற்பகமாய் கண்ணாய்க்
கருமணியால் மணியின்பாவாயாய் - எம்மைக்காத்து
அவையத்து முந்தி இருப்பச் செய்த தந்தையே!
நிமலனடிக் கீழ் நீங்கா இன்பம்பெறும் - உங்கள்
திருவடிகள் போற்றித் துதிக்கின்றோம்.

117, கோவில் வீதி,
நல்லூர், யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்,
உற்றார், நண்பர்கள்.

(cs.22195) (13,17)

# யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)
## திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்.
## பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் வெற்றிடமாகவுள்ள பின்வரும் நிரந்தர பதவிக்கு தகுதியானவர்களிட மிருந்து வெளிவாரியாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பப்படிவத்தை அலுவலக வேலை நாள்களில் தலைமைக் காரியாலயத்தில் ரூபா 10/-ஐ செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம். பூரணப் படுத் தப்பட்ட விண்ணப்பங்கள்யாவும் "தலைவர், யாழ்.மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம். திருநெல்வேலி கிழக்கு. கோப்பாய்" என்ற முகவரிக்கு 16.01.2019ஆம் திகதி நண்பகல் 12.00 மணிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக நேரிலோ அல்லது பதிவுத்தபால் மூலமாக அனுப்பி வைத்தல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியின் பெயரைக் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவும்.

**பதவி: பொதுமுகாமையாளர் (நிரந்தரம்)**
சம்பள குறி இல: 101/05
சம்பள அளவுத்திட்டம்: 04/2018 இன்படி 20480-310X10-345X10-27030

**அங்கீகரிக்கப்பட்ட தகைமைகள்:**

(அ) கூட்டுறவு ஊழியர் 06 வது சம்பளத்திட்டப் பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால அனுபவம். அல்லது கூட்டுறவு ஊழியர் 07 வது சம்பளத் திட்டப்பதவியில் ஆகக் குறைந்தது 06 ஆண்டு கால அனுபவம்.

**அல்லது**

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகப் பட்டமொன்றுடன் அல்லது அதற்கு சமனான தகைமை யொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமைமட்டத்தி லான பதவி ஒன்றில் ஆகக் குறைந்தது 10 ஆண்டு கால அனுபவம். இதில் உயர்தர முகாமைமட்டத்தி லான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

**அல்லது**

(இ) கூட்டுறவு ஊழியர் உயர்தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 08 வருட கால அனுபவம் இதில் சிரேஷ்ட முகாமைமட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 வருட கால அனுபவம் கட்டாயமாகும் / க.பொ.த. உயர்தரப்பத்திரப் பரீட்சையில் 03 பாடங்களுட னான சித்தி யுடன். அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்தி லான பதவியொன்றில் ஆகக் குறைந்தது 12 வருட சேவையாற்றிய அனுபவம். இதில் உயர்தர முகாமை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்தது 03 ஆண்டு கால கட்டாய அனுபவம்.

**குறிப்பு:**
விசேடமாக மொழித்தகைமை உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மேற்படி சம்பளத்திட்டத்திற்கு மேலதிகமாக கூட்டுறவு ஊழியர் ஆணைக்குழுவால் அங்கீகரிக் கப்பட்ட விசேட படி. வாழ்க்கைச்செலவுப்படி போன்றன சுற்றுநிருபத்திற்கு அமைவாக வழங் கப்படும்.

**பொதுவான நிபந்தனைகள்:**

01. வயது 16.01.2019 ஆம் திகதியன்று 18 வயதுக்கு குறையாதவர்களாகவும் 45 வயதுக்கு மேற்படாத வர்களாகவும் இருத்தல் வேண்டும்.
02. யாழ்.மாவட்டத்தில் இரண்டு வருடங்களுக்கு மேலாக வசித்தமையை உறுதிப்படுத்துவதற்கு சான்றி தழ்கள் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. கல்வித்தகைமைகள். அனுபவம். வயது. வதிவிடத்தை உறுதிப்படுத்தல். நற்சான்றிதழ். தேசிய அடையாள அட்டை என்பவற்றின் உறுதிப்படுத்தப்பட்ட பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
04. நியமனத்தின் போது சுற்றுநிருபத்திற்கமைவாக ரொக்கப்பிணை. உறுதிப்பிணை செலுத்தத் தயாராக இருத்தல் வேண்டும்.
05. ஏனைய சங்கங்களில் இருந்து விண்ணப்பிப்பவர்கள் அச்சங்கத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும்.
06. சங்கப் பணியாளருக்கு வயதெல்லை கருத்தில் கொள்ளப்படமாட்டாது.
07. விண்ணப்பத்தில் காட்டப்படும் தகவல்களும். இணைப்புகளும் உண்மையானதும். செம்மை யானதுமென உறுதிப்படுத்துவதோடு ஏதேனுமொரு சந்தர்ப்பத்தில் இதில் ஏதேனுமொன்று பிழையா னதெனவோ அல்லது பொய்யானதெனவோ காணப்படுமிடத்து நஷ்டஈடு பெறாது உடனடியாகப் பதவி நீக்கம் செய்யப்படுவீர்கள் என்பதை தாங்கள் அறிந்து கொள்ள வேண்டும்.

01.01.2019

தலைவர்

(in. 8936) (13,.17)

## பொது அறிவித்தல் 2019
## வேலணை பிரதேசசபை, வேலணை

### 01. படவரைஞர்களை பதிவுசெய்தல்

2019ஆம் ஆண்டு படவரைஞர்களாக விரும்புவோரும் ஏற்கனவே எமது சபையில் பதிவு செய்தோரும் 2019ம் ஆண்டு பங்குனி 31ஆம் திகதிக்கு முன்னர் மேற்கொள்ளவும் அல்லது புதுப்பித்துக் கொள்ளவும். மேலதிக விபரங்களிற்கு தலைமை அலுவலகத்துடன் அலுவலக நேரத்தில் தொடர்பு கொள்ளவும்.

### 02. வியாபார உரிம, அனுமதிப்பத்திரம்

இப் பிரதேசசபை எல்லைக்குள் வியாபாரம் செய்வோர் மற்றும் எமது பிரதேசத்திற்கு பொருட்களை விநியோகிப்போர் உரிய விண்ணப்பப்படிவத்தை மண்டதீவு, அல்லப்பிட்டி, வேலணை, புங்குடுதீவு, நயினாதீவு ஆகிய உப அலுவலகங்களில் 2019ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதிக்குள் பெற்று அதனைப் பூரணப்படுத்தி உரிய உப அலுவலகங்களில் சமர்ப்பித்து உரிய கட்டணங்களை 31-03-2019ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி வியாபார அனுமதிப்பத்திரத்தை (Trade License) பெற்றுக் கொள்ளவும். 31-03-2019ஆம் திகதிக்கு முன்னர் வியாபார அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்ளாதவர் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்.

### 03. சூழல் பாதுகாப்பு உரிமம்

தொழில் / வியாபார நடவடிக்கைகளை பிரதேசசபை எல்லைக்குள் மேற்கொள்பவர்கள் அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு விண்ணப்பப் படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி சூழல் பாதுகாப்பு உரிமத்தினைப் பெற்றுக் கொள்ளலாம்.

### 04. துவிச்சக்கரவண்டி உரிமம், மிருகங்களுக்கான உரிமம்.

துவிச்சக்கர வண்டிகள், வளர்ப்பு நாய்கள் வைத்திருப்போர் 31-03-2019ம் திகதிக்கு முன்னர் உரிய உப அலுவலகங்களில் உரிய கட்டணங்களைச் செலுத்தி 2019ம் ஆண்டிற்கான துவிச்சக்கர வண்டி, வளர்ப்பு நாய்களுக்கான உரிமங்களைப் பெற்றுக் கொள்ளவும்.

### 05. கட்டட அனுமதி வழங்கல்.

1. தங்களது ஆதனத்தில் புதிதாக கட்டடங்கள், மதில்கள், அமைப்பதாயின் அல்லது பழைய கட்டடத்தினை புனரமைப்பதாயின் பிரதேச சபையில் உரிய ஆவணங்களை சமர்ப்பித்து அனுமதி பெற்ற பின்னரே கட்டடங்கள், மதில்கள் அமைக்கப்படல் வேண்டும்.
2. புதிய கட்டடம் அமைப்பதற்கு அனுமதி பெற்றவர்கள் அனுமதி பெற்ற திகதியில் இருந்து ஒரு வருட காலத்தினுள் வேலை பூர்த்தியடையாது விடின் உரிய கட்டணம் செலுத்தி கட்டட அனுமதியை புதிப்பிக்கவேண்டும்.
3. அத்துடன் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டதும் பிரதேசசபை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு படிவங்களைப் பெற்று பூர்த்தி செய்து உரிய கட்டணத்தை செலுத்தி அமைவுச் சான்றிதழைப் பெற்றுக்கொண்ட பின்னரே கட்டடத்தில் குடிபுகுதல் வேண்டும்.
4. சபை எல்லைக்குள் குழாய்க்கிணறு அமைப்பவர்கள் சபையின் அனுமதி பெற்று அமைத்தல் வேண்டும்.

### 06. வீதி ஒழுங்கும், தெருவோர வியாபாரமும்

1. வீதி ஒழுங்கைப் பேணி நடக்குமாறு அறிவுறுத்தப்படுகிறது. வியாபார நிலையங்களிற்கு முன்னால் பாதசாரிகளின் போக்குவரத்திற்கு இடையூறாக பொருட்களை வெளியே வைத்து விற்பனை செய்வது காட்சிப்படுத்துவது தடைசெய்யப்பட்டுள்ளது. அவற்றை அனுசரித்து நடத்துமாறு வர்த்தக நிலைய உரிமையாளருக்கு அறியத்தருகின்றேன்.
2. சந்தைச் சுற்றாடலில் இருந்து 500m சுற்று வட்டாரத்தில் கடல் உணவுகள், மரக்கறி, பழங்கள், தேங்காய், முட்டை என்பன விற்பது தடைசெய்யப்பட்டுள்ளது.

### 07. விளம்பரங்கள் அமைத்தல் / காட்சிப்படுத்தல்

பிரதேச சபை எல்லைக்குள் அமைக்கப்படும் விளம்பரப் பலகைகளுக்கு பிரதேச சபையின் அனுமதியினைப் பெற்றே விளம்பரங்களைக் காட்சிப்படுத்தல் வேண்டும். அனுமதி பெறப்படாத விளம்பரங்கள் சபையினால் அகற்றப்படும்.

### 08. பொது இடங்களில் கழிவுகள் போடுதல் தொடர்பான அறிவித்தல்

1. திண்மக் கழிவுகளை பிரதேச சபைக்கு ஒப்படைக்கும் போது அவை தரம் பிரித்து வழங்க வேண்டும் என்பதுடன் திண்மக் கழிவுகள் பொது இடங்களில் கொட்டுதல் தடை செய்யப்படுவதோடு நுளம்புப் பெருக்கத் திற்கு ஏதுவாக சூழலை வைத்திருப்போர் மீதும் சட்டநடவடிக்கை மேற் கொள்ளப்படும்.
2. அபிவிருத்தி செய்யப்படாத காணிகளில் உள்ள பற்றைகள் துப்பரவு செய்யப்பட வேண்டும். அல்லா தவிடத்து பிரதேசசபைச் சட்டஏற்பாடடிற்கு அமைவாக பிரதேசசபையால் தன்னுரித்தாக்கப்பட்டு துப்பரவு செய்யப்படும்.

### 09. பொதுச் சுகாதாரத்தை பேணுதல்

உணவு கையாளும் நிலையப் பணியாளர்கள் மருத்துவப் பரிசோதனை மேற்கொண்டு அனுமதி பெற்றிருத்தல் வேண்டும்.

### 10.ஒப்பந்தகாரரைப் பதிவுசெய்தல்

2019ஆம் ஆண்டிற்கான நிர்மாணப் பொறியியல் வேலைகளை செய்து வழங்குவதற்கு தேசிய நிர்மாணப் பயிற்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனத்தின் பதிவை வைத்திருக்கும் ஆர்வமுடைய மனுதாரர்கள் பதிவை மேற்கொள்ள முடியும்.

**நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி**
**தவிசாளர்,**
**வேலணை பிரதேசசபை.**


## 50% வரையான விலை கழிவு சலுகை

யாழ் நகரில் 469, K.K.S வீதியில் அமைந்துள்ள Lanka Tiles Show Room இல் வழங்கப்படும் 50% வரையான விலைக் கழிவு சில மாற்றங்களுடன் மேலும் சிலநாள்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

(CS 22236)(14.17) **நிர்வாகம்.**


## இரண்டாம் ஆண்டு நினைவுகளில்...

தோற்றம் 22 . 02 . 1945

மறைவு 25 . 12 . 2016



அமரர்

**சின்னத்தங்கம் புலேந்திரலிங்கம்**

திதி : அபரபக்க துவாதசி (02.01.2019)

அம்மா...
எம்முகம் பார்க்கும் முன்பே
எம் குரல் கேட்கும் முன்பே
எம் குணம் அறியும் முன்பே
எம்மைத் தெரிந்த ஓர் இதயம்...

பாசம் என்னும் மூன்றெழுத்தில்
அன்பு என்னும் மூன்றெழுத்தைச் சொரிந்து
வளர்த்தெடுத்த எம் தெய்வம்
இரண்டாண்டு நிறைவுற்றும்
அகலவில்லை இருள் வாழ்வு.

"சாரங்கம்"
முதலாம் மைல் வீதி,
மடத்தடி மேற்கு,
சாவகச்சேரி.

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கும் குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

**சண்முகம் நகுலேஸ்வரன்**

*(அமுதசுரபி உணவக உரிமையாளர்)*

விளானைப் பிறப்பிடமாகவும் புதுறோட், காரை நகரை வசிப்பிடமாகவும் கொண்ட சண்முகம் நகுலேஸ்வரன் நேற்று (01.01.2019) செவ்வாய்க் கிழமை இரவு காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கிளுவனை,**
**களபூமி, காரைநகர்.**
**077 5117303**

(CS 22250/15/18)

தகவல்:
குடும்பத்தினர்.


After O' level Exam
Diploma in Spoken English
Full / Part time

முழுநேரப் பாடநெறியானது திங்கள் தொடக்கம் வெள்ளி வரை தினமும் 4 மணித்தியாலங்கள் நடைபெறுவதுடன் பகுதிநேரப் பாடநெறியானது சனி, ஞாயிறு தினங்களில் நடைபெறும்.

IELTS கற்பதுடன் எங்களது கல்லூரியிலேயே பரீட்சைக்கும் தோற்றுங்கள்
கல்வி கற்க, தொழில் மற்றும் குடியேற
Now prepare for your Academic / General IELTS
Next exam date on 19/01/19

திருமணம் முடித்து Spouse விசாவில் UK செல்லவுள்ளவர்களுக்கு
IELTS A1 LIFE SKILLS
கடந்த 3 வருடத்தில் 640 மாணவ, மாணவிகளை சித்தியடையவைத்த ஒரே ஒரு நிறுவனம்

ஜெர்மன், சுவிஸ் மொழிப் பாடநெறி Deutsch
நெதர்லாந்து மொழிப் பாடநெறி Dutch
பிரான்ஸ் மொழிப் பாடநெறி French

BRITISH COLLEGE of Education
More information 0777-596148
23, Kachchari nallur Rd, Jaffna. Tel: 021-4927113
103, Mannar Rd, Vavuniya. Tel : 024-4930041
Main Street, Mullaithivu. Tel : 021-4927497
Station Rd, Mannar. Tel : 023-4924124

**தேங்காய் விற்பனைக்கு**

தோலுடன் தேங்காய் மற்றும் நாற்றுத் தேங்காய் மொத்தமாக விற்பனைக்கு உண்டு. (AKN 9805) (14,17)

**077 921 3835**

**வீடு வாடகைக்குண்டு**

நல்லூர் சுற்றாடலில் சிறிய வீடு வாடகைக்குண்டு.

(அரச உத்தியோகத்தர் விரும்பத்தக்கது)

**ஆ.சத்தியலோகன்**

இல.3, பண்டாரக்குளம் மேற்கு ஒழுங்கை, நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

**077 477 1218**

(CS 22227)(14,17)

**நாகபூஷணி திருமண சேவை**

மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் உடன் தரப்படும்.

**257, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.**


**021 222 9306/077 138 7596**

(CS 22214) (14,17)

# மரண அறிவித்தல்கள்

## அந்தோனிப்பிள்ளை ஜோசப்

*(கோவிற்குடியிருப்பு, முல்லைத்தீவு)*



| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 18.09.1948 | 31.12.2018 |

இரணைப்பாலையைப் பிறப்பிடமாகவும், கோவிற் குடியிருப்பு முல்லைத்தீவை வசிப்பிடமாகவும் கொண்ட அந்தோனிப்பிள்ளை ஜோசப் நேற்று முன்தினம் (31.12.2018) காலமாகி விட்டார்.

அன்னார் காலஞ்சென்ற திரு. திருமதி அந்தோனிப் பிள்ளையின் பாசமிகு மகனும் காலஞ்சென்ற திரு.திருமதி யோசேப்பின் மருமகனும் திருமதி மேரிதிரேசாவின் அன்புக் கணவரும் திரு.விக்ரர் யோய் (கிசோக் லண்டன்), திரு.கில்மன்சாள்ஸ் (கில்மன் சுவிஸ்), திரு.கிங்சிலிராஜ், திரு.கீதபொன்கலன்(கிருபா, பிரான்ஸ்), திரு.ஜெறாட் ஜெயகரன்(கிரி), காலஞ்சென்ற மேரிறொக்சி, திரு.கனிஸ்ரன் யோய்(டினோஜன் , லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி வசந்தினி விக்ரர் யோய்(லண்டன்), திருமதி ஹெற்றிசியா கில்மன் சாள்ஸ்(ஆசிரியை, உடுப்புக்குளம் தமிழ் வித்தியாலயம்), திருமதி டயனி கீதபொன்கலன் (பிரான்ஸ்), திருமதி மேரிஸ்ரெலா ஜெறாட் ஜெயகரன் (ஆசிரியை, யா/ உடுத்துறை மகா வித்தியாலயம்), திருமதி வக்சலா கனிஸ்ரன்யோய் ஆகியோரின் அன்பு மாமனாரும் றொக்சன், றொனின்சன், றைசன்(லண்டன்), சியான், டெவினா (பிரான்ஸ்), ஜெலக்சினி, யஸ்சிகா ஆகியோரின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற செலஸ்ரின், மனுவேற்பிள்ளை, அல்பிரட், கில்பேட் மற்றும் இருதயநாயகி (லீலா, லண்டன்), அல்போன்ஸ் (ஜேர்மனி), அருட்தந்தை அகஸ்ரின் (பங்குத்தந்தை சில்லாலை) ஆகியோரின் சகோதரனும் காலஞ்சென்ற மிக்கேல்பிள்ளை மற்றும் அன்னறோஸ், யேசுரட்ணம், இம்மானுவல், யசிந்தா, காணாமல் ஆக்கப்பட்ட எட்வேட் ஜெயராஜா, மரிய யூக்கறிஸ்ரா (யாழ். போதனா வைத்திய சாலை), ஜெறோம் எமலியா (மல்லிகா - இந்தியா), அன்ரன் ஜெயராணி (றஞ்சினி), கமிலஸ் (யூட் டென்மார்க்) ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.


அன்னாரின் இறுதி நல்லடக்கத்திருப்பலி முல்லைத்தீவு புனித யூதாததேயு ஆலயத்தில் நாளை (03.01.2019) வியாழக்கிழமை மாலை 3.00 மணிக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டு மாத்தளன் சேமக் காலையில் நல்லடக்கம் செயயப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்**
**அருட்தந்தை அ.அகஸ்ரின்.**

(CS 22240)(14,17)

# மரண அறிவித்தல்கள்

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 28 . 02 . 1938 | 31 . 12 . 2018 |



## அருட்திரு சின்னத்தம்பி சாமுவேல் கருணைராஜ்

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட இலங்கை மெதடிஸ்த திருச்சபையைச் சேர்ந்த அருட்திரு S.S. கருணைராஜ் 31.12.2018 திங்கட்கிழமை கர்த்தருக்கு நித்திரை யடைந்தார்.

அன்னார் எலிசபெத் சற்குணதேவியின் (ஓய்வுபெற்ற ஆசிரியர் - யாழ் மத்திய கல்லூரி) அன்புக் கணவரும், நிஷாந்தி லோகராஜ் (Teacher st Thomas Prep), நிஷாந்தன் கருணைராஜ் (Manager HNB Jaffna Metro) ஆகியோரின் அன்புத் தந்தையும் லோகராஜ் (Senior Manager Sunshine Healthcare Lanka (Pvt Ltd), ஊர்மிளா ஆகியோரின் அன்பு மாமனும், லக் ஷி, மதுஷனன், மார்க், எய்டன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்றவர்களான சோபிதமலர், விக்கடர் கிருபைராஜ், ரெஜி, கருணா மற்றும் அமிர்தா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (02.01.2019) புதன்கிழமை காலை 9.00 மணிமுதல் ரிம்மர் மண்டபத்தில் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு மாலை 4.00 மணிக்கு இறுதி ஆராதனையின் பின்னர் கொட்டடி சேமக்கலைக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ள வும்.

54/19, **விதானையார் வீதி,**
**சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்**
0777323405

**தகவல்:**
**நிஷாந்தன் கருணைராஜ்**

(cs14355)(13,17)

ஓம் விராட் விஸ்வப்பிரமனே நமஹ

| பிறப்பு | இறப்பு |
| --- | --- |
| 02 . 01 . 1932 | 29 . 12 . 2018 |



## திருமதி பொன்னுத்துரை சீதாலெட்சுமி

புங்குடுதீவு 4 ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் நல்லூர் யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொன்னுத்துரை சீதாலெட்சுமி 29.12.2018 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - நாகம்மா தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களானபசுபதி-பார்வதிதம்பதியரின்அன்புமருமகளும்,காலஞ்சென்றபொன்னுத்துரை அவர்களின் அன்பு மனைவியும், தங்கவேலு (பிரான்ஸ்), கலாதேவி (பிரான்ஸ்), கலாநிதி (லண்டன்), பேரானந்தசிவம் (டென்மார்க்), ஆனந்தரூபி (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு தாயாரும், சந்தானலட்சுமி (இலங்கை), சோமசுந்தரம் (பிரான்ஸ்), சிவபாலன் (லண்டன்), பத்மலோஜினி (டென்மார்), சிறிதரன் (சுவிஸ்) ஆகியோரின் அன்பு மாமியும், காலஞ்சென்றவர்களான பாலசுப்பிரமணியம், செந்திவேல், முத்துலிங்கம், கணேஸ், நவரெத்தினம் மற்றும் இராசாத்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தம், மனோன்மணி, இராசம்மா மற்றும் இரத்தினபூபதி, தேவசேனா, பராசக்தி, சற்குணாம்பாள், காலஞ்சென்ற நவரெத்தினம் ஆகியோரின் மைத்துனியும், காலஞ்சென்றவர்களான சொர்ணம், சின்னையா மற்றும் இராசலிங்கம் ஆகியோரின் சகலியும், மதீஸன், பவீஸன், பிரியங்கா, நிலக்ஷி, ஜெனனன், சுருதி, அனுசாந், அபிசாந், சந்தியா, வினோத், பானுஜா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், ஆதேஸ், ஆதிரன் ஆகியோரின் அன்பு பூட்டியும் அவார்.


அன்னாரின் ஈமைக்கிரியைகள் நாளை (03.01.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று முற்பகல் 10.00 மணியளவில் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**35/1, குமார வீதி,**
**நல்லூர், யாழ்ப்பாணம்.**

**தவகல்:**
**குடும்பத்தினர்.**

(cs14355)(13,17)

| தோற்றம் | மறைவு |
| --- | --- |
| 03 . 05 . 1934 | 01 . 01 . 2019 |



## நடேசு பூமணி

கோட்டைக்காடு மல்லாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நடேசு பூமணி நேற்று (01.01.2019) செவ்வாய்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற நடேசுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அருச்சுனர் இலட்சுமி தம்பதியினரின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான ஐயன் பொன்னம்மா தம்பதியினரின் அன்பு மருமகளும் தர்மகுலசிங்கம் (புண்ணியமூர்த்தி) மற்றும் நாகபூசணியின் (பூசணி) அன்புத் தாயாரும் காலஞ்சென்ற சர்வானந்தன் மற்றும் ஈஸ்வரியின் பாசமிகு மாமியும் பரமேஸ்வரி, காலஞ்சென்றவர்களான தர்மலிங்கம், சுந்தரலிங்கம் மற்றும் தங்கமலர் (மணி), இரத்தினசிங்கம், அமுதலிங்கம், சங்கரலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரியும் சர்வதாஸ், சர்வராஜா, சர்வகுமார், ஜெகதீஸ்வரி, பாகீஸ்வரன், சர்மினி, நிறோஷா, வரன், சுகந்தினி, யோகநாதன், தேவகி, டினேஷினி, பிரபு ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் கிஷானா, றஜிஷ்னா, தக்ஷயா, அட்ஷயா, அட்ஷயன், லோகிதன், அனிருத், சுதேஷா, லக்ஷகன், விஷோபா, அதிரூப் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2019) புதன்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பி.ப. 01.30 மணியளவில் தொந்தனை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

**கோட்டைக்காடு, மல்லாகம்.**

(CS 23621/15/18)

## மரண அறிவித்தல்கள்



### திருமதி தங்கமுத்து தணிகாசலம்

அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும் சாரதா வீதி, சங்கத்தானை, சாவகச்சேரியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி தங்கமுத்து தணிகாசலம் கடந்த (30.12.2018) ஞாயிற்றுக்கிழமை கர்த்தருக்குள் நித்திரையடைந்தார்.

அன்னாரின் இறுதி அஞ்சலி நிகழ்வுகள் நாளை (03.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 09.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் எக்காளத்தொனி பூரண சுவிஷேச சபை, சேமக்காலையில் (கைதடி - நுணாவில், சாவகச்சேரி) நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**சாரதா வீதி,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

தகவல்: **அப்பன்** (மருமகன்)
**077 869 4250**



### நடராஜா நகுலேந்திரராஜா (சிவம்)

யாழ்ப்பாணம், V.H.ஒழுங்கை, இருபாலையை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட திரு.நடராஜா நகுலேந்திரராஜா 31.12.2018 இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா நடராஜா நாகரத்தினம் தம்பதிகளின் அன்பு மகனும் கௌசலாதேவி, கமலாதேவி, கருணாதேவி, யோகேந்திரராஜா, புவனேந்திரராஜா, பவானி மற்றும் காமினி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஜெயரங்கநாதன், ஜெயராஜா, காலஞ்சென்ற பரராஜசிங்கம், ரதிராணி, கமலராணி, ஸ்ரீஸ்கந்தராஜா, சுதாகரன் ஆகியோரின் மைத்துனரும் ஜனரஞ்ஜனி நந்தகுமார், தட்ஷாயினி திலீபன், கிருத்திகன்,ஆதித்தன்,வைஷ்ணவி,சகானா, சந்தியா, சாதனா ஆகியோரின் அன்பு மாமாவும் நிலா, சாம்பவி, சங்கவி, சாகித்தியன், சாத்வீகன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2019) வியாழக்கிழமை பி.ப ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக இருபாலை செக்கடி இந்துமயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**V.H.லேன்,**
**இருபாலை, கோப்பாய்.** (CS 22231) (14,17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

பிறப்பு
29
.
03
.
1939



இறப்பு
01
.
01
.
2019

### திருமதி பியற்றிஸ் மகிழ்மலர் பாலசிங்கம்

திருமதி பியற்றிஸ் மகிழ்மலர் பாலசிங்கம் 01.01.2019 (செவ்வாய்க் கிழமை) காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சாமுவேல் - லூசி தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்ற சுப்பர் - லட்சுமி தம்பதிகளின் அன்பு மருமகளும் பாலசிங்கத்தின் பாசமிகு மனைவியும் காலஞ்சென்ற பவளமலர் மற்றும் வொல்டர் ஜெயராஜா, இரஞ்சிதமலர் றெஜினோல்ட்(பிரான்ஸ்), சந்திரராஜா(சுட்டி), நீற்றா ஆகியோரின் அன்புச் சகோதரியும் சுபராஜ், சுகந்தராஜ், தயாளராஜ், இரவீந்திரராஜ், சுனித்திரா ஆகியோரின் பாசமிகு தாயாரும் சிரானி, சாமுண்டீஸ்வரி, தர்சினி, சுதாயினி, கொலின் ஆகியோரின் அன்பு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் புகழுடல் நீக்கலஸ் வீதியிலுள்ள இல்லத்தில் இன்று (02.01.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணி வரை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நல்லடக்க ஆராதனை "பவளஸ்தான்" உடுவிலிலுள்ள அவரது இல்லத்தில் நண்பகல் 12.00 மணியளவில் இடம்பெற்று நல்லடக்கத்திற்காக மல்வம் சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 22237) (14,17)

தகவல்:**குடும்பத்தினர்.**

**077 6541642**

## பௌதீகவியல் / இணைந்த கணிதம்
## புதிய A/L 2019, 2020, 2021 வகுப்புகள்
### மொழிகள் தமிழ்/ ஆங்கிலம்

பிரபல கல்லூரிகளில் (3 பிரபல தேசிய பாடசாலைகள் உட்பட) பல ஆண்டுகள் மிகச் சிறப்பாக மேற்படி பாடங்களை கற்பித்து சிறந்த பெறுபேறுகளையும் அனுபவத்தையும் பெற்ற ஆசிரியரினால் மேற்படி பாடங்களை ஏராளமான பயிற்சிகளுடன் கற்பிக்கப்படுகிறது. புதிய பாடத்திட்டத்திற்குரிய ஏராளமான புத்தகங்கள் உள்ளன. வகுப்புகள் நடைபெறுகின்றன. (தனிப்பட்ட முறையிலும் தொடர்பு)

**- 077 242 3400, 077 887 1217, 077 517 8727**

## முதலாம் ஆண்டு நினைவு



### அமரர் தாமு பேரின்பநாதன்

*(ஓய்வுபெற்ற பொறியியலாளர் - இலங்கைவங்கி)*

*திதி : துவாதசி (02.01.2019)*

*தோற்றம்* 15.10.1941 — *மறைவு* 13.01.2018

ஆண்டொன்று ஓடிவிட்டது - அப்பா
ஓயவில்லை எம் கண்ணீர் அலை
ஆறவில்லை எம் இதய வேதனை
வருவாயோ எம் துயர் தீர்க்க

உம் நினைவில் வாழும்
மனைவி, மகள்மார், மருமகன், பேரப்பிள்ளைகள்

## மாணவர்கள் புதிய அனுமதி

### சிவபூமி பாடசாலை

*(சிறுவர் மனவிருத்திப்பாடசாலை)*
*கோண்டாவில் - யாழ்ப்பாணம்*

2019 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாற்றுவலுவுடைய மனவிருத்தி குன்றிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது. எனவே நேரடியாக எமது பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பபடிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**முகவரி :** சிவபூமி பாடசாலை, கோண்டாவில், யாழ்ப்பாணம்.
**தொலைபேசி இலக்கம் :** 021 222 7938

### சிவபூமி பாடசாலை

*(சிறுவர் மனவிருத்திப்பாடசாலை)*
*கனகபுரம் - கிளிநொச்சி*

2019 ஆம் ஆண்டுக்குரிய புதிய மாற்றுவலுவுடைய மனவிருத்தி குன்றிய மாணவர் அனுமதி நடைபெறுகின்றது. எனவே நேரடியாக எமது பாடசாலை அலுவலகத்தில் விண்ணப்பபடிவங்களை பெற்றுக் கொள்ளலாம்.

**வாகன வசதி செய்து கொடுக்கப்படும்.**

**முகவரி :** சிவபூமி பாடசாலை, முதலாம் ஒழுங்கை, கனகபுரம், கிளிநொச்சி
**தொலைபேசி இலக்கம் :** 021 222 7938, 021 228 5938

(CS 22207)(14,17)

## மரண அறிவித்தல்



### திருமதி இராஜேஸ்வரி சிவதாசன்

சுன்னாகம் கிழக்கு, காளிகோவில் வீதியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராஜேஸ்வரி சிவதாசன் கடந்த (30.12.2018) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலுப்பிள்ளை - செல்லாச்சிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும் காலஞ்சென்றவர்களான கந்தையா - சின்னத்தங்கம் தம்பதிகளின் அன்பு மருமகளும் காலஞ்சென்ற சிவதாசனின் பாசமிகு மனைவியும் விவேகானந்தராசா (லண்டன்), சச்சிதானந்தராசா (ஓய்வுபெற்ற ஊழியர் - இ. மி. ச. சுன்னாகம்), சிவானந்தராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் சாந்தி (லண்டன்), காலஞ்சென்ற யோகராணி மற்றும் கௌரி (லண்டன்) ஆகியோரின் அன்பு மைத்துனியும் மிதிலன், அகிலன், துளசி, தயானந்தி, பிரசாத், டிலன், பவித்திரா ஆகியோரின் பாசமிகு மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2019) புதன்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**காளிகோவில் வீதி,**
**சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.** (CS 22245/15/17)

தகவல்:
**குடும்பத்தினர்.**

## புத்தாண்டு அடி, தடிகளால் இருபத்தொரு பேர் காயம்

யாழ்ப்பாணம், ஜன.2

புத்தாண்டுதினமான நேற்று நடந்த அடி, தடிகளால் யாழ்ப்பாணம் குடாநாட்டில் 21 பேர் காயமடைந்துள்ளனர். 16 பேர் மருத்துவமனைகளில் தங்கிச் சிகிச்சை பெறுகின்றனர் என்று தெரிவிக்கப்பட்டது.

பெரியவிளான், இளவாலையில் இரு குழுக்களுக்கு இடையே நடந்த மோதலில் காயமடைந்த 10 பேர் தெல்லிபழை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

மது போதையில் ஏற்பட்ட தகராறே கைகலப்பாக மாறியது என்று தெரிவிக்கப்பட்டது. அதனால் அந்தப் பகுதியில் நேற்றிரவு பதற்ற நிலைமை ஏற்பட்டிருந்தது.

சம்பவத்தில் காயமடைந்தவர்கள் தெல்லிப்பழை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டிருந்த நிலையில் அங்கும் ஒரு குழுவினர் சென்று குழப்பத்தில் ஈடுபட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்தச் சம்பவங்கள் தொடர்பாக இளவாலைப் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர்.

யாழ்ப்பாணம் நகரப் பகுதியில் நடந்த அடி, தடிகளில் 6 பேர் காயமடைந்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் நேற்று நடைபெற்ற விபத்தில் காயமடைந்த நிலையில் 15 பேர் சேர்க்கப்பட்டுள்ளனர். விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

பளை மருத்துவமனையில் காயமடைந்த நிலையில் ஒருவர் சேர்க்கப்பட்டுள்ளார். அவரைத் தாக்கிய குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

(எ-105)

### அதிபர் சேவை. தரம் 3 வகுப்புகள்

**பிரிவு I**
பிரதி ஞாயிறு
9.00 ➡ 3.00
மணிவரை

**பிரிவு II**
மாலைநேர
புதன் (இன்று), வியாழன்
பி.ப. 4.30 ➡ 7.30
மணிவரை

சகல போட்டிப் பரீட்சைகளுக்குமுரிய வகுப்புகள் நடைபெறுகின்றன.

**யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு**
**076 688 3394**
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கியருகில்)

### வேலைஆள் தேவை

திருநெல்வேலியில் உள்ள வியாபார நிலையத்திற்கு வேலைக்கு இருவர் (ஆண்) தேவை. (CS 22229) (14,17)

**077 385 1214/ 077 392 3036**

### Chemistry Personal Classes

Basic, inorganic, Organic, Physical, கடந்த கால வினாக்கள் ஆசிரியரால் B.SC (cey) M.SC (Cey) Chemistry கற்பிக்கப்படும். **- 0750 460 555**

### விஷேட விலைகுறைப்பு

உரும்பிராய் கிழக்கு, கர்ந்தன் வீதி, ஊரெழுவில் இயங்கும் T.செல்வகுமார் ஆட்டிறைச்சிக் கடையில் (கிடாய் ஆடு) 1Kg இறைச்சி 1500/= க்கும் ஒரு பங்கு (2Kg) 3000/= க்கும் இன்று முதல் விற்பனை ஆகின்றது.

(CS 20044/15/18) **- 077 986 0180**


### விற்பனைக்கு

புறொயிலர்,
இறைச்சிக்கோழிகள்
மொத்தமாக
விற்பனைக்குண்டு.
சுத்தம் செய்யப்பட்டது.
**1Kg 460/=**
**077 031 3197**

(CS 22235) (14,17)

## மரண அறிவித்தல்கள்

தோற்றம் 14 . 06 . 1937



மறைவு 30 . 12 . 2018

### வடிவேலு அன்னலெட்சுமி (கமலம்)

கரம்பொன் கிழக்கு, காளி கோவிலடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி வடிவேலு அன்னலெட்சுமி (கமலம்) கடந்த 30.12.2018 இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சின்னத்தம்பி வடிவேலுவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான செல்லத்தம்பி - மாரிமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி - செல்லமுத்து தம்பதிகளின் மருமகளும் கமலவேலு (கனடா), கமலநாதன் (லண்டன்), கமலவதனி, கமலேந்திரன் (லண்டன்), காலஞ்சென்ற கமலவரதன் மற்றும் கமலபாலினி ஆகியோரின் தாயாரும் சந்திரா (கனடா), சாரதாமணி (லண்டன்), வில்லியம்வயிலர், சித்திராணி (லண்டன்), காலஞ்சென்ற செபரட்ணம் ஆகியோரின் மாமியாரும் காயத்ரி தவனேசன், ஹஸ்தனி அதர்சன், அஸ்வினி மதிவதனன், துஷானி அகிரதன், ஷபிதன், ஷபிக்கா, துஷிதா கஜேந்திரன், துஷாந், துஷானா, விஜய் ஆகியோரின் பேர்த்தியும் அருண், விஷ்வா, ஹனிஸ்கா, மதுமிதா, அபிஷிகா, ஹரிபிரதாப் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (03.01.2019) வியாழக்கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. ஒரு மணியளவில் கரம்பொன் கோட்டைவாசல் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**கரம்பொன் கிழக்கு, காளிகோவிலடி,**
**ஊர்காவற்றுறை. 077 104 2027, 076 561 3685**

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

பிறப்பு 24 . 01 . 1963



இறப்பு 31 . 12 . 2018

### வீரசிங்கம் இரவீந்திரன்

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்ட வீரசிங்கம் இரவீந்திரன் கடந்த (31.12.2018) திங்கட்கிழமை இரவு காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வீரசிங்கம் மற்றும் அன்னலச்சுமி தம்பதிகளின் அன்புப் புத்திரனும் காலஞ்சென்றவர்களான முத்தையாபிள்ளை - சிவக்கொழுந்து தம்பதிகளின் அன்பு மருமகனும் நித்தியகுமாரியின் அன்புக் கணவரும் கஜானன், டிலக்ஷனா (யூனியன் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அன்புத் தந்தையாரும் காலஞ்சென்ற சாரதா மற்றும் குகேந்திரன் (இந்தியா), சாருமதி (கொழும்பு), ஜெயேந்திரன் (அளவெட்டி), காலஞ்சென்ற பாலேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் பாமினி (இந்தியா), வைகுந்தவாசன் (கொழும்பு), சுபாசினி (அளவெட்டி), முத்துவேல்ராஜு (UK), சிவலிங்கராசா(UK), செல்வலிங்கராசா(கல்முனை), புஸ்பலிங்கராசா(கொக்குவில்), முத்துராணி (Holland), சண்முகலிங்கராசா (UK), சாந்தலிங்கராசா (தெல்லிப்பழை), விக்கினலிங்கராசா (Germany) ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (02.01.2019) புதன்கிழமை மு.ப. 10.00 மணிக்கு அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நண்பகல் 12.00 மணியளவில் தெல்லிப்பழை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

**33/33, பழைய D.R.O. அலுவலக வீதி,**
**தெல்லிப்பழை.**
**076 859 0486, 077 156 3558**

(CS 23622/15/17)

**தகவல்:**
**குடும்பத்தினர்.**

---

## அந்தியேட்டி வீட்டுக்கிருத்தி அழைப்பு



கடந்த (04.12.2018) செவ்வாய்க்கிழமை
இறைபதம் அடைந்த எமது குடும்பத்தலைவர்

அமரர்

### பொன்னம்பலம் அருளம்பலம்

(ஓய்வுபெற்ற மருத்துவ ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்)

அவர்களின் அந்தியேட்டிக்கிரியைகள் இன்று (02.01.2019) புதன்கிழமை காலை கீரிமலையிலும் நாளை (03.01.2019) வியாழக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்திலும் இடம்பெறவுள்ளது. இந் நிகழ்வில் இடம்பெறும் ஆத்மசாந்திப் பிரார்த் தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசனத்திலும் தங்களை குடும்பத்தினருடன் கலந்துகொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். இந்த அழைப்பை தங்களுக்கான தனிப்பட்ட அழைப்பாக கருத்திக்கொள்ளவும்.

**458, கண்டி வீதி,**
**அரியாலை.**

**குடும்பத்தினர்,**
**இராதை அருளம்பலம் (மகள்)**

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

### அமரர் சிங்காரவேலு பாஸ்கரன்



தோற்றம் 09.08.1961

கும்பி அம்மன் திருவடி நிழலில் 02.01.2018

*எம் குலத்தின் குல விளக்கே.*
*எங்கள் சுமைதாங்கியே ! பாசத்தின் பிறப்பிடமாய்*
*அன்பின் இருப்பிடமாய்*
*நற்பண்புடன் எம்மை வழி நடத்தி*
*எமக்காக வாழ்ந்த அன்புத் தெய்வமே !*
*ரோஜாவின் இதழ்களைப் போல் தீராத வாசமாய்*
*ராஜாக்கள் மாளிகையில் காணாத இன்பமாய் நேசமாய்*
*ஒன்றுபட்ட இதயத்திலே ஒருநாளும் பிரிவுகள் இல்லையென நினைத்தோம்*
*எம் உயிர் உள்ள ஒவ்வொரு கணமும் உங்கள் நினைவுடன் - வாழ்வோம்*
*புன்னகை தவழும் உங்கள் குரலெங்கே கம்பீர தோற்றம் எங்கே*
*எம் கண்ணீரில் கலந்தீரோ ! கரையில்லா காவியமே !*
*பண்பாலும். நேசம் நிறைந்த பேச்சாலும்*
*வந்தவரை விருந்தோம்பும் உயரிய பண்புடனும் - வாழ்ந்த*
*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

ஓம் சாந்தி !

**கற்கோவளம், பருத்தித்துறை.** (CS 22215)(14.17) **குடும்பத்தினர்.**

---

விளம்பர தொடர்புகளுக்கு
உதயன் advt@uthayan.com,
021 493 1111

---

## மரண அறிவித்தல்

பிறப்பு 12 . 07 . 1930



இறப்பு 28 . 12 . 2018

### சின்னம்மா கதிரவேலு

அளவெட்டியைப் பிறப்பிடமாகவும் பிரான்ஸை வதிவிடமாகவும் கொண்ட சின்னம்மா கதிரவேலு கடந்த (28.12.2018) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான திரு. திருமதி கணபதிப்பிள்ளை தம்பதிகளின் மகளும் அப்பாப்பிள்ளை கதிரவேலுவின் மனைவியுமாவார்.

அன்னாரின் துக்க நிகழ்வு இலந்தைகட்டி வைரவர் கோயிலடி நாக்கணாவத்தை, அளவெட்டி மேற்கு, அளவெட்டியில் உள்ள அவரது இல்லத்தில் நாளை (03.01.2019) வியாழக்கிழமை நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

(CS 22241)(14,17)

**தகவல்: குடும்பத்தினர்.**

**077 8510989**

## கே.ஸி.ஸி.ஸி. வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஜன. 2
அரியாலை சுதேசிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்ட துடுப்பாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி. அணி 119 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.
கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வின்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதலில் துடுப்பெடுத்தாடிய கே.ஸி.ஸி.ஸி விளையாட்டுக் கழக அணி 20 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 178 ஓட்டங்களைப் பெற்றது. துசியந்தன் 33 ஓட்டங்களையும், பிரதீஸ் 29 ஓட்டங்களையும் பெற்றனர்.
பந்துவீச்சில் வின்ஸ் விளையாட்டுக் கழக அணியின் சார்பில் வின்சன், சுரேன், மைக்கல் ஆகியோர் தலா இரு இலக்குகளை வீழ்த்தினர்.
180 ஓட்டங்களை இலக்காகக் கொண்டு களமிறங்கிய வின்ஸ் அணி 9 இலக்குகளை இழந்து 59 ஓட்டங்களை மட்டுமே பெற்றுத் தோல்வியடைந்தது. (ம-23)

## மாவத்தை கழகத்தின் கால்பந்து முடிவுகள்

யாழ்ப்பாணம், ஜன. 2
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்துத் தொடரின் ஆட்டங்கள் அராலி மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டங்கள் சிலவற்றின் முடிவுகள் வருமாறு:
காலை 9.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் சிவன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
காலை 10.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து தெல்லிப்பழை நாமகள் விளையாட்டுக் கழக அணி மோதியது. 2:0 என்ற கோல் கணக்கில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது.
நண்பகல் 11.30 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் நியூவொரியஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து வானவில் விளையாட்டுக் கழக அணி மோதியது. நிர்ணயிக்கப்பட்ட நிமிடங்களில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யாததை அடுத்து சமநிலைத் தவிர்ப்பு உதைகளில் வைத்து வெற்றியைத் தீர்மானிக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. 5:4 என்ற கோல் கணக்கில் நியூவொரியர்ஸ் அணி வெற்றிபெற்றது.
நண்பகல் 12.30 மணிக்கு இடம்பெற்ற ஆட்டத்தில் வளர்மதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து ஜேம்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது.
2:0 என்ற கோல் கணக்கில் வளர்மதி விளையாட்டுக் கழக அணி வெற்றிபெற்றது. (ம-23)






பார்சிலோனா அணி விடுமுறையைத் தொடர்ந்து குளிர்காலப் பயிற்சி முகாமை நேற்றுமுன்தினம் ஆரம்பித்தது. அது தொடர்பான ஒளிப்படங்களை தனது சமூக வலைத்தளங்களிலும் வெளியிட்டது. (ம)




# போராடி வென்றது ஹாட்லி யைட்ஸ்

யாழ்ப்பாணம், ஜன. 2
அரியாலை சுதேசிய நூற்றாண்டு விழாவை முன்னிட்டு நடத்தப்பட்டுவரும் ரி20 தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் ஹாட்லி யைட்ஸ் அணி வெற்றிபெற்றது.
கொக்குவில் இந்துக் கல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் மாலை இடம்பெற்ற இந்த ஆட்டத்தில் ஹாட்லி யைட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து பற்றிசியன்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதியது. முதலில் துடுப்பெடுத்தாடிய ஹாட்லி யைட்ஸ் அணி 18 பந்துப்பரிமாற்றங்கள் நிறைவில் 8 இலக்குகளை இழந்து 142 ஓட்டங்களைப் பெற்றது. பிரதீஸ் 79 ஓட்டங்களையும், றஜீவன் 15 ஓட்டங்களையும் பெற்றனர். பந்துவீச்சில் நிதர்சன் 3 இலக்குகளை வீழ்த்தினார்.
143 ஓட்டங்களைப் பெற்றால் வெற்றியென்ற இலக்குடன் பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய பற்றிசியன்ஸ் அணி 6 இலக்குகளை இழந்து 131 ஓட்டங்களை மட்டும் பெற்றது. இதையடுத்து 11 ஓட்டங்களால் வெற்றிபெற்றது ஹாட்லி யைட்ஸ். (ம-23)



## பாரதி விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது

யாழ்ப்பாணம், ஜன. 2
அராலி மாவத்தை விளையாட்டுக் கழகம் உழவர் விழாவை முன்னிட்டு நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் அராலி பாரதி அணி வெற்றிபெற்றது.
மாவத்தை விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆட்டத்தில் சென். லூட்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து அராலி பாரதி விளையாட்டுக் கழக அணி மோதியது.
முதல் பாதியில் பாரதியின் சார்பில் கோல் பதிவானது. ஜெராட் அந்தக் கோலைப் பதிவு செய்தார். இரண்டாவது பாதியில் சென். லூட்ஸின் சார்பில் தமிழ்ச் செல்வன் கோலைப் பதிவுசெய்து பதிலடி கொடுத்தார். சுபாஸ் பாரதியின் இரண்டாவது கோலைப் பதிவுசெய்ய முடிவில் 2:1 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்றது பாரதி. (ம-23)

## இன்றைய மோதல்கள்

யாழ்ப்பாணம், ஜன. 2
**உடற்கல்வி ஆசிரியர் சங்க கால்பந்தாட்டம்**
வடக்கு மாகாண உடற்கல்வி டிப்ளோமா ஆசிரியர் சங்கம் நடத்தும் அழைக்கப்பட்ட கால்புந்தாட்டக் கழகங்களுக்கு இடையிலான கால்பந்தாட்டத் தொடரின் ஆட்டங்கள் உரும்பிராய் இந்துக் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை மாலை 4 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஆனைக்கோட்டை யூனியன் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து குறிஞ்சிக்குமரன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
மாலை 5 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் ஊரெழு றோயல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து உருத்திரபுரம் விளை யாட்டுக் கழக அணி மோதவுள்ளது.

**தென்றல் கழக தாச்சித் தொடர்**
நவாலி தென்றல் விளையாட்டுக் கழகம் நடத்தும் தாச்சித் தொடரின் ஆட்டங்கள் கழக மைதானத்தில் இடம்பெற்று வருகின்றன. இந்தத் தொடரில் இன்று புதன்கிழமை இரவு 7 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் அளவெட்டி பாரதி விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து சண்டிலிப்பாய் உதயசூரியன் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது.
இரவு 7.45 மணிக்கு இடம்பெறும் ஆட்டத்தில் தாவடி காளியம்பாள் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து நாவலர் விளையாட்டுக் கழக அணி மோதவுள்ளது. (ம-23)

## பிளக் புல்ஸ் சம்பியனானது

யாழ்ப்பாணம், ஜன. 2
பொலிகை பாரதி விளையாட்டுக் கழகம் நடத்தும் கால்பந்தாட்டத் தொடரில் பிளக் புல்ஸ் அணி கிண்ணம் வென்றது.
பாரதி விளையாட்டுக் கழக மைதானத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இறுதியாட்டத்தில் பொலிகை கெல்த் ஸ்ரார் அணியை எதிர்த்து பொலிகை பிளக் புல்ஸ் அணி மோதியது.
முதல் பாதியில் பிளக் புல்ஸ் அணியின் சார்பாக இரண்டு கோல்கள் பதிவாகின. ராகவன், துவாரகன் இருவரும் அந்தக் கோல்களைப் பதிவுசெய்தனர். இரண்டாம் பாதியில் இரண்டு அணிகளும் கோல்கள் எதையும் பதிவுசெய்யவில்லை. முடிவில் 2:0 என்ற கோல் கணக்கில் பிளக் புல்ஸ் அணி கிண்ணம் வென்றது. (ம-23)

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின்

# சிறந்த வீராங்கனையாக ஸ்மிருதி தேர்வானார்

மகளிர் கிரிக்கெட்டில் 2018ஆம் ஆண்டுக்கான சிறந்த வீராங்கனைகளுக்கான விருதை ஐ.சி.சி. அறிவித்துள்ளது. இதில் இந்த ஆண்டின் சிறந்த கிரிக்கெட் வீராங்கனை மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டியின் சிறந்த வீராங்கனை என இரட்டை விருதை வென்றுள்ளார் இந்திய அணி வீராங்கனையான ஸ்மிருதி.
இதற்கு முன்னர் கடந்த 2007ஆம் ஆண்டு இந்த விருதை ஜூலன் .கோஸ்வாமி பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.
இடது கை வீராங்கனையான ஸ்மிருதி 2018ஆம் ஆண்டில் 12 ஒருநாள் போட்டிகளில் விளையாடி 66.90 சராசரியுடன் 669 ஓட்டங்களும், 25 ரி- 20 ஆட்டங்களில் விளையாடி 130.67 ஸ்டிரைக் ரேட்டுடன் 622 ஓட்டங்களும் குவித்திருந்தார்.



ஆண்டின் சிறந்த வீராங்கனையாக தேர்வு செய்யப்பட்டுள்ள அவர், 'ரேச்சல் ஹெய்ஹோய் ஃபிளின்ட்' விருதை பெறுகிறார். சமீபத்தில் மேற்கிந்தியத் தீவுகளில் நடைபெற்ற ரி-20 உலகக் கிண்ணத்தில் இந்திய அணி அரை இறுதி வரை முன்னேறியதில் ஸ்மிருதி சிறந்த பங்களிப்பை வழங்கியிருந்தார். அந்தத் தொடரில் அவர், 5 ஆட்டங்களில் 125.35 ஸ்டிரைக் ரேட்டுடன் 178 ஓட்டங்கள் சேர்த்திருந்தார். ஐ.சி.சியின் ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் மந்தனா 4ஆவது இடத்திலும், ரி- 20 தரவரிசையில் 10ஆவது இடத்திலும் உள்ளார்.
சிறந்த ரி-20 வீராங்கனையாக ஆஸ்திரேலியாவின் அலிஸ்ஸா ஹீலியும், வளர்ந்து வரும் வீராங்கனையாக இங்கிலாந்தைச் சேர்ந்த 19 வயதான இடதுகை சுழற்பந்து வீச்சாளர் சோபி எக்லஸ்டோனும் தெரிவு செய்யப்பட்டனர்.

# இந்திய அணி முதலிடத்தில்

பன்னாட்டுக் கிரிக்கெட் சபையின் டெஸ்ட் ஆட்டங்களுக்கான தரப்படுத்தலில் இந்திய அணி தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளது.
மெல்போர்ணில் கடந்த ஞாயிற்றுக்கிழமை முடிவுக்கு வந்த ஆஸ்திரேலியாவுக்கு எதிரான தொடரில் பெற்ற வெற்றியை அடுத்து இந்திய அணியின் ஆதிக்கம் மேலும் அதிகரித்துள்ளது. 116 புள்ளிகளு டன் இந்திய அணி முதலிடத்தில் உள்ளது. 108 புள்ளிகளுடன் இங்கிலாந்து இர்ண்டாவது இடத்தில் உள்ளது. 107 புள்ளிகளுடன் நியூசிலாந்து மூன்றாவது இடத்தில் உள்ளது. 106 புள்ளிகளுடன் தென்னாபிரிக்கா நான்காவது இடத்தில் உள்ளது. 102 புள்ளிக ளுடன் ஆஸ்திரேலியா ஐந்தாவது இடத்தில் உள்ளது.
ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே இலங்கை, பாகிஸ்தான், மேற்கிந்தியத் தீவுகள், பங்களாதேஷ், சிம்பாப்வே ஆகிய அணிகள் உள்ளன. இலங்கை அணி 93 புள்ளிக ளைப் பெற்றுள்ளது.






# இலங்கைக் கிரிக்கெட் ஊழலால் நிறைந்தது!

## ஐ.சி.சி. அதிர்ச்சி அறிக்கை

உலகிலேயே இலங்கை கிரிக்கெட் சபைதான் அதிக அளவில் ஊழல்கள் மலிந்த கிரிக்கெட் சபை என்று ஐ.சி.சி. தரமதிப்பீடு கூறுவதாக இலங்கையின் விளையாட்டுத்துறை அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ அதிர்ச்சித் தகவல் வெளியிட்டுள்ளார். இலங்கைக் கிரிக்கெட் சபை சூதாட்டம் முதல் பல்வேறு ஊழல்களில் சமீபத்தில் சிக்கியுள்ளது.
இது குறித்து அவர் தெரிவிக்கையில், "டுபாய் கூட்டத்தின் போது தன்னிடம் ஐ.சி.சி இந்த இரகசிய அறிக்கையை காண்பித்தது என்றும் இலங்கை கிரிக்கெட் சபை ஊழல் மிகுந்தது என்றும் ஐ.சி.சி. தரமதிப்பீடு செய்துள்ளதுடன் கிரிக்கெட் ஊழலில் இலங்கை கிரிக்கெட் சபை மிக மிக மோசமாகத் திகழ்கிறது என்று ஐ.சி.சி. மதிப்பிட்டுள்ளது. சூதாட்டத் தரகர்களுடன் இருக்கும் தொடர்பு மட்டும் பிரச்சினை அல்ல. உள்ளுர் போட்டிகளில் கூட நிழலுலகத்துடன் தொடர்பு கொண்டுள்ளது"- என்றார்.
2017ஆம் ஆண்டு 'லீக்' ஆட்டமொன்றில் இலங்கை அணியின் முன்னாள் வேகப்பந்து வீச்சாளர் தில்ஹாரா லொகு ஹெட்டிகே ஊழல் குற்றச்சாட்டில் நீக்கப்பட்டிருந்தார். அதனைத் தொடர்ந்து முன்னாள் இடது கை வேகப்பந்து வீச்சாளர் நுவான் சொய்ஸா 'ஆட்ட நிர்ணய சதி' குற்றச் சாட்டில் நீக்கப்பட்டார்.
இலங்கை முன்னாள் தலைமை அணித் தேர்வாளர் சனத் ஜெயசூரியா ஊழல் குற்றச் சாட்டுகள் தொடர்பான விசாரணைக்கு ஒத்துழைப்பதில்லை என்ற குற்றச்சாட்டும் எழுந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.
தவறு செய்தவர்கள் விவரங்களை அளித்து ஒப்புக் கொண்டால் ஐ.சி.சி. வீரர்களை மன்னிக்கத் தயாராக இருப்பதாகவும் அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.


# வேகங்களுக்கு ஓய்வு

இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் முக்கிய மூன்று வேகப்பந்து வீச்சாளர்களுக்கு ஓய்வு கொடுப்பதற்கு ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது.
இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் தொடர் தற்போது நடைபெற்று வருகிறது. தொடரின் இறுதி ஆட்டம் எதிர்வரும் மூன்றாம் திகதி ஆரம்பமாகவுள்ளது. அதைத் தொடர்ந்து ஒரு நாள் தொடர் நடைபெறவுள்ளது. ஒருநாள் தொடரில் ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர்களான ஸ்ராக், ஹசில்வூட், கம்மினஸ் மூவருக்கும் ஓய்வு கொடுக்க ஆஸ்திரேலிய கிரிக்கெட் சபை பரிசீலித்து வருகிறது. இங்கிலாந்தில் மே மாதம் 30ஆம் திகதியளவில் நடைபெறவுள்ள உலகக்கிண்ணத் தொடரைக் கருத்தில் கொண்டே அவர்களுக்கு ஓய்வு கொடுக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.



# பன்னாட்டு டெஸ்ட் தரப்படுத்தல் கோக்லி அசைக்க முடியாத இடம்

பன்னாட்டுக் கிரிக்கெட் சபை டெஸ்ட் ஆட்டங்களுக்கான தனது தரவரிசைப் பட்டியலைப் புதுப்பித்துள்ளது. இந்திய அணியின் தலைவர் விராட் கோக்லி துடுப்பாட்ட வீரர்களுக்கான தரப்படுத்தலில் தொடர்ந்தும் முதலிடத்தில் உள்ளார்.
நியூசிலாந்து-இலங்கை அணிகளுக்கு இடையிலான இரண்டாவது டெஸ்ட் ஆட்டம் மற்றும் இந்தியா - ஆஸ்திரேலியா அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் என்பன கடந்த ஞாயிற்றுக் கிழமை முடிவுக்கு வந்ததை அடுத்து இந்தத் தரப்படுத்தல் புதுப்பிக்கப்பட்டது. இந்திய அணியின் தலைவர் கோக்லி 931புள்ளிகளுடன் முதலிடத்தில் தொடர்கிறார். இறுதியாக வெளியான தரப்படுத்தலை விட தற்போது 3 புள்ளிகளை அவர் இழந்துள்ளார்.



நியூசிலாந்தின் அணித் தலைவர் வில்லியம்சன் இரண்டாவது இடத்தில் தொடர்கிறார். அவர் 897 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இறுதியாக வெளியான தரப்படுத்தலை விட தற்போது 18 புள்ளிகளை அவர் இழந்துள்ளார்.
ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவர் சிமித் 883 புள்ளிகளுடன் மூன்றாவது இடத்தில் உள்ளார். பந்தைத் திட்டமிட்டுச் சேதப்படுத்திய குற்றச் சாட்டில் சிக்கி ஓர் ஆண்டுக்குத் தடை பெற்ற சிமித் மேலும் பின்னடைவைச் சந்திக்க வாய்ப்புக்கள் உள்ளன. புஜாரா 834 புள்ளிகளுடன் நான்காவது இடத்தில் உள்ளார். இங்கிலாந்தின் அணித் தலைவர் ரூட் 807 புள்ளிகளுடன் ஐந்தாவது இடத்தில் உள்ளார்.
ஆறு முதல் பத்து வரையிலான இடங்களில் முறையே ஆஸ்திரேலிய வீரர் வோர்ணர், தென்னாபிரிக்க வீரர் எல்கர், நியூசிலாந்து அணியின் வீரர் நிக்கொல்ஸ், இலங்கை வீரர் கருணாரத்ன, பாகிஸ்தான் வீரர் அசார் அலி ஆகியோர் உள்ளனர்.
இதன்படி தரப்படுத்தலில் முதல் பத்து இடங்களுக்குள் உள்ள இலங்கை வீரராக கருணாரத்ன மட்டுமே உள்ளார். இவர்களை விட மத்தியூஸ் 13ஆவது இடத்தில் உள்ளார். இறுதியாக வெளியான தரப்படுத்தலுடன் ஒப்பிடுகையில் அவர் மூன்று இடங்கள் முன்னேறினார். சந்திமல் 15ஆவது இடத்திலும், குசல் மெண்டிஸ் 16ஆவது இடத்திலும், டிக்வெல்ல 47ஆவது இடத்திலும், றோசன் சில்வா 54ஆவது இடத்திலும், தனஞ்சய டி சில்வா 55ஆவது இடத்திலும், கௌசால் சில்வா 95ஆவது இடத்திலும், குசல் பெரேரா 99ஆவது இடத்திலும் உள்ளனர்.

**யாழ்ப்பாணத்தில் முதன்முறையாக 150 ஸ்டோல்கள் ஒரே நேரத்தில்**

# வீரசிங்கம் மண்டபம் - யாழ்ப்பாணம்

# 4 நாள்களுக்கு மட்டும்

## 2019 ஜனவரி 3 ஆம், 4 ஆம், 5 ஆம், 6 ஆம், திகதிகளில்

(வியாழன், வெள்ளி, சனி, ஞாயிறு)

நேரம் : மு.ப 10.00 – பி.ப 8.00 வரை (பகலுணவு நேர இடைவெளி இல்லை)

இறக்குமதி செய்யப்பட்ட எக்ஸ்குலுசிவ் டிசைனர்

# ஜுவலரி விற்பனை திருவிழா - 2019

கோல்ட் கவரிங், ஹைதரபாத் பேர்ல்ஸ், ஜெய்பூர் குண்டன், கிறிஸ்டல், அமெரிக்கன் டயமன்ட், கொரியன் ஸ்டோன் ஜுவலரிகளை இலங்கை பெண்களும் வாங்கலாம்.

## ரூபாய் 200/- மற்றும் 400/- மட்டுமே

உண்மையான ஏற்றுமதி பெறுமதி 1500/– முதல் 3000/– ஐ கொண்ட ஜுவலரிகளை நாம் உங்களுக்கு தருவது

## ரூபாய் 200/- மற்றும் 400/- மட்டுமே

**இந்த விளம்பரத்தில் அனைத்து டிசைன்களின் பெயர்களையும் குறிப்பிட முடியாத படியால் சிலவற்றை மட்டுமே குறிப்பிட்டுள்ளோம்.**

| | | | |
|---|---|---|---|
| ❖ கொரியன் ஸ்டோன் ஸ்டட்ஸ்....... | ரூ. 200/- மட்டுமே | ❖ கோல்ட் கவரிங் செயின்....................... | ரூ. 400/- மட்டுமே |
| ❖ கோல்ட் கவரிங் செயின் பென்டட்..... | ரூ. 200/- மட்டுமே | ❖ அவுஸ்திரேலியன் டயமன்ட் நெக்லஸ் செட்.................. | ரூ. 400/- மட்டுமே |
| ❖ அவுஸ்திரேலியன் டயமன்ட் பிங்கரிங்... | ரூ. 200/- மட்டுமே | ❖ கோல்ட் பிளேடட் வலயல் செட்.......................... | ரூ. 400/- மட்டுமே |
| ❖ வெஸ்டன் ஸ்டைல் இயரிங்............ | ரூ. 200/- மட்டுமே | ❖ கோல்ட் பிளேடட் செயின்................................ | ரூ. 400/- மட்டுமே |
| ❖ அமெரிக்கன் டயமன்ட் இயரிங்......... | ரூ. 200/- மட்டுமே | ❖ சில்வர் பிளேடட் கொலுசு ................................ | ரூ. 400/- மட்டுமே |
| ❖ கோல்ட் கவரிங் ஆண்கள் மோதிரம்.... | ரூ. 200/- மட்டுமே | ❖ அவுஸ்திரேலியன் டயமன்ட் பிரேஸ்லட்.......................... | ரூ. 400/- மட்டுமே |
| ❖ கொரியன் ஸ்டோன் சாரி பின்........... | ரூ. 200/- மட்டுமே | ❖ கோல்ட் கவரிங் பெண்கள் & ஆண்களுக்குரிய பிரேஸ்லட் | ரூ. 400/- மட்டுமே |

**விசேட சலுகை : திருமணம் மற்றும் பார்டிகளுக்கான விசேட ஜுவலரிகள்**

**ரூ. 600/- முதல் ரூ. 8,000/- வரையான விலைகளில் உள்ளன.**

**இடம் : வீரசிங்கம் மண்டபம், 10/1, கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.**

அனுமதி இலவசம் மொபைல் : 0765886866 பெண் விற்பனையாளர்கள் தேவை.


இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 02.01.2019 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.